பேராசிரியர் முனைவர் சபா. ஜெயராசா



# இலங்கையின் கல்வி வரலாறு

954
பரா

சேமமடு
சேமமடு பதிப்பகம்

# இலங்கையின் கல்வி வரலாறு

# EDUCATIONAL HISTORY OF SRI LANKA

பேராசிரியர் முனைவர் சபா. ஜெயராசா

சேமமடு

சேமமடு பதிப்பகம்

2008

## நூற் குறிப்பு

நூற் தலைப்பு : **இலங்கையின் கல்வி வரலாறு**
நூலாசிரியர் : முனைவர் சபா.ஜெயராசா
பதிப்பாளர் : சதபூ.பத்மசீலன்
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
பதிப்பாண்டு : சித்திரை 2039 (2008)
எழுத்து : 11 புள்ளி
பக்கங்கள் : 124
படிகள் : 1000
விலை : ரூ[redacted]
அச்சிடல் : சேமமடு பதிப்பகம்,
கொழும்பு -11.
தொ.பே: 0777 345 666.
வெளியீடு : சேமமடு பொத்தகசாலை,
யூஜி.50, பீப்பள்ஸ் பார்க்,
கொழும்பு -11.
தொ.பே: 011-2472362, 2321905.
மின்னஞ்சல் Chemamadu@yahoo.com
ISBN - NO : 978 - 955 -1857- 09 - 7

Title : **ELANKAEN KALVI VARALARU**
Author : Prof.Saba Jeyarasa
Edition : 2008
Price : Rs[redacted]
Published by : Chemamadu Poththakasalai
UG.50, People's Park,
Colombo -11.
T.P : 011-2472362, 2321905.
Printed by : Chemamadu Pathippakam,
Colombo -11.
T.P 0777 345 666.
E-mail : Chemamadu@yahoo.com


## முன்னீடு

சமூகத் தாக்கு விசைகளின்
தாழா இருளில் -
வாண்மைச் சூழேந்தும்
ஆசிரியச் சமூகத்துக்கு -

- நூலாசிரியர் -

# முன்னுரை

சூழ்நிலையுடன் பொருத்தப்பாடு கொள்ளல் வாழ்தலின் அடிப்படையாக அமைகிறது. எல்லா உயிர்களும் இத்தகைய பொருத்தப்பாட்டினை ஓரளவு பெறுதலின் வழியேதான் உலகில் வாழ்தல் இயலுகின்றது. ஆனால், மனிதர் தனது சூழ்நிலையுடன் ஏற்படுத்திக் கொள்ளும் வாழ்க்கைப் பொருத்தப்பாடு "உயர்நிலைப்பட்டது" ஆகும்.

சூழ்நிலைக் கூறுகளின் தன்மைகளுக்கேற்பத் தம்மை தகவமைத்துக் கொள்வதுடன் தமது தேவைகளுக்கேற்பவும் மனிதர் சூழ்நிலையினை மாற்றியமைத்தலே உயர்நிலைப் பொருத்தப்பாடு. இதற்கு "கல்வி" இன்றியமையாத கருவியாக விளங்குகின்றது.

எந்தவொரு சமூகத்திலும் கல்வி அந்தச் சமூகத்தின் பண்பட்ட நாகரிகத் தோற்றுவாயின் ஊற்றுமூலமாகின்றது. சமூக, பொருளாதார, அரசியல் பண்பாடு முதலான துறைகளில் கல்வி முக்கியமான விசைப்படுத்தலாகவும் பரிணமிக்கின்றது. தொடர்ந்து சமூகமாற்றம், சமூகவளர்ச்சி மற்றும் மனிதவளமேம்பாடு போன்றவற்றிலும் கல்வி பெரும் தாக்கம் செலுத்தத் தொடங்குகின்றது.

வரலாற்று ரீதியாக கல்விசார் பண்புகள் சமூக மட்டத்தில் மனித சிந்தனையில் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் பன்மடங்கானவை. கல்வியின்அமைப்பு, கல்வியின்நோக்கங்கள், பாடத்திட்டங்கள், கற்றல் - கற்பித்தல் முறைகள், கல்விநிருவாக முறைகள் யாவும் புதுத்தேவைகள், புதிய நிலைமைகள் போன்றவற்றுக்கேற்ப மாற்றம்





பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன. இவை மனித வாழ்வியலிலும் துரிதமான பல்வேறு மாற்றங்களை உருவாக்கியுள்ளன. எந்தவொரு நாட்டின் கல்வி வரலாற்றிலும் அந்தந்த நாட்டின் புதுத் தேவைகள் புதிய நிலைமைகள் என்பவற்றுக்கேற்ப பல்வேறு புத்தாக்கக் கட்டங்கள் தோன்றியுள்ளன. இவை கல்வி அமைப்பையே மாற்றியுள்ளன. இந்த மாற்றம் சமூக அசைவியகத்திலும் மாற்றங்களை உருவாக்கியுள்ளன. இதற்கு இலங்கை மட்டும் விதிவிலக்காக முடியாது.

இலங்கையில் காலனித்துவ ஆட்சி ஏறக்குறைய 450 ஆண்டுகள் நீடித்திருந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முறையே ஆட்சி அதிகாரம் செலுத்தினர். இவர்களது கல்விக்கொள்கைகள் காலனித்துவ ஆட்சியை நிலை நிறுத்தும் நோக்குடனேயே விரிவுபடுத்தப்பட்டன. காலனித்துவ ஆட்சியாளர்கள் அடக்குமுறைகளைப் பிரயோகித்தும் சுதேசிகளை வலுவிழக்கச் செய்தும் வந்தார்கள். மேலும், நீண்ட காலமாக இருந்து வந்த பௌத்த, இஸ்லாமிய, இந்துக்கல்வி மரபுகளை முற்றாகப் புறக்கணித்தும் பிரித்தாளும் தந்திரத்தின் அடிப்படையில் சிறுபான்மையினங்களின் ஆதரவைப் பெற்றும் ஆட்சியைச் செலுத்தி வந்தார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் வழங்கப்பட்ட பாட ஏற்பாடுகளின் மாறுபட்ட வடிவங்களை இலங்கையில் வழங்க முற்பட்டார்கள். காலனித்துவ ஆட்சியாளரால் வகுத்துக்கொடுக்கப்பட்ட எந்தவொரு கல்விக்கொள்கையும் இலங்கைக்குப் பரந்த அளவில் நேரடி நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்ற விமரிசனமும் உண்டு. இலங்கையில் காலனித்துவ ஆட்சியாளரின் கல்வி பின்வரும் அடிப்படைகளிலேயே இடம்பெற்று வந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. அவை:

- கல்வியை சமயம் பரப்பும் ஒரு கருவியாகக் கையாண்டனர்.
- கல்விப் பொறுப்பை ஏற்க முன்வராது அதனை சமய குழுக்களுக்கும் தனியாருக்கும் ஒப்படைத்தனர்.
- கல்வி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என விரும்பினர்.

- கல்வியை ஆட்சியாளர் மொழியிலே வழங்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டினர்.
- கல்வியை வழங்குவதில் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளித்தனர்.
- உயர்கல்வியை வழங்குவதில் தாமதப் போக்கினைக் காட்டி வந்தனர்.

இவ்வாறான அம்சங்களின் பாதிப்பே இன்றைய காலகட்டத்தின் பல்வேறு கல்விப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமைந்துவிட்டது. குறிப்பாக, காலனித்துவ ஆட்சியாளர்களின் கல்விக்கொள்கை இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தின. சமூக வர்க்கபேதங்களை உருவாக்கியது; நகரங்கள் கிராமங்கள் என்ற அடிப்படையில் கல்வி நிறுவனங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் மொழியை முதன்மையாகக் கொண்டு வேறுபடுத்தியது; கல்வி வாய்ப்புகளில் பிரதேச வேறுபாடுகளை தோற்றுவிக்க இடமளித்தது. அதாவது, காலனித்துவ ஆட்சியாளரால் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வியமைப்பு இலங்கையின் சமூக - பொருளாதார, சமூக - கலாசார அம்சங்களிலே சமத்துவமின்மையைத் தோற்றுவித்தன. அரசு, தனியார், மதக்குழுக்கள் ஆகியோரால் நடத்தப்பட்ட பாடசாலைகள் ஆங்கிலக் கல்விக்கு முதன்மை வழங்கி வந்தன.

ஆங்கிலக் கல்வியின் பயனை இலங்கையின் கிராமப்புற விவசாயிகள் அனுபவிப்பதற்குரிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இலங்கையில் ஆங்கிலம் கற்ற ஒரு உயர்வகுப்பினர் உருவாக்கப்பட்டதுடன், சகல விடயங்களிலும் அவர்களுக்கே சந்தர்ப்பமும் முன்னுரிமையும் வழங்கப்பட்டது. ஆக, ஒரு சிலருக்கு உயர்தரமான ஆங்கிலக்கல்வி; கிராமப்புற பாமர மக்களுக்கு தரத்தில் குறைந்த ஆரம்பக்கல்வி; இதுவே காலனித்துவக்காலக் கல்விக்கொள்கையாக அமைந்தது.

இவ்வாறான, சமூக வேறுபாட்டை ஏற்படுத்தக்கூடிய ஒரு கல்வியமைப்பு இலங்கைக்கு உகந்தது அல்ல என உணரப்படலாயிற்று. குறிப்பாக, 1931இல் டொனமூர் குழுவினர் இலங்கைக்கு சர்வசன வாக்குரிமையை வழங்கினர். இந்த சர்வசன வாக்குரிமை-





யைப் பெற்றுக்கொண்டதால் இலங்கையரின் அரசியற் பிரவேசம், சமூக நோக்கிலான விழிப்புணர்வு பாராளுமன்ற சனநாயக ஆட்சியில் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் என்றவாறு பல மாற்றங்கள் உண்டாயின.

இவ்வாறான மாற்றங்களுக்கு ஏற்ற ஒரு சமூகப் பின்னணியைக் கல்வியினூடாக ஏற்படுத்த வேண்டும் என்பதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளக்கூடிய சாதகமான சூழல் படிப்படியாக உருவாகி வந்தது. 1940களில் கல்வியை சனநாயகப்படுத்துதல் தொடர்பான பல கொள்கைகள் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக,

அ) இலவசக் கல்வியின் அறிமுகம்.

ஆ) தேசிய மொழிக்கல்வி மொழியாக்கப்படல்.

இ) பாடசாலைகள் யாவும் அரச பொறுப்பின் கீழ் கொண்டு வரப்படல்.

ஈ) கலைத்திட்ட மாற்றங்களினூடாகக் கல்வித்தரம் பேணுதல்.

இந்த அம்சங்கள் கல்வி வரலாற்றில் பல்வேறு புதிய போக்குகள் உருவாகக் காரணமாயிற்று. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு முதலான தளங்களில் "கல்வி" ஏற்படுத்தி வந்த மாற்றங்கள் விரிவானவை, வளமானவை. இதைவிட கல்வித்துறையில் அவ்வப்பொழுது ஏற்படுத்தப்பட்ட "சீர்திருத்தங்கள்", சமூக அசைவியக்கத்தில் ஏற்படுத்திய மாற்றங்களும் அதிகம் என்றே கூறலாம்.

இந்தப் பின்னணிகளை விரிவாகவும் நுணுக்கமாகவும் இறுக்கமாகவும் எடுத்தாராய்கிறது. ***"இலங்கையின் கல்வி வரலாறு"*** என்னும் இந்த நூல். இது வெறுமனே தகவல்களின் தொகுப்பு அல்ல. மாறாக, விமரிசன நோக்கு அனைத்தையும் ஊடுருவி உள்ளது. அதற்கான தர்க்கத்தை தன்னளவில் கட்டமைக்கிறது. வரலாறு எழுதுதலிலுள்ள மேட்டிமை அணுகல் முறையை விமரிசிக்கிறது. மாற்று வரலாற்றெழுதியலை நோக்கிக் கவனம் குவிக்கிறது. இதற்கான தெரிவும், தேர்வும் மற்றும் கருத்துநிலைத் தெளிவும் நுட்பமாக நூலில் வெளிப்பட்டுள்ளது.

தமிழில் ***"இலங்கையின் கல்வி வரலாறு"*** கட்டுரைகளாக ஆங்காங்கு உதிரிகளாகவே எழுதப்பட்டுள்ளன. இன்னும் முழுமையான வேறுபட்ட அணுகல் முறையுடன் கூடிய வரலாற்றெழுதியல் அறிமுகமாகவில்லை. இதனை இந்நூல் சாத்தியப்படுத்துகின்றது. இதுபோல் இன்னும் பல்வேறு நிலைப்பட்ட கல்வி வரலாறுகள் எழுதப்பட வேண்டும். அப்பொழுதுதான் "கல்வியை சனநாயகமயப்படுத்தும் சீர்திருத்தங்கள்" எமக்கு எந்தளவிற்கு வெற்றியளித்துள்ளன? அனைவருக்கும் சமசந்தர்ப்பமும் சமவாய்ப்பும் கிடைத்துள்ளதா? அனைவருக்கும் சமூகநீதியும் சமூகசமத்துவமும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளதா? போன்ற வினாக்களுக்கான விடைகளும் எமக்குக் கிடைக்கும்.

இலங்கையில் இன்று இருக்கின்ற கல்வியின் நிலையைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தால், நாட்டின் மிகப்பெரிய தோல்வி, சுதந்திர இலங்கையின் மாபெரும் தோல்வியே கல்வித்துறையில்தான் இருக்கிறது. இதனை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மொத்தமாகக் கல்வித்துறையில் என்ன சாதித்திருக்கிறோம் என்று பார்த்தால் சாதிக்காமல் விட்டுவிட்ட மிகமோசமான இமாலயத் தோல்விகள்தான் நம்கண் முன்னால் நிற்கின்றன. இதுதான் இன்றைக்கு இங்கே இருக்கின்ற கல்வியின் நிலை.

இந்தப் பின்னணியில் தான் பேரா.சபா.ஜெயராசா ***"இலங்கையின் கல்வி வரலாறு"*** என்னும் நூலை எமக்குத் தந்துள்ளார். இது நம்மைப் பற்றி நமக்கான கல்வி பற்றிய உரத்த சிந்தனைக்கான விமரிசனத்துக்கான தேடலுக்கான கூறுகளையும் களங்களையும் நமக்கு அடையாளப்படுத்துகின்றது.

இன்றைய உலகமயமாக்கல் கல்வித்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. நவகாலனித்துவச் சுரண்டலும், ஒடுக்குமுறையும் அடிமைத்தனமும் கல்வித்துறையுள் உள்நுழைந்துவிட்டன. சமகாலக் கல்விக்கொள்கை வளர்ச்சி என்பன உலகமயமாக்கலின் நலன்களுக்கு கீழ்ப்பட்டதாகவே அமுலாக்கப்படுகின்றன. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் தான் இன்று கல்விக்கொள்கையைத் தீர்மானிக்கின்றன. இந்த நிலைமை எத்தகைய மாற்றங்களை கல்வித்துறையில் ஏற்படுத்தப் போகிறது என்பது குறித்து நாம் விழிப்புடன் உரத்துச்சிந்திக்க வேண்டும். இதற்குப் பொருத்தமான விமரிசனக் கருவிகளை இந்நூல் தரவேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு நாம் "மாற்றுக் கல்வி வரலாறு" நோக்கி நாம் பயணப்பட வேண்டும், சிந்திக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமும் கூட.





கல்வி எம்மை சுயசிந்தனை சுயதேடல் மற்றும் விமரிசன நோக்கு போன்ற விழுமியங்களால் செயற்படுவதை தூண்ட வேண்டும். எந்தவொரு நூலையும் அத்தகு தூண்டல்சார் கண்ணோட்டத்தில் வாசிக்க வேண்டும். இதற்கேற்ப பொருள்கோடல் செய்ய வேண்டும். மாற்று வரலாறுகளை எழுத வேண்டும். இந்நூல் இதற்கான சாத்தியப்பாடுகளை கொண்டுள்ளது.

**தெ.மதுசூதனன்**

ஆசிரியர் - அகவிழி

# நூலாசிரியர் உரை

இலங்கையின் கல்வியியலிலும் கலைத்திட்டத்திலும் வரலாற்றின் முக்கியத்துவம் மீள்எழுச்சிக் கொள்ளத் தொடங்கியுள்ள வேளை இந்நூலாக்கம் வெளிவருதல் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு நூலாக்கத்தின் தேவையை "ஓலை", "அகவிழி", மற்றும் "கூடம்" முதலாம் சஞ்சிகைகளின் ஆசிரியர் தெ.மதுசூதனன் என்னிடம் பலமுறை வேண்டிக்கொண்டார். அதேவேளை வெளியீட்டாளர் பூ.பத்மசீலன் அவர்களும் இலங்கையின் கல்வி வரலாறு தொடர்பாக அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நூலை ஆக்கித்தருமாறு அன்புடன் வேண்டிக்கொண்டார். கொழும்புப் பல்கலைக்கழகத்துக் கல்வியிற் பீடாதிபதியும் நண்பருமாகிய பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களும் இவ்வாறான ஒரு நூலாக்கத்தின் தேவையை வலியுறுத்தி உற்சாகம் தந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தேசியகல்வி நிறுவகம் ஆகியவற்றிலே பயிலும் எமது மாணவர்கள் இலங்கையின் கல்வி வரலாறு தொடர்பான திறனாய்வுப் பாங்கிலான ஒரு நூலின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வலியுறுத்தினர். அவர்களின் அன்பான வேண்டுகோளும் இந்நூலாக்கத்தை மேற்கொள்வதற்கு விசையூட்டியது.

கல்வி வரலாற்றுப் பதிவுகளைத் திறனாய்வுடன் நோக்குதல் இந்நூலின் நிறைபொருளாகவுள்ளது.

- *சபா.ஜெயராசா*



# பதிப்புரை

சேமமடு பதிப்பகம் மிகவும் காத்திரமான நூல்களை வெளியிட்டு வரும் ஒரு நிறுவனமாக திகழ்கின்றது. குறுகிய காலத்தில் எட்டு நூல்களை வெளியிட்டுள்ளது. இதற்கு நமக்கு உறுதுணையாக இருப்பவர்களுள் பேராசிரியர் சபா.ஜெயராசா முதன்மையானவர். நாம் ஏலவே எமது பதிப்பகம் மூலம் இவரின் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளோம். இவரின் நான்காவது படைப்பாக ***"இலங்கையின் கல்வி வரலாறு"*** என்னும் நூலை வெளிக்கொணர்ந்துள்ளோம்.

பேராசிரியர் சபா.ஜெயராசாவின் நூல்களுக்கு கல்வித்துறையில் தனியான இடம் உண்டு. இத்துறைசார்ந்த விருத்தியில் பல புதிய துறைகளை தமிழில் அறிமுகம் செய்கிறார். இதற்கு, சேமமடு பதிப்பக நிறுவனம் பேராசிரியருடன் இணைந்து செயற்பட சந்தர்ப்பம் அமைந்தமைக்காக நாம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன், எமது வெளியீடுகளுக்கு தொடர் ஆதரவை வழங்கிவரும் அதிபர், ஆசிரிய, மாணவ நண்பர்களுக்கும் சிறப்பாக பங்காற்றும் மதுசூதனார்க்கும் அகவிழி குழுமத்தினருக்கும் மற்றும் சேமமடு பதிப்பக ஆசிரியர் குழாமிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**பதிப்பாளர்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கையின் கல்விச் சுவடுகள் | 15 |
| 2. | மரபுவழித் தமிழர் கல்விமுறை | 15 |
| 3. | மரபு வழி இஸ்லாமியர் கல்விமுறை | 20 |
| 4. | மரபு வழிச் சிங்களவர் கல்வி முறை | 24 |
| 5. | போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் காலக் கல்வி | 29 |
| 6. | 1943ஆம் ஆண்டுக் கல்விச் சிறப்புக் குழுவின் விதப்புரைகள் | 39 |
| 7. | குடியேற்றவாதக் கல்வியின் விளைவுகள் | 43 |
| 8. | அரசியற் சுதந்திரமும் இலங்கையின் கல்வி வளர்ச்சியும் | 49 |
| 9. | 1972ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்கள் | 53 |
| 10. | 1997ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்கள் | 58 |
| 11. | இலங்கையின் கல்விச் சட்டங்கள் | 61 |
| 12. | அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தமும் கல்வியும் | 68 |
| 13. | பெருந்தோட்டத்துறைக் கல்வி வரலாறு | 71 |
| 14. | தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி | 75 |
| 15. | அழகியற் கல்வி வரலாறு | 82 |
| 16. | ஆசிரியர் கல்வி வரலாறு | 89 |
| 17. | ஆசிரிய வாண்மையின் அதிர்வுகள் | 97 |
| 18. | உயர்கல்வி வளர்ச்சி | 105 |
| 19. | கல்வியியல் வரலாறும் திறனாய்வும் | 118 |
| 20. | உசாத்துணை | 123 |

# இலங்கையின் கல்விச் சுவடுகள் : மரபுவழித் தமிழர் கல்விமுறை

பொருண்மியத் தளத்துடனும் அதனை அடியொற்றிய சமூக வாழ்க்கைக் கோலங்களோடும் மரபுவழித் தமிழர் கல்விமுறைமை நேரடியான இணைப்புக் கொண்டிருந்தது. பயிர்ச்செய்கையுடன் இணைந்த நிலவுரிமைவலு, கிராமிய தொழிற்பிரிவுடன் இணைந்த சாதிய முறைமை, குடிசைக் கைத்தொழில்களும் தொன்மையான தரைவழி வர்த்தகம் மற்றும் கடல்வழி வர்த்தகங்களாற் கிடைக்கப்பெற்ற உபரிநிலை வருமானம், அரசுகளின் வளர்ச்சியும் தளர்ச்சியும் என்ற பல்வேறு பரிமாணங்களுடன் மரபுவழித் தமிழர் கல்வி முறைமை இணைந்திருந்தது.

சமூக வளர்ச்சியின்போது இருநிலை முனைவுப்பாடுகள் (Polorisation) தோற்றம்பெற சமூக அடுக்கமைப்பில் உயர்ந்தோருக்கென நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வரன்முறையான கல்விக்கட்டமைப்பு இடம்பெறலாயிற்று. சமூக அடுக்கின் தாழ்நிலையில் வாழ்ந்தோருக்குரிய அறிவுக்கையளிப்பு வரன்முறைசாரா வகையில்

(Non Formal) பெருமளவு இடம்பெறலாயிற்று. நாட்டார் கலைகள், கிராமிய வழிபாட்டுமுறை, சடங்குகள் முதலியவற்றின் வழியான அறிவுக்கையளிப்பு அடிநிலை மாந்தர்களிடத்துக் காணப்பட்டது. (ஜெயராசா,சபா,2000)

பயிர்ச்செய்கைச் சமூகத்தின் இயல்புகளைப் பிரதிபலிக்குமாறு வரன்முறையான கல்விக்கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தது. சமூக நடைமுறைகளை ஏற்று மறுப்பின்றிப் பின்பற்றி வாழச்செய்யவும், இசைவுபட வைத்தலும் மரபுவழித தமிழர் கல்வியின் சமூக நோக்கங்களாக அமைந்திருந்தன. பயிர்செய்கையே ஏனைய தொழில்களிலும் மேலானது என்ற கருத்தேற்றம் முன்னெடுக்கப்பட்டது. உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்பது எடுத்துக்கூறப்பட்டது. குலத்தொழில்களை விட்டு விலகாது தொழிற்பட வைக்கும் சமூகக் கட்டமைப்பிற்கென கல்வியானது சமூக அசைவியத்தை ஏற்படுத்தாது, சமூகத்தைக் கட்டிக்காக்கும் கருவியாகவே இயக்கமுற்றது.

இந்து மரபில் ஆழ வேரூன்றியிருந்த ஊழ்வினைக் கோட்பாடு கல்விவழியாக முன்னெடுக்கப்பட்ட தலையாய கருத்தியலாக அமைந்தது. சிங்கள மக்களின் கல்வியிலும் இக்கோட்பாடு ஆழ வேரூன்றியிருந்தமையைக் காணக்கூடியதாகவுள்ளது. (Newton Gunasinghe, (1990), p.32) வரன்முறையான கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் கல்வியை ஓர் அருவப் (Abstract) பொருளாக முன்னெடுத்தன.

ஊழ்வினை என்ற அருவ எண்ணக்கருவும் கல்வி என்ற அருவ எண்ணக்கருவும் சங்கமித்த நிலையில் கல்விப்பேறு மேலானதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. பொருட்செல்வம் அழியுமென்றும் கல்விச் செல்வம் நிலைபேறு கொண்டதென்றும் எழுபிறப்பும் அது தொடர்ந்து செல்லும் எனவும், ஊனக் கண்ணிலும் ஞானக்கண்ணே சிறப்புடையதெனவும், கற்றவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு எனவும் வலியுறுத்தப்பட்டன. இக்கருத்து தென்ஆசியப் பண்பாட்டில் பரவலாக இழையோடியிருந்தமை நினைவுக்குரியது.

தமிழர் மரபில் வரன்முறையான கல்வி ஒழுங்கமைப்புக்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. திண்ணைப் பள்ளிக்கூடங்கள்
2. குருகுலப் பள்ளிக்கூடங்கள் அல்லது வாணர் இல்லக்கல்வி





3. மடாலயங்கள்
4. சங்கம்

அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு, சூழல்அறிவு முதலியவற்றுடன் திண்ணைப் பள்ளிக்கூடக்கல்வி ஆரம்பமாகியது. மாணவரது அறிவு வளர்ச்சிக்கேற்றவாறு கலைத்திட்டம் வளர்ந்து சென்றது. இலக்கணம், இலக்கியம், தருக்கம், கணிதம், உறுபொருள்அறிதல், செய்யுள்புனைதல் முதலியவை திண்ணைப்பள்ளிக்கூடங்களிலே கற்பிக்கப்பட்டன.

குருகுலப்பள்ளிக் கூடங்கள் இருவகைப்பட்டன. இசை, நடனம், நாகசுரம் முதலிய கவின்கலைகளைக் கற்கும் குருகுலங்கள் ஒரு பிரிவில் அடங்கும். இவற்றைவிட கவின்கலை சாராத் தொழில் முறைசார்ந்த குருகுலங்களும் காணப்பட்டன. மருத்துவம், உலோகவேலை, மரவேலை முதலானவற்றை அறிவாற்றலும் செயற்றிறனும் மிக்க ஆசானின் இல்லத்தில் வாழ்ந்து கற்றுக்கொள்ளும் ஒழுங்கமைப்பும் காணப்பட்டது. குருகுலக்கல்வி என்பது செயல்முறையுடன் இணைந்த கல்வியாயிற்று. ஆசிரியர் செய்வதைப் பார்த்துக் கற்றல் (Watch and Learn) அல்லது பார்த்துச்செய்தல் அங்கே சிறப்பிடம் பெற்றிருந்தது. குறித்த திறன்களைக் கற்றல் மட்டுமின்றி ஆசிரியரின் வீட்டுவேலைகளைச் செய்யும் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. நீர்இறைத்தல், இல்லம் சுத்தம் செய்தல், வீட்டிலுள்ள பசுவைப் பராமரித்தல், சமையலுக்கு விறகுவெட்டி வருதல், சமைத்தல் முதலாம் வேலைகளையும் செய்து பழக வேண்டியிருந்தது. குறித்த துறையில் ஆற்றல் பெற்றமைக்குச் சான்றாக தைப்பூசநாளில் ஆசானால் மாணவருக்கு மோதிரம் அணிவிக்கப்படும் (தகவல் : ந. சுப்பையா முதியவர் இணுவில்) இன்றும் தவில், நாகசுரம் போன்ற கலைகள் இணுவில் கிராமத்தில் குருகுல வழியாகவே கற்பிக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.

மடாலயங்கள் உயர்கல்வி நிலையங்களாக விளங்கின. சமய ஆய்வுகளே இங்கு சிறப்பிடம் பெற்றிருந்தன. திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முதலாம் பெரும் கோயில்களுக்கு அணிந்ததாக இருந்த பெரும் மடங்களில் உயர்கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன. குடியேற்றவாத ஆட்சியில் சைவஆலயங்கள் அழிக்கப்பட்ட பொழுது மடங்களும் அழிவுற்றன. சமய மறுமலர்ச்சிக் காலத்தில் மடங்கள் மீளக்கட்டப்பட்டாலும், அவை துறவிகள் தங்கு-

வதற்கும் தவம் செய்வதற்குமுரிய இடங்களாக அமைந்துவிட்டன.

அரசர்களது அரவணைப்பில் உயர்கல்விப் பீடங்களாகிய சங்கங்கள் இயங்கின. யாழ்ப்பாணத்து அரசர் காலத்தில் இயங்கிய தமிழ்ச் சங்கத்தோடு அந்த அமைப்பின் பணி முடிவுக்கு வந்தது. நூல்களை ஆக்குதலும், ஆக்கிய நூல்களை ஆய்ந்து ஏற்றுக்கொள்ளலும், சங்கத்தின் சிறப்பார்ந்த பணிகளாயின. இலக்கண, இலக்கிய நூல்கள் மட்டுமன்றி பரராசசேகரம் (மருத்துவநூல்) செகராசசேகரம் (சோதிடநூல்) முதலாம் நூல்களும் யாழ்ப்பாணத்து நல்லூர் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றம் பெற்றன.

சமூக அடுக்கமைப்பின் அடிநிலை மாந்தர்க்குக் கல்வி வழங்கும் ஒழுங்கமைப்புகளில் "நிலாப் பள்ளிகள்" சிறப்பிடம் பெற்றிருந்தன. மிக அண்மைக்காலம் வரை நிலாப்பள்ளிகள் இயங்கி வந்தமைக்கு இணுவில் மற்றும் அளவெட்டிக் கிராமங்களில் இயங்கியவை சான்றாகவுள்ளன. நிலாப்பள்ளிகள் இரண்டு வகைப்படும். ஒன்று கிராமத்துமக்கள் அறிவிலுயர்ந்த ஆசானின் வீட்டுமுற்றத்திலே இரவிற் கூடி புராணக்கதைகளையும் உபகதைகளையும் அவர் உரைக்கக் கேட்டு அறிந்துகொள்ளல். மற்றயவகை நிலாப்பள்ளிகள் உடலாடு நிலாப்பள்ளிகள் எனப்பட்டன. கிராமத்து இளைஞர்கள் மற்போரறிந்த "வாத்தியார்" வீட்டு முற்றத்திலே கூடி, சீனடி, சிலம்படி, முதலாம் உடலாடு கலைகளைக் கற்றுக்கொண்டனர். இவ்வாறு கற்றுக்கொண்டவற்றைக் கிராமத்துக் கோயில்களில் நிகழும் பொங்கல் நாளில் அரங்கேற்றுவர்.

கிராமத்துப் பெண் கல்வியில் "மரநிழற்பள்ளிகள்" சிறப்பிடம் பெற்றிருந்தன. பகற்பொழுதில் வயல்களிலும், வீடுகளிலும் வேலை செய்த பெண்கள் மாலைவேளைகளில் வீடுகளுக்கு அண்மையிலுள்ள பெரிய மரங்களின் கீழ் அமர்ந்து மூத்தபெண்ணிடம் அறிவையும் அனுபவங்களையும் உள்வாங்கல் இடம்பெறும். பாய் இழைத்தல், பன்னவேலை பழகுதல் முதலியவற்றைக் கைகளால் செய்து கொண்டு, செய்யுள்களையும் வாய்ப்பாடுகளையும் வாயாற்பாடிப் பழகிக்கொள்வர். கிராமங்களிலே கற்றறிந்த முதுபெண்கள் "நூலாச்சியர்" என அழைக்கப்பட்டனர்.

கிராமங்களின் அறிவுக்கையளிப்பிலும் அனுபவக் கையளிப்பிலும் "மருத்துவிச்சியர்" சிறப்பார்ந்தப் பங்கை வகித்தனர். பெண்களுக்குரிய உளவளத்துணை என்ற சீர்மியம் செய்து வைத்தலிலும்,





குழந்தை வளர்ப்புத் தொடர்பான அனுபவங்களைக் கையளிப்பதிலும், நோய்களுக்குரிய குடிநீர் தயாரிக்கும் அறிவைக் கற்றுக்கொடுப்பதிலும் அவர்களின் வகிபாகம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மரபுவழித் தமிழர்களின் தொழில்நுட்ப அறிவில் கப்பல் கட்டும் தொழில்நுட்பம் மேலோங்கியிருந்தது. அவ்வாறே நெசவுத்தொழில் நுட்பமும் சிறப்புப் பெற்றிருந்தது.

அரசுகளின் வளர்ச்சி தமிழர் தம் கல்வியில் சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கினைப் பல நிலைகளிலே தோற்றுவித்தது. சம்ஸ்கிருத அறிவின்றி உயர்கல்வியைத் தொடரமுடியாத நிலையும் ஏற்பட்டது. உயர்ந்தோர் மயப்பாட்டு நிகழ்ந்த கல்விச் செயற்பாடுகளோடு சம்ஸ்கிருத இணைப்பு மேலோங்கியிருந்தது. இந்நிலையில் உயர்ந்தோர் மாட்டு ஏட்டுக்கல்வியும், சமூக நிரலிலே தாழ்ந்தோர் மாட்டு செயல்வழிக்கல்வியும் என்ற இருமை நிரல் தமிழர்களது மரபுவழிக் கல்வியிலே தோற்றம் பெற்றது.

தமிழர்களின் கல்வி மரபில் ஆசிரியத்துவத்திலும் முனைவுப்பாடு காணப்பட்டது. சமூக உயர்நிலைக்குரிய ஆசிரியத்துவம் சம்ஸ்கிருத மயப்பாட்டுடன் இணைந்திருந்தது. அதாவது, சம்ஸ்கிருத அறிவும் வைதிக சமயநெறிப்பாடும் கொண்டதாகவும் அமைந்திருந்தது. அடிநிலை மக்களுக்குரிய ஆசிரியத்துவம் அதனிலும் வேறுபாடு கொண்டதாக காணப்பட்டது. குரு, உபாத்தியாயர், சட்டம்பியார் என்றவாறு உயர்நிலை ஆசிரியத்துவம் அழைக்கப்பட்டது. மூப்பனார், வீரகத்தியார், கண்ணாட்டியார் என அடிநிலை மாந்தர்க்குரிய ஆசிரியர் அழைக்கப்பட்டனர்.

✠✠✠

# மரபுவழி இஸ்லாமியர் கல்விமுறை

இஸ்லாமியக் கல்விமுறை முற்றுமுழுதாக இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. படைப்புக்களில் அறிவைத் தேடும்திறன் மனிதருக்கு உண்டு என்பது அங்கே வலியுறுத்தப்படுகின்றது. திருக்குர்ஆனை வாசித்தலும் விளங்குதலும் அதற்கு அமைவாக வாழ்தலும் இஸ்லாமியக் கல்வியில் ஆழ்ந்து வலியுறுத்தப்படுகின்றன. வாழ்க்கைக்கும் இஸ்லாம் மார்க்க வழிக்கும் பயன்படாத கல்வியைக் கற்றல் பயனற்ற செயற்பாடாகக் கூறப்படுகின்றது. இஸ்லாமும் கல்வியும் சீரான வாழ்க்கையும் ஒன்றிணைந்து ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

ஆரம்பக்கல்வி பள்ளிவாசல்களுடன் இணைக்கப்பட்டிருந்தது. கல்விச் செயற்பாடு குர்ஆனுடன் ஆரம்பிப்பதால் கற்கும் இடம் புனிதமாயிருக்க வேண்டுமெனக் கொள்ளப்பட்டது. ஆரம்பப் பாடசாலைகள் "மக்தப்" என அழைக்கப்பட்டன. குர்ஆன் ஓதுதலும், எழுத்துக்கற்றலும், இஸ்லாமியர்களது சமயநெறி முறைகளைத் தவறாது கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நல்லாற்றுப்படுத்தலும் அடிப்படைக் கணிதமும் ஆரம்பப் பாடசாலைக் கலைத்திட்டத்திலே சிறப்புப் பெற்றிருந்தன. இஸ்லாமியர்களுக்குரிய அடிப்படையான அறிவையும் திறன்களையும் வழங்கும் நிறுவனமாக "மக்தப்" ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மாணவரின் வரவு ஒழுங்கும் அங்கே கண்காணிக்கப்பட்டது. "மக்தப்" வழங்கிய அறிவுத்தளம் இஸ்லாம் தழுவிய மேற்கல்வியைத் தொடர்வதற்குப் போதுமானதாக அமைந்தது. பள்ளிவாசலுடன் தொடர்புடையதாக மக்தப் இருந்தமை "மக்தப்" ஒழுங்கமைப்புக்குச் சிறப்பைக் கொடுத்தது.

இஸ்லாம்மத அடிப்படையில் மேற்படிப்பை வழங்கும் நிறுவனங்களாக "மத்ரசாக்கள்" அமைந்தன. இதன் கலைத்திட்டத்தில், குர்ஆனை விரிவாக விளங்கிக்கொள்ளல் இஸ்லாமிய சட்டங்கள், நாயக வாக்கியங்கள், இலக்கணம், இலக்கியம், தருக்கம், சமய மெய்யியல் முதலியவை கற்பிக்கப்பட்டன.

பெரும்பாலும் வணிகநோக்குடன் இலங்கைக்கு வந்த இஸ்லாமியர் இந்நாட்டின் நகரம் மற்றும் கிராமம் என்றவாறு விரவிப்பரந்திருந்தனர். தாம் வாழுமிடமெங்கும் வழிபாட்டுக்குரிய பள்ளிகளையும் அவற்றோடிணைந்த நிலையங்களையும் ஒழுங்கமைத்தனர்.

தமது சூழலில் உள்ள ஏனைய மக்களுடன் இசைந்து வாழும் திறனுடையவர்களாயிருந்தவேளை தமது சமய மரபுகளை வழுவாது கடைப்பிடித்து வந்தனர். ஐரோப்பியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே முஸ்லீம் வர்த்தகர் இந்நாட்டுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். பக்தாத் நகரையும் இலங்கையையும் அவர்கள் வர்த்தகத் தொடர்புகளால் இணைத்தனர். இலங்கை அரசர்களுக்கு வேண்டிய அயல்நாட்டுப் பொருள்களை அவர்கள் கடல்வழியாக எடுத்து வந்து வழங்கியமையால் அரசர்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தனர். இதனால் வர்த்தகம் தொடர்பான அறிகையை (Cognition) இலங்கை மக்களுக்கு வழங்குவதில் இஸ்லாமியரின் பங்கு சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது.

இஸ்லாமியர்களின் பரவலோடு அறபுமொழியின் செல்வாக்கு இலங்கையிலே இடம்பெறலாயிற்று. ஒப்பீட்டளவில் சிங்கள மொழியைக் காட்டிலும் தமிழ்மொழியில் அறபுமொழியின் செல்வாக்குகள் கூடுதலாக இடம்பெற்றன.

"முஸ்லிம் தமிழ்" என்ற கிளைமொழி வடிவம் இஸ்லாமியர் தனி இனக்குழுமமாக வளர்ந்தமையுடன் இணைந்த தோற்றப்பாடா-யிற்று. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமியர்களிடத்து முஸ்லிம் தமிழ் விரைந்து வளர்ந்தது. முஸ்லிம் தமிழ் என்பது எழுத்து நிலையில் தமிழ் வரிவிலும் எழுதப்பட்டது. அதேவேளை, அறபு வரிவடிவில் எழுதப்பட்ட முஸ்லிம் தமிழ் "அறபுத் தமிழ்" என அழைக்கப்படலாயிற்று.

இலங்கையில் இஸ்லாமியர்களின் பரவலோடும் அவர்களிடத்து உயர்ச்சிபெறத் தொடங்கிய தமிழ்க்கல்வி வளர்ச்சியோடும் இஸ்லா-மியத் தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெறலாயின. தமிழ் யாப்பு மரபைப் பின்பற்றி இஸ்லாத்தின் இயல்புகளை விளக்கும் செய்யுள் ஆக்கங்கள் தோற்றம்பெற்றன. நாட்டார் மரபுகளை அடியொற்றிய செய்யுள்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே இடம்-பெற்றன.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் உரைநடை ஆக்கங்களும் வளர்ச்சி பெறத்தொடங்கின. இவற்றால் தமிழ்மொழி பன்மை இயல்-புகளைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்லாமியர்களின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இஸ்லாம் மதக்கல்வியோடு புதிய வகைப் பாடசாலைகளின் தேவையையும் இஸ்லாமியர்கள் அறிந்துகொண்டமையால் 1891ஆம் ஆண்டு கண்டி முஸ்லிம் ஆண்-கள் பாடசாலை தோற்றம் பெற்றது. அதனைத் தொடர்ந்து முஸ்லிம் பாடசாலைகள் வளர்ச்சியுறலாயின.

அத்துடன், அவர்கள் பிற தனியார் பாடசாலைகளிலும் அரசாங்-கப் பாடசாலைகளிலும் கற்று தமது கல்வியை மேம்படுத்தி வரு-கின்றவேளை தமது சமயக் கல்வியை இணைத்துக் கற்று வருகின்-றனர். கன்னங்கராவின் கல்விச்சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொ-டர்ந்து முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்குமென தனித்தனியாக ஆசிரியர் கலாசாலைகள் தோற்றம் பெற்றமை இஸ்லாம் மதத்தின் தனித்துவத்தை மீளவலியுறுத்துவதாக அமைந்தது.

1972ஆம் ஆண்டுக் கல்விச்சீர்திருத்தங்களைத் தொடர்ந்து தமிழ்ப் பாடநூல்களில் இஸ்லாமிய பண்பாடு தொடர்பான ஆக்கங்-





கள் இடம்பெற்று வருவதால், ஏனைய மாணவர்களும் அவற்றை அறிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது.

தமது சமய விழுமியங்களை இறுகப்பற்றி நின்றவாறே இஸ்லாமியர்கள் புதிய கல்விச் செயற்பாடுகளிற் பங்குகொண்டு வருகின்றனர்.

✠✠✠

# மரபுவழிச் சிங்களவர் கல்விமுறை

நிலவுரிமை முறைமை, பயிர்ச்செய்கை மற்றும் கிராமியத் தன்னிறைவுத் தொழிற்பாடுகள், பண்டமாற்றுப் பொருண்மிய நடவடிக்கைகள், வாழ்வுடன் தொடர்புடைய கிராமியக் கைத்தொழில்கள், தொழில்களுடன் இணைந்த சாதிய அமைப்பு நிருவாகத்தை நெறிப்படுத்தும் கம்சபாக்கள், மக்கள் வாழ்வுடன் இணைந்த பௌத்தமத நடவடிக்கைகள், இவை அனைத்தையும் தொகுத்து நிற்கும் அரசு என்பவற்றுடன் மரபு வழி சிங்களக்கல்வி முறைமை ஒன்றிணைந்திருந்தது.

சிங்கள மக்களின் வரன்முறையான கல்வி பௌத்தமதத்துடன் நேரடியாக இணைந்திருந்தது. இதனால் பிக்குமார் கல்விக்கையளிப்பில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர். இவை தவிர தொழில் முறைக்கல்வி மூத்தோர் வழி இளைஞர்களுக்குக் கையளிக்கப்பட்டது. இரும்பு வேலை, மரவேலை, மட்பாண்ட வேலை நெசவுவேலை முதலியவை இவ்வாறான செயற்பாடுகளுக்கு எடுத்துக்காட்டுக்களாக





அமையும். மருத்துவக்கல்வி, சோதிடக்கல்வி முதலியனவும் அத்துறைகளிலே புலமைமிக்க மூத்தோர் வழியாக அக்குடும்பத்திலுள்ள இளைஞர்களுக்குக் கையளிக்கப்பட்டன. இவைதவிர வரன்முறை சாராக்கல்வியில் கிராமியப் பாடலிசைப்போர், கூத்துக்களை ஆற்றுகை செய்வோர், முதலியோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். இந்நிலையில் சிங்கள மக்களின் கல்வி பன்முகப் பாங்கானதாய், பிரதேச வேறுபாடுகளைக் கொண்டதாய் அந்தஸ்து வேறுபாடுகளைக் கொண்டதாய் அமைந்திருந்தது.

பயிர்ச்செய்கைப் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவும், அரச விழுமியங்களைக் கட்டிக்காப்பதாகவும் வரன்முறையான கல்வி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. பயிர்செய்கையாளரும், கைவினையாளரும் அரசனுக்காகத் தொழில்புரிந்தனர். (L.H.Mettananda, 2006,p4). சிங்கள மக்களின் வரன்முறையான கல்வியின் பிறிதொரு பரிமாணம் தொன்மையான பிராமணக்கல்வி முறையின் செல்வாக்காகும். அரச அவைகளில் பிராமணர் கற்பித்தலை மேற்கொண்டமைக்குச் சான்றுகள் உள்ளன. மகாஜன பௌத்த வழிபாட்டு முறைகளிலும், சடங்குகளிலும் பிராமண இறை அறிகை முறைமையின் செல்வாக்குகள் உள்ளன. சமஸ்கிருத மொழிக் கலைத்திட்டத்தில், இடம்பெற்றிருந்த உள்ளடக்கம் பிராமணக்கல்வி முறையின் செல்வாக்கை நேரடியாகத் தெறித்துக்காட்டியது.

பௌத்தமதக் கல்வியில் அறியாமையே துன்பத்துக்குக் காரணம் என விளக்கப்படுகின்றது. அறியாமை ஊழ்வினையுடன் ஒன்றிணைந்து, வினைப்பாடு மற்றும் எதிர்வினைப்பாடு என்பவற்றுடன் ஊழ்வினை தொடர்புடையது. துன்பமும் துன்பத்திலிருந்து விடுபடலும் பௌத்தமதக் கல்வியிற் சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றன. சரியான நம்பிக்கை சரியான எண்ணங்கள் சரியான பேச்சு, சரியான நடத்தை, சரியான வாழ்க்கைமுறை, சரியான தொடர் செயல்கள், சரியான சிந்தனை, சரியான தியானம் முதலியவற்றின் வழியாக துன்பத்திலிருந்து விடுபட முடியும்.

"பௌத்த" என்பது ஞான ஒளிப்பேறு ஆகும். பௌத்த நெறியைப் பின்பற்றுவோர் பௌத்தத்தில் நான் சரணடைகின்றேன், அல்லது அடைக்கலம் புகுகின்றேன், தர்மத்தில் நான் சரணடைகின்றேன், சங்கத்தில் நான் சரணடைகின்றேன் என்றவாறு அடைக்கலம் புகுந்து ஒழுகவேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. பௌத்த

நெறியைத் தழுவுவோர் ஐந்துவகை ஒழுக்கங்களைப் பின்பற்றல் வேண்டும். அவை, உயிர்க்கொலை செய்யாமை, களவு மேற்கொள்ளாமை, பாலியல்நெறி பிறழாமை, பொய் கூறாமை, கள்ளுண்ணாமை என்பனவாகும். ஒரு பௌத்த துறவியாக வருபவர் இவற்றுடன் மேலும் இரு ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும். அவை தவிர்க்கப்பட்ட நேரத்தில் சாப்பிடாதிருத்தல் மற்றும் இசை, நடனம் முதலியவற்றில் ஈடுபடாதிருத்தலும், ஆபரணங்கள் அலங்காரங்கள் முதலியவற்றைப் புனையாதிருத்தலுமாகும்.

பௌத்த பிக்குகளை ஆசிரியர்களாகக் கொண்ட பன்சாலைக் கல்வி முறைமை கிராமங்களிலே நிலைபேறு கொண்டிருந்தது. கற்றலும் வழிபாடும் ஒருங்கே இணைக்கப்பட்டிருந்தன. (பன்சலக்கல்வி முறைமை பற்றிய விளக்கங்களை ஆனந்தகுமாரசாமி அவர்கள் "மத்திய கால சிங்களக் கலை" என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்) சிறாருக்கு ஆறு வயதில் அங்கு கல்வி ஆரம்பித்து வைக்கப்படும் நல்ல நாளில் கற்றல் - கற்பித்தல் நிகழ்ச்சி தொடக்கி வைக்கப்படும். எழுத்துக்களைச் சொல்வதில் இருந்தே கற்றல் ஆரம்பமாகும். "வளம் பல பெருக" (சுவஸ்தி சித்தம்) என்பதிலிருந்து எழுத்துக்களைச் சொல்லல் ஆரம்பித்து நிறைவில், "வெற்றி ஆகட்டும்" (சித்தி அஸ்து) என்பதுடன் பாடம் முடிவடையும், ஓலைச்சுவடிகளில் மூன்று கோடுகளில் பெரிதாக எழுதுமாறு மாணவர்கள் வழிகாட்டப்படுவார்கள். எழுத்துக்களை உரத்துச்சொல்லிக் கொண்டு எழுதுதல் வேண்டும். எழுத்துக்களை முழுமையாக அறிந்த பின்னரே கற்பித்தல் தொடரும் மணற் பலகையிலே விரலால் எழுதிப் பழகும் முறைமையும் காணப்பட்டது. கலைத்திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. (L.M.Mettananda,2006)

- ☆ இடங்களைக் கற்றல் - இதற்குரிய நூல் "நம் பொத"
- ☆ பௌத்த சுபதினங்களைக் கற்றல் - இதற்குரிய நூல் - "மங்குல் லகுண"
- ☆ ஞானக் கடவுளாகிய கணேசரைக் கற்றல் - இதற்குரிய நூல் - "ஞான தேவி கெல்ல"
- ☆ இலக்கணம் கற்றல் - இதற்குரிய நூல் "வதன் கவி பொத"
- ☆ புத்தர் தொடர்பான சம்ஸ்கிருத சுலோகங்களைக் கற்றல் - இதற்குரிய நூல் - "புத்த கஜ்ஜ"





- ☆ உரைநடை கற்றல் - இதற்குரிய நூல் - "சகஸ் கத"
- ☆ சிங்களமொழி விளக்கத்துடன் பௌத்தர் தொடர்பான சம்ஸ்கிருத சுலோகங்களுடன் கற்றல் - இதற்குரிய நூல், "நமஸ்த"
- ☆ ஒன்பது பண்டிதர்களால் எழுதப்பெற்ற ஒன்பது செய்யுள்களைக் கற்றல் - இதற்குரிய நூல் - "நவரட்னே"
- ☆ சிங்களமொழி விளக்கத்துடன் சம்ஸ்கிருத பழமொழிகளைக் கற்றல் - இதற்குரிய நூல் - "வைசகார"

மேற்கல்வியில் சமஸ்கிருத நூல்களும் பாளி நூல்களும் சிறப்பிடம் பெற்றிருந்தன. பௌத்த பிக்குகளாகச் சேரவிரும்புவோர் நோயுற்றவர்களாகவோ, அடிமைகளாகவோ கடனாளிகளாகவோ இருத்தலாகாது. பெற்றாரிடமிருந்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவர்களது முடியும், மீசையும் வெட்டப்பட்டு மொட்டையாக்கப்படும். மஞ்சள் வண்ண நீள் ஆடையைப் புனைந்து, பிக்குகளின் பாதங்களில் தலைசாய்த்து வணக்கம் செலுத்துதல் வேண்டும். (Magawaga, 1, 38, 2) தமக்குரிய "உபாக்யாய்" அல்லது அறிவாற்றுனரையும் அவர்கள் தெரிவு செய்து கொள்ளலாம். பொதுவாக, இருபது வயதுக்குப் பின்னரே நியமப்படுத்தப்படும் உபசம்வாத சடங்கு அவர்களுக்கு நடத்தி வைக்கப்படும்.

மகாவிகாரை, அபயகிரிவிகாரை முதலியவை உயர்கல்வி நிலையங்களாக விளங்கின. சம்ஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளிலே புலமைபெறல் உயர்கல்விக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. தருக்கமும், சமயமும், ஆய்வும் உயர்கல்வியில் இடம் பெற்றிருந்தன. துறைசார்ந்த புலமையாளருடன் இடைவினை கொள்ளலும் அங்கே இடம்பெற்றிருந்தன. பிரிவெனாக்கள் உயர்கல்வி வழங்கலிலே சிறப்பார்ந்த இடத்தைப் பெற்றிருந்தன.

கட்டடக்கலை, நீர்ப்பாசனப் பொறியியல், முதலாம் துறைகளில் உயர்நிலையான அறிவு வளர்ச்சியடைந்திருந்தமையும் குறிப்பிடுகின்றது. திறனாய்வு நோக்கிலே பார்க்கும்பொழுது மரபுவழி சிங்களக்கல்வி முறை, பிக்குகளின் கட்டுப்பாட்டிலே பெருமளவு இருந்தமையால் உலகியல் நோக்கிலும் சமயநோக்கே மேம்பட்டிருந்தது. அரசரது அரவணைப்பில் பௌத்தமும், விகாரைகளும், வழிபாட்டு நிலையங்களும் வளர்ச்சியுற்று வந்தன. அரசுகள் தளர்ந்தவேளை

அவையும் தளர்ந்தன. ஆடல், பாடல், கூத்து போன்ற ஆற்றுகைக்கலைகளின் வளர்ச்சியில் பிக்குகள் ஆதரவு வழங்காத இடர்ப்பாடுகளும் காணப்பட்டன. பிக்குகளின் நோக்கில் உலகியலைக் காட்டிலும் சமயநோக்கே கல்வியில் மேலோங்கியிருந்தது.

கலைத்திட்டத்தில் ஏட்டுக்கல்விக்கும் செயல்முறைக் கல்விக்குமிடையே பிரிவினைக் காணப்பட்டது. அதாவது, அறிவும் வினைப்பாடும் பிரிந்திருந்தன. கலைத்திட்டம் தேவைகளுக்கும், சூழலுக்கும் ஏற்றவாறு மாற்றப்படாத நிலைத்த (Fixed) பண்புகளையே பெருமளவிலே கொண்டிருந்தன. தேவைக்கு ஏற்றப்படி அறிவை நெகிழ்ச்சிப்படுத்தியோ, புதுக்கியோ கற்பிக்கப்படாத நிலையே பொதுவாகக் காணப்பட்டது. கற்பித்தல் தருக்கமுறைப்பட்டதாக இருந்ததன்றி உளவியல் மயப்பட்டதாக இருக்கவில்லை.

மேலைத்தேயக் கல்வியின் பரவல் மரபுவழிச் சிங்களக் கல்விமுறையை ஒடுக்குவதற்குரிய அரசியற் பலத்தோடு ஒன்றிணைந்திருந்தமையால் இக்கல்விமுறை தாக்கத்துக்கு உள்ளானது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்து, பௌத்த, இஸ்லாம் மதங்கள் மறுமலர்ச்சி விசைகளுடன் தமது தனித்துவங்களைப் பாதுகாக்கவும், குடியேற்றவாதப் பண்பாட்டுப் பரவலைத் தடுக்கவும் முயன்றன. தேசிய சமயங்களை அடியொற்றிய பாடசாலைகள் தோற்றம்பெற்றன. கல்வி வழியாக நிகழ்த்தப்பட்ட மேலைப்புலப் பண்பாட்டு விசைகளுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பௌத்தகல்வி மரபில் அநாகரிக தர்மபாலவும், இந்துக்கல்வி மரபில் ஆறுமுகநாவலரும், இஸ்லாமியக்கல்வி மரபில் சித்திலெவ்வை அவர்களும் முன்னெடுத்தனர்.

✠✠✠



# போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் காலக்கல்வி

ஐரோப்பாவில் நிகழ்ந்த கடல்வழி வர்த்தக விரிவாக்கத்தின் விளைவுகளும் இலங்கை உள்ளடங்கிய ஆசிய நாடுகளிலே காணப்பட்ட வர்த்தகப் பொருள்களின் வளங்களும் ஐரோப்பியர்கள் தமது குடியேற்றவாதத்தை இலங்கையில் நிறுவிக்கொள்வதற்கு வாய்ப்பளித்தன. ஐரோப்பாவிலே வளர்ச்சிபெறத் தொடங்கிய சுடுகலன் தொழில்நுட்பம் ஆசிய நாடுகளைக் கைப்பற்றிக் கொள்வதற்கு வாய்ப்பான பலப்பிரயோகத்தைக் கொண்டிருந்தது. அதேவேளை அரசுக் கட்டுமானம் பலவீனமடைந்திருந்தமையும் உள்ளக முரண்பாடுகளும் ஐரோப்பிய குடியேற்றவாத விரிவாக்கத்துக்குத் துணையாகின.

## போர்த்துக்கீசர் காலக்கல்வி

*1505* ஆம் ஆண்டிலே போர்த்துக்கீசர் இலங்கையிலே கால்பதித்தமையும் கத்தோலிக்க மதப்பரவலுக்கு அவர்களால் வழங்கப்பட்ட ஆதரவும், இலங்கையின் கல்வி நெடும் வழியிலே திருப்பங்களை ஏற்படுத்தலாயின.

ஏற்கனவே இலங்கையிலே தளர்வடைந்திருந்த பொருண்மிய நிலைகள், கிராமிய வாழ்க்கையின் அவலங்கள், அரசுகளின் உறுதியற்றநிலை முதலியவை போர்த்துக்கேயக் குடியேற்றவாதத்தை நிறுவிக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தன. *1557* ஆம் ஆண்டில் கோட்டை அரசன் தர்மபாலன் கிறீஸ்தவ சமயத்தைத் தழுவி தனது பெயரையும் டொன்யுவான் என மாற்றம் செய்தான். அதுவரை புத்த சமயத்துக்கு வழங்கி வந்த அனைத்து ஆதரவுகளையும் கத்தோலிக்க மிசனெறிமாருக்குக் கொடுப்பதாக உறுதியளித்து அவற்றுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தான்.

இச்செயற்பாடுகள் அரச அதிகாரத்தோடு இணைந்திருந்தமையால் இலங்கையின் சுதேச சமயங்கள் நலிவுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகின. போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சுதேச சமயச் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. இலங்கை மக்கள் முன்னர் அனுபவித்திராத அரச ஆதிக்க நிலைப்பட்ட சமய இருப்போடு மோத நேரிட்டது. இந்நிலையில் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான தேசிய எழுச்சியில் சமயம் முதன்மை பெறலாயிற்று.

போர்த்துக்கீசர் ஆட்சியின்போது கல்வி நடவடிக்கைகளில் பிரான்சிஸ்கன் திருச்சபையினரே முன்னோடிகளாக விளங்கினர். தொடர்ந்து டொமினிக்கன் மற்றும் ஒகஸ்தீன் சபையினரும் ஜேசு சபையினரும் இலங்கைக்கு வந்து கத்தோலிக்க சமய முன்னெடுப்புக்களைக் கொண்ட கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். இவர்களால் உருவாக்கப்பட்ட சிறிய பாடசாலைகளில் எழுத்து, வாசிப்பு, சமயம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. கத்தோலிக்க சமயநெறியை முன்னெடுக்கும் விவிலிய வேத வினா விடைகளைக் கற்பதும், செபம் செய்தலும் சிறிய பாடசாலைகளிலே சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. பிரான்சிஸ்கன் சபையினர் உருவாக்கிய உயர்தர பாடசாலைகளில் சமயம், எழுத்து, வாசிப்பு, இலத்தீன்மொழி, பாட்டு, நல்லொழுக்கம் முதலியவை கற்பிக்கப்பட்டன. கத்தோலிக்க குருமாரை உருவாக்கும் நோக்குடன் இந்த உயர்தர பாடசாலைகள் தொழிற்பட்டன.

கல்விச் செயற்பாடுகளில் அதீத ஈடுபாடும், கல்வியை நடைமுறைப்படுத்துவதில் நீண்ட பட்டறிவும் கொண்ட ஜேசு சபையினர் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் இலங்கைக்கு வந்து போர்த்துக்கீச அரசின் அனுசரணையுடன் மூன்று படிநிலைகள்





கொண்ட கல்வியமைப்பை ஒழுங்கமைத்தனர். சமயகுரு ஒருவரை அதிபராகக் கொண்டு ஆரம்பநிலைக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என்ற மூன்று படிநிலைகளை அமைத்து, குருமார் அல்லாதவர்களுக்கும் உயர்கல்வி வாய்ப்பை ஏற்படுத்தினர். ஆயினும், சமூகத்தில் உயர்நிலையிலிருந்த மிகக்குறைந்த ஒரு சிறு தொகையினரே இவற்றின் அனுகூலங்களைப் பெற்றனர்.

தாய்மொழி வாயிலான கல்வியை வளர்ப்பதன் வாயிலாக மதமாற்றம் செய்தல் எளிதாக இருக்கும் என்பது அவர்களது கருத்தாக அமைந்தது. மக்களிடத்து ஆழ்ந்து ஊடுருவிக் கருத்தேற்றம் செய்யக்கூடிய ஊடகங்களாகிய கூத்துக்கள் வாயிலாக விவிலியக் கதைகள் கற்பிக்கப்பட்டன. கிராமிய இசை வகைகளைப் பயன்படுத்தி கிறிஸ்தவ பக்திப்பாடல்கள் புனையப்பட்டன.

போர்த்துக்கேயரின் கல்விச்செயற்பாடுகள் வாயிலாக அவர்கள் பயன்படுத்திய சொற்களும், பண்பாடும், இலத்தீன்மொழி தழுவிய வணக்கமுறைகளும், ஐரோப்பாவில் முகிழ்த்தெழுந்த பாடசாலை மற்றும் வகுப்பறை முறைமையும், தேவாலய கட்டட அமைப்பும், இசை, நடனம், ஓவியம், சிற்பம் முதலாம் அழகியல் வடிவங்களும் அவர்களாற் கைப்பற்றப்பட்ட பகுதிகளிலே பரவலாயின.

இவ்வாறான ஊடாட்டங்கள் தமிழ் மற்றும் சிங்கள இலக்கிய ஆக்கங்களிலே செல்வாக்குச் செலுத்தலாயின. யாழ்ப்பாணத்தில் அந்தோனிமுத்துப்புலவர் ஜேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட பிரபந்தங்களை எழுதினார். விவிலியத்தை அடியொற்றி அவரால் எழுதப்பட்ட அம்மானைப்பாடல் அரங்குகளிலே பாடப்பட்டு வந்தன. சிங்கள மரபிலும் இவ்வாறாக அழகிய வண்ண மொகத்தாலா என்பவர் விவிலிய வேதம் தழுவிய பல ஆக்கங்களை மேற்கொண்டார்.

போர்த்துக்கேயரின் பணிகள் இலங்கையைத் தொடர்ந்து குடியேற்ற நாடாக இருக்கும் செயற்பாடுகளுக்கே வலுவூட்டின.

## ஒல்லாந்தர்காலக் கல்வி

*1658* ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர் வினைத்திறன் கொண்ட நிருவாகக் கட்டமைப்பையும், கல்விக்கட்டமைப்பையும் மேற்கொண்டு அதன் வழியான பொருளாதார சுரண்டல் விரிவாக்கத்தை ஏற்படுத்தினர்.

தமது ஆட்சிக்கு உட்பட்ட புலங்களில் உள்ள கிராமங்களை அடியொற்றிய கோவிற்பற்றுப் பாடசாலைகளை புரொட்டஸ்தாந்து தேவாலயங்களுக்கு அணிந்தாக அமைத்து நிருவாகமும் கல்வியும் தழுவிய பரந்த அடித்தளக் கட்டமைப்பை ஏற்படுத்தினர். கல்வியிலே நிமிர் நிலையான மத்திய கட்டுப்பாடுகளை அவர்கள் ஏற்படுத்தியிருந்தனர். திடநிலையில் மத்தியமயப்பட்ட கல்வி நிருவாக முறைமைக்கு வழிவகுத்த அவர்களின் இந்த நடவடிக்கை தொடர்ந்து வளர்ச்சி பெற்ற கல்விநிருவாக வரலாற்றுச் செயற்பாடுகளுக்கு அடித்தளமிட்டது. கலைத்திட்டம், பாட உள்ளடக்கம், விடுமுறை ஒழுங்கு, ஆசிரியர்களுக்குரிய அடிப்படைத் தகைமைகள் தொடர்பான கட்டளைகள் வெளியிடப்பட்டன.

ஒல்லாந்த வணிகக் கம்பனியின் நோக்கமாகிய சிக்கனமும், இலாபமீட்டலும், வினைத்திறனுடன் கல்விச்செயற்பாடுகளிலே முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் ஒல்லாந்த சீர்திருத்த திருச்சபை (Reformed Church) ஆட்சியாளருடன் முரண்பாடு கொள்ளவும் நேரிட்டது. ஆயினும் மதம் பரப்பும் செயற்பாட்டில் இருசாராரும் ஒருமனதாகச் செயற்பட்டனர்.

பாடசாலை சேர்வதற்கு முன்நிபந்தனையாக கிறிஸ்தவ சமயத்தைத் தழுவ வேண்டும் என்பதும், தேவாலயங்களுக்கு ஒழுங்காகச் செல்லல் வேண்டுமென்பதும் வலியுறுத்தப்பட்டன. இந்நிலையில் பாடசாலை செல்வது கட்டாயமாக்கப்பட்டமையால் மதமாற்றத்தை எளிதாக முன்னெடுக்க முடிந்தது. எளிதாக மதமாற்றம் செய்து கொள்வதற்கு அவர்கள் "கட்டாயக்கல்வி" என்ற சட்டபூர்வமான ஆயுதத்தைப் பயன்படுத்தலாயினர். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதோர் தண்டப்பணம் செலுத்த வேண்டியிருந்தது. கல்விச் செயற்பாடுகளையும், பொருளாதாரச் செயற்பாடுகளையும் ஒன்றிணைத்து இலாபநோக்கில் முன்னேற்றுவதற்குரிய தரைவழி மற்றும் நீர்வழிப் போக்குவரத்துக் கட்டமைப்புக்களை ஒல்லாந்தர் ஏற்படுத்தினர். பொருளாதாரப் புலங்களும் பாடசாலைகளும் இவ்வாறான போக்குவரத்துக் கட்டமைப்புக்களால் ஒன்றிணைக்கப்பட்டன. நிருவாகப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஆட்சி மேலதிகாரி (திசாவை)யின் தலைமையில் "ஸ்கொலார்கல் கொமிசன்" எனப்படும் கல்வி ஆணைக்குழுவை அமைத்தனர். கல்விச் செயற்பாடுகளையும், நிருவாகச் செயற்பாடுகளையும் ஒருங்கே





மேற்பார்வை செய்வதற்கும் நெறிகை (Monitoring) செய்வதற்கும் இந்த ஆணைக்குழு பொறுப்பாக இருந்தது. கத்தோலிக்க மதத்தினருக்கும் இந்த ஆணைக்குழுவுக்குமிடையே குறிப்பிட்ட சில விடயங்களில் முரண்பாடுகளும் மோதல்களும் இடம்பெற்றன. கத்தோலிக்கம் மற்றும் கத்தோலிக்கம் அற்ற கிறிஸ்தவ பிரிவினர்களுக்கிடையே முரண்பாடுகள் ஐரோப்பாவிலும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே, பௌத்தமதம் மற்றும் சைவமதம் நிலைபேறு கொண்டிருந்த இடங்களிலும் ஸ்கொலாக்கல் கொமிசன் எதிர்ப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்த ஆணைக்குழுவினர் தமது உணவின் பொருட்டு மாடுகளைக் கொன்றமையை நல்லூர் மற்றும் இணுவிலில் வாழ்ந்த ஆழ்ந்த சைவமரபினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பிரெட்டிக்கான் போதகர்கள் பாடசாலைக்கும், மதமாற்றத்துக்குமுரிய தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தனர். அவர்களின் செயற்பாடுகளை மேலும் விரிவாக்குவதற்கும் ஒல்லாந்தரிலிருந்து உதவியாளர்களைக் கொண்டுவருதல் ஒப்பீட்டளவில் செலவுகளை அதிகரிக்கச் செய்யும். ஆதலால், கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய உள்ளூர் வாசிகளைத் தெரிந்தெடுத்துப் பயிற்சி வழங்கிப்பயன்படுத்த எண்ணினர்.

இவ்வாறாக, உருவாக்கம் பெற்ற உள்ளூர் ஆசிரியர்கள் "சட்டம்பிமார்கள்" எனவும், "தோம்புடையார்" எனவும் அழைக்கப்பட்டனர். ஆசிரியர் கடமை, மதமாற்றஞ் செய்யும் கடமை என்பவற்றுடன் அவர்கள் சட்டங்களை நடைமுறைப்படுத்துவோராயும், ஆவணங்களைப் பதிவு செய்வோராயும் அவர்கள் கடமை புரிந்தனர்.

சைவம், பௌத்தம் ஆகிய சமயத் தடங்கள் நாட்டு மக்களிடத்து ஆழ்ந்து வேரூன்றிய நிலையில் மக்கள் பெயரளவில் கிறீஸ்த்தவர்களாகவும், அகவாழ்விலும், தனித்த தியானங்களிலும் தமது முன்னைய சமயங்களைத் தழுவியும் நின்றனர்.

இலாப நோக்கம் கருதிய ஒல்லாந்துக் கிழக்கு இந்தியக் கம்பனி ஆட்சியாளர் குறைந்த செலவிலே கல்விப்பணிகளையும் சமயப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடிய கிராங் பெசோக்கர் என்போரை இலங்கைக்கு வரவழைத்துப் பணிகளை விரிவாக்கினர்.

கல்விச்செயற்பாடுகளை மேலும் விரிவாக்கும் நோக்குடன் அவர்கள் ஓர் அச்சகத்தை நிறுவி நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டனர். பெண்கல்வி, ஆசிரியர்கல்வி, குருமாரைப் பயிற்றுவிப்பதற்கான கல்வி, உயர்கல்வி முதலிய துறைகளிலும் ஒல்லாந்தர் கவனம் செலுத்தினர். கல்வியிலும், சமயத்திலும் மேலும் முன்னேற்றம் கொள்ளச் செய்யும் நோக்குடன் கற்றவர்களை ஒல்லாந்துக்கு அனுப்பும் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

ஒல்லாந்தர் ஆட்சியின் விளைவாக இலங்கையிலே பல்வேறு செயற்பாடுகளும் செல்வாக்குகளும் இடம்பெறலாயின. மனித வாழ்வின் பிரதான நிகழ்ச்சிகளான பிறப்பு, திருமணம் முதலியவற்றை ஆவணப்படுத்தலும், நிலவுரிமையை ஆவணப்படுத்தலும் இடம்பெறலாயின. புகையிலை உள்ளிட்ட புதிய பணப்பயிர்களின் உற்பத்தியும் அறிமுகம் செய்யப்பட்டது. சமய நிலையில் அவர்கள் தூய்மை வாதத்தைக் கடைப்பிடித்தமையால், உருவவழிபாடு மற்றும் கூத்துக்கலை வாயிலாகச் சமயம் பரம்புதல் முதலியவற்றை நிராகரித்தனர். ஆடம்பரம் அற்ற செலவுச் சிக்கனமான கட்டடக்கலையை அறிமுகம் செய்தனர்.

இவர்களது ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழியிலும் சிங்கள மொழியிலும், பல புலவர்கள் மௌனமான ஆக்கப்பணிகளைச் செய்தனர். இணுவைச் சின்னத்தம்பிப்புலவர் பல பிரபந்தங்களை எழுதினார். அவற்றுள் "பஞ்சவனத்தூது" சிறந்த ஆக்கமாகக் கருதப்படுகின்றது. சிங்களமொழியிலும் இக்காலப் பகுதியில் சிறப்புற்ற "சந்தேஸ" (தூது) இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. மேலும் ஒல்லாந்தரால் அறிமுகம் செய்யப்பட்ட ரோமன்டச்சுச் சட்டம் இலங்கை வரலாற்றில் ஆழ்ந்த வேர்பதித்தது.

போர்த்துக்கீசரைப் போலவே ஒல்லாந்தர் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் குடியேற்றவாதத்தை இலங்கையில் மேலும் வலிமைபெறச் செய்வதற்கு வழிவகுத்தன.

## பிரித்தானியர் ஆட்சிக்காலக்கல்வி

தமது ஆட்சியை வலிமைப்படுத்துவதிலும், நாட்டின் வளங்களைச் சுரண்டிப் பறிப்புக்கு உள்ளாக்குதலிலும் பிரித்தானியரின் கவனம் ஆரம்பகாலத்தில் மேலோங்கியிருந்தது. இந்நிலையில் ஒல்லாந்தர் உருவாக்கிய கல்விக்கட்டமைப்பு அனைத்தும் வீழ்ச்சியடையத் தொடங்கின. ஆயினும், மதமாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விமுறை தொடர்ந்து கொண்டேயிருந்தது. பிரித்தானிய அரசினால் 1978ஆம் ஆண்டு நியமனம் பெற்ற ஆள்புல நாயகராகிய பிரெட்டிக் நோர்த் அவர்கள் ஒல்லாந்தர் கையாண்ட மதம் பரப்புதல் கல்வியை விரிவாக்கம் செய்தல் முதலாம் நடவடிக்கைகளை விரிவான மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கிப் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கலானார். ஆயின், பிரித்தானிய அரசாங்கம் இலங்கையின் செலவுகளைக் குறைத்துக்கொள்ளும்படி நோர்த் தேசாதிபதிக்குக் கட்டளை இட்டமையால் கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டன. 1805ஆம் ஆண்டில் தோமஸ் மெயிட்லண்ட் பிரபு ஆள்புல நாகராக பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் இலங்கையின் கல்வி தொடர்பான பிரித்தானிய அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. இலங்கையின் கல்வியை மீளமைக்கும் பணிகள் இடம்பெறலாயின.

அடுத்து, ஆள்புல நாயகராக நியமனம்பெற்ற ரொபேட் பிறவுண்றிக் அவர்கள் கல்விவழியாக மதம் மாற்றம் செய்யும் நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுத்தார். அங்கிலிக்கன் திருச்சபை, வெஸ்லியன், பப்திஸ்த திருச்சபை மற்றும் அமெரிக்கமிசன் ஆகியவை இலங்கையிலே தமது பணிகளை விரிவாக்கத் தொடங்கினர். இவற்றுள் அமெரிக்கமிசன் சிறப்பாக யாழ்ப்பாணத்தைக் குவியப்படுத்தியே தமது பணிகளை முன்னெடுத்தது.

ஆள்புல நாயகர் பிரவுண்றிக் அவர்களது முயற்சிகள் ஒருபுறம் மிசனெறிமாருக்கு ஆதரவு வழங்குவதாகவும் மறுபுறம் அரசாங்கப் பாடசாலைகளை நிறுவும் முயற்சிகளை முன்னெடுப்பவையாகவும் அமைந்தன. அரசாங்கப் பாடசாலைகளை நெறிகை செய்வதற்குரிய பொறுப்பு மாவட்ட நிருவாக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. மக்களை அரசாங்கத்துடன் ஒன்றிணைத்துக் கொள்வதற்கு ஆங்கில மொழிவழிக் கல்வியின் முக்கியத்துவத்தை அவர் அறிந்து கொண்டார். இலங்கையில் ஆசிரியர் போதாமை நிலையைக் கருத்திலே கொண்டும், கல்விக்கான செலவைக் குறைக்கும் நோக்கைக் கொண்டும் பெல் என்பவர் அறிமுகம் செய்த "மாணவர் தலைவர் கற்பித்தல் முறையை" அவர் இலங்கையிலும் அறிமுகம் செய்தார். இந்தக் கற்பித்தல் முறை இங்கிலாந்திலும் சென்னையிலும் வெற்றியளித்த முன்மாதிரியைக் கருத்திற்கொண்டு இலங்கையிலும்

முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப்பேச்சு வழக்கில் இது "சட்டம் பிள்ளைக் கற்பித்தல் முறை" என அழைக்கப்பட்டது.

## பிரித்தானியர் ஆட்சியும் கோல்புறூக் சீர்திருத்தங்களும்

இலங்கையின் நிருவாகச் செலவுகளைச் சிக்கனப்படுத்தும் நோக்கமும் அரச வருமானத்தைப் பெருக்குவதற்குமான வழிவகைகள் பிரித்தானிய அரசுக்கு எப்பொழுதும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருந்தன.

கோல்புறூக் மற்றும் கமரன் என்னும் இருவரைக் கொண்ட ஆணைக்குழு 1829ஆம் ஆண்டில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இலங்கைத் தீவிலிருந்து பிரித்தானியாவுக்குக் கிடைத்த வருமானம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை ஆராய்வதும் வருமானத்தை அதிகரிக்க பொருத்தமான வழிமுறைகளை முன்மொழிதலும் அக்குழுவின் நோக்கங்களாக அமைந்தன.

கீழ்நிலை அலுவலாளர் பதவிகளுக்கு உள்நாட்டவர்களை அமர்த்துவதால் வளர்ந்துவரும் அரச நிருவாகத் துறையில் சிக்கனத்தை ஏற்படுத்தலாம் என்று கருதினர். சுதேச இளைஞர்களுக்கு ஆங்கிலக்கல்வியை வழங்குவதன் வாயிலாக இதனை நடைமுறைப்படுத்தலாம் என எண்ணினர். அக்காலத்தில் பாடசாலைக்குச் சென்ற மொத்த மாணவரின் எண்ணிக்கை 12,000 ஆகவும் அவர்களுள் 800 மாணவர் மட்டுமே ஆங்கில மொழிவழிக் கல்வி கற்றனர் என்பதை ஆணைக்குழுவினர் சுட்டிக்காட்டினர். ஆங்கிலக்கல்வி வளம்பெற வேண்டுமாயின் ஆங்கில ஆசிரியர்களது வழங்கல் தொடர்ச்சியாக இடம்பெறல் வேண்டும் என்பதை அறிந்து அதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படலாயின. சிக்கன வழிப்பட்ட ஆங்கிலக்கல்வியே அவர்களின் வலியுறுத்தலாயிற்று.

சிக்கனத்தை மேற்கொள்வதற்காகத் தாய்மொழிக் கல்வியை முற்றாகப் புறக்கணித்தமை குடியேற்றவாதத்தின் சுரண்டலையும், பறிப்பையும் துல்லியமாக வெளிப்படுத்தியது. இந்நாட்டு வளங்களைப் பறித்தெடுத்த அதேவேளை உழைக்கும் மக்களை முற்றான இருளுக்குள் தள்ளிவிடுவதன் வாயிலாக குடியேற்றவாத வேர்களை ஆழமாகப் பதித்துக்கொள்ள முயன்றனர். சுதேசமொழிப் பாடசாலைகளை மூடிவிடுவதற்கும் அங்கு பணிபுரிந்த ஆசிரியர்களின் சேவையை நிறுத்திவிடும்படியும் விதப்புரை செய்தனர்.





இவர்களின் விதப்புரைகளை அடியொற்றி 1834 ஆம் ஆண்டு "பாடசாலை ஆணைக்குழு" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. மேற்றிராணியார், திருச்சபைக்குருமார், அரசாங்க அதிபர்கள், அதிகாரிகள், நீதித்துறை அதிகாரிகள் முதலியோர் இந்த ஆணைக்குழுவில் இடம்பெற்றனர். ஆயின் இதன் உறுப்பினர்களிடையே ஏற்பட்ட கருத்து மோதல்கள் காரணமாக ஆணைக்குழு 1841ஆம் ஆண்டிற் கலைக்கப்பட்டு இதற்குப் பதிலீடாக "மத்திய பாடசாலை ஆணைக்குழு" என்பது நிறுவப்பட்டது. இதன் தலைவராக முதலில் குடியேற்றநாட்டுச் செயலாளர் இடம்பெற்றார். அவர் இங்கிலாந்துக்குத் திரும்ப, ஆங்கிலத் திருச்சபையின் தலைவர் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆங்கில திருச்சபை பொதுவாகப் பல அனுகூலங்களைப் பெற்றிருந்தது. அத்திருச்சபையைச் சேர்ந்த சுதேசிகளுக்கு உத்தியோக வாய்ப்புக்களும் அதிகமாகக் கிடைக்கப்பெற்றன. ஆங்கிலத் திருச்சபையின் தலைவர் தமக்குச் சார்பானவர்களை ஆணைக்குழுவில் இடம்பெறச் செய்தும் எதிரானவர்களை அதிலிருந்து நீக்கியும் மேற்கொண்ட செயற்பாடுகள் பல்வேறு முறுகல் நிலைகளைத் தோற்றுவித்தன. பல்வேறு மட்டங்களிலே எதிர்ப்புக்கள் தோற்றம் பெற்றன.

இவ்வாறான எதிர்ப்புக்களைக் கருத்திற்கொண்டு சட்ட நிரூபண சபை குழுவொன்றை நியமித்தது. நடைமுறையிலுள்ள கல்விச் செயற்பாட்டின் குறை நிறைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. குழுவின் விதப்புரைகளை ஏற்றுக்கொண்ட சட்ட நிரூபணசபை குடியேற்ற நாட்டுச் செயலாளரின் ஒப்புதலுடன் மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அதன் முதல் நடவடிக்கையாக மத்திய பாடசாலை ஆணைக்குழு நீக்கப்பட்டு 1869ஆம் ஆண்டு "பொதுப் போதனைத் திணைக்களம்" அமைக்கப்பட்டது. அதன் பணிப்பாளராக ஜே.எஸ்.லோரி என்பார் நியமிக்கப்பட்டார்.

இவரது முயற்சியினால் மிசன் பாடசாலைகள் அரசாங்க மேற்பார்வையில் வந்ததுடன், உலகியற் பண்புகள் கலைத்திட்டத்தில் உட்பொதியப்படலாயின. அனைத்துப் பாடசாலைகள் மீதும் மேற்பார்வை ஒரு பொது நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டது.

கல்வி விரிவாக்கத்தின் பொருட்டு பாடசாலைகளை இத்திணைக்களம் நிறுவத் தொடங்கியது.

பிரித்தானியர் ஆட்சியின் கல்விமுறைமை முற்றிலும் குடியேற்றவாத நலன்களையே முதன்மையாகக் கொண்டிருந்தது. சமூக ஏறுநிரலமைப்பை நன்கு பராமரிக்கக் கூடிய செயற்பாடுகளை அனைத்துக்கல்விச் சீர்திருத்தங்களும் மேற்கொண்டன. சமூக நிரலமைப்பு மொழிவழியாக மீளவலியுறுத்தப்பட்டது. அதாவது, செல்வம் படைத்த மேட்டுக்குடியினர் ஆங்கிலமொழி வழிக்கல்விக்கும் ஏனைய பொதுமக்கள் தாய்மொழி வழிக்கல்விக்கும் உள்ளாக்கப்பட்டனர். பாடசாலைக் கட்டட வடிவமைப்பிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. ஆங்கிலப் பாடசாலைகள் அக்காலத்துக்குரிய நவீனப் பண்புகளைக் கொண்ட "ஓட்டுக் கூரைப் பாடசாலை"களாக அமைந்தன. சுதேசமொழிப் பாடசாலைகள் "ஓலைக்கூரைப் பாடசாலை"களாக அமைந்தன.

பிரித்தானியர் ஆட்சிமுறையும் கல்விமுறைமையும் இலங்கையிலே பல்வேறு சமூக முரண்பாடுகளையும், சமய முரண்பாடுகளையும் தோற்றுவித்தன. புதிதாக இலங்கையிலே தோற்றம்பெறத் தொடங்கிய மத்தியதர வகுப்பினர் ஏனையவர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக்கொள்ளும் நடை, உடை, பாவனை மற்றும் மனப்பாங்குகளை வளர்த்துக்கொண்டனர். தேசிய சமயங்களைச் சார்ந்தோர் மறுமலர்ச்சிச் சிந்தனைகளுடன் தொழிற்படலாயினர்.

✠✠✠



# 1943 ஆம் ஆண்டுக் கல்விச் சிறப்புக் குழுவின் விதப்புரைகள்

இலங்கையின் கல்வி முறைமையிலிருந்த குறைகளையும் மட்டுப்பாடுகளையும் ஆராய்ந்து அறிக்கை வழங்கும்படி கலாநிதி.சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா அவர்களின் தலைமையில் கல்விச் சிறப்புக்குழு அமைக்கப்பட்டது. குழுவின் தலைமைப் பொறுப்பை கன்னங்கரா அவர்கள் ஏற்றிருந்தமையால் அந்த அறிக்கை கன்னங்கரா கல்விக்குழுவின் அறிக்கை என்றும் குறிப்பிடப்படும் இச்சிறப்புக்குழுவின் அறிக்கை 1943ஆம் ஆண்டின் XXIV பருவப்பத்திரமாக வெளியிடப்பட்டது.

கலாநிதி கன்னங்கரா அவர்கள் இங்கிலாந்திலே வளர்ச்சிபெற்ற மானிடவாதம், தொழிற்கட்சியினால் முன்வைக்கப்பட்ட கருத்தியல் மற்றும் இந்தியாவில் வளர்ச்சியுற்ற காந்தியச் சிந்தனைகள் முதலியவற்றின் ஊட்டங்களுக்கு உட்பட்ட நிலையின் வெளிப்பாடாக சிறப்புக் குழுவின் அறிக்கை வெளியானது.

மக்களாட்சி நடைமுறையில் வெற்றி காண்பதற்கு அடிப்படை எழுத்தறிவும்

கல்வியிலே சமசந்தர்ப்பமும் அவசியம் என்பதைக்குழு உணர்ந்துக் கொண்டது. அந்த அடிப்படைகளை அடியொற்றியே விதப்புரைகள் இடம்பெறலாயின. பாலர்வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்படல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. வறுமைக் காரணமாகக் கல்வியின் உயர்ந்த பயன்களைப் பெறமுடியாத பிரதிகூலமடைந்தோருக்கு வாய்ப்பினை வழங்குதல் இதன் குறிக்கோளாக அமைந்தது. சமூகத்தின் அடித்தளத்து மாணவர்கள் ஆங்கிலப் பாடசாலைகளில் இலவசமாகக் கற்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டாலும், அதன் அனுகூலங்களை அந்த மக்கள் பெருமளவிலே பெற்றுக்கொள்ள முடியாத தடங்கல்களே காணப்பட்டன. அதேவேளை இந்த நிகழ்ச்சி மத்திய தரவகுப்பினருக்குரிய வாய்ப்புக்களை மேலும் அதிகரிக்கச் செய்தது.

தாய்மொழி கல்விமொழியாக இருக்கவேண்டும் என்பதிலும் குழுவினர் ஆழ்ந்த கவனம் செலுத்தினர். உளவியல் அடிப்படையிலும், மக்களாட்சி அடிப்படையிலும் இதுவே பொருத்தமான நடவடிக்கை என்பது அவர்களாற் குறிப்பிடப்பட்டது. ஆரம்ப நடவடிக்கையாக பாலர்வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடசாலைகளிலும் தாய்மொழியே கல்வி ஊடகமாக இருத்தல் வேண்டுமென்ற விதப்புரை 1945ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. ஆனால் ஆங்கிலத்தைக் கல்விமொழியாகக் கொண்ட பாடசாலைகளில் இந்த மாற்றம் படிப்படியாக, ஆறுதலாக நிகழ்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டன.

பதினொரு வயதின் பின்னர் கல்விவழங்கலில் முப்பிரிவு முறையை இவர்கள் விதப்புரை செய்தமை குறிப்பிடத்தக்கது. உயர்நிலை, சிரேட்டதரம், செயல்முறை என்றவாறு பாடசாலை ஒழுங்கமைப்பு விதப்புரை செய்யப்பட்டது. இந்த ஒழுங்கமைப்பும் பிள்ளைகளின் கல்வியிலே அதிக அக்கறையும், ஊக்கலும் கொண்ட மத்தியதர வகுப்பினருக்கு சாதகமாக அமைந்தது. ஏழை விவசாயிகளினதும் தொழிலாளர்களதும் பிள்ளைகளுக்கு இது பாதகமாக அமைந்து, சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பை ஒருவகையில் மீள வலியுறுத்துவதாகவே விளங்கியது. மூவகைப் பாடசாலைகளிலும் கல்வியை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட காலஅளவும், கலைத்திட்டமும் வேறுபாடுகளைக் கொண்டிருந்தமை அவர்கள் முன்மொழிந்த கல்விச் சமத்துவத்துக்கு முரணுரையாக அமைந்தது.





1945ஆம் ஆண்டு இந்த விதப்புரைகள் நடைமுறைக்கு வந்தவேளை, ஐந்தாம் வகுப்பில் மாணவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதற்குப் பதிலாக எட்டாம் வகுப்பில் இருபிரிவுகளாகப் பிரிக்கவேண்டும் என்ற மாற்றம் கொண்டு வரப்பட்டது.

இச்சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, அமைக்கப்பட்ட மத்திய பாடசாலைகள் இலங்கையின்கல்வி விரிவாக்கத்தை முன்னெடுப்பதற்குத் துணை செய்தன. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ஒவ்வொரு மத்திய பாடசாலையை (மத்திய மகா வித்தியாலங்களை) நிறுவும் பணிகள் ஆரம்பமாயின. உள்ளூர் சூழலுடன் கல்வியை இயைபுபட வைத்தல், நகரங்களுக்காக மேற்கல்விக்குச் செல்லாது, உள்ளூரில் அவற்றைத் தரமாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்தல், வதிவிடவசதியுடன் கற்றல், ஆய்வுகூடம், நூலகம், தொழிற்பயிற்சி முதலியவற்றுடன் கற்றல், புலமைப்பரிசில் பெற்று அங்கு கற்பதற்கு வாய்ப்பளித்தல் முதலிய பல பரிமாணங்களை மத்திய கல்லூரிகள் கொண்டு வளர்ச்சியடைந்தமை இலங்கையின் கல்வி வரலாற்றிலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிகழ்ச்சியாகும். கிராமப்புறக்கல்வி மேம்பாட்டில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது.

கன்னங்கரா சிறப்புக்குழுவின் விதப்புரைகள் அரச பாடசாலைகள் மற்றும் மதச்சார்பான பாடசாலைகள் ஆகியவை தொடர்ந்து இயங்குவதற்கு வழிவகுத்தது. புதிய பாடசாலைகள் தொடக்கப்படுவதற்கும் அரசநிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்குமுரிய ஏற்பாடுகள் அவர்களாற் குறிப்பிடப்பட்டன. புதிய பாடசாலை ஒன்று நன்கொடை பெறவேண்டுமாயின் குறித்த பாடசாலையின் முகாமையாளரின் சமயத்தைச் சார்ந்தோரும் குறிப்பிட்டதூர எல்லைக்குள் வசிப்போருமான முப்பது பிள்ளைகளையாவது கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

பெருந்தோட்டத்துறையின் கல்விபற்றி அக்குழுவினர் கருத்திற் கொள்ளாமை அவர்களிடம் உட்பொதிந்திருந்த இனத்துவ பாரபட்ச அணுகுமுறையை ஒருவகையிலே புலப்படுத்துகின்றது எனலாம்.

**ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த எழுத்தறிவு வளர்ச்சி**

| ஆண்டு | எழுத்தறிவு வீதம் ஆண்கள் | எழுத்தறிவு வீதம் பெண்கள் |
|---|---|---|
| *1881* | *24.6* | *2.5* |
| *1891* | *29.9* | *4.4* |
| *1901* | *34.7* | *6.9* |
| *1911* | *47.2* | *12.5* |
| *1921* | *56.3* | *21.2* |
| *1946* | *70.1* | *43.8* |
| *(ஆதாரம் : இலங்கையிற் கல்வி - 1969)* | | |

எழுத்தறிவு படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்தமைக்கு தேசிய சமயங்களின் எழுச்சியும், மறுமலர்ச்சியும் சிறப்பார்ந்த பங்களிப்பைச் செய்தன என்பதை மறுக்க முடியாது.

கன்னங்கராவின் கல்விச்சீர்த்திருத்தங்களிலே பல மட்டுப்பாடுகள் காணப்பட்டாலும் முற்போக்கான பண்புகள் பல இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி, கிராமப்புறங்களிலே தரமான கல்வி வழங்கலை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முதலியவை முற்போக்கானவையாயும், ஒருவகையிலே குடியேற்றவாதத் தடங்களை மறுதலிப்பவையாயும் அமைந்தன.

கன்னங்கரா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கல்வி நடவடிக்கைகள் கல்விவழியாக ஈட்டப்படக்கூடிய மேல்நோக்கிய அசைவியக்கத்தைத் (Mobility) துரிதப்படுத்தியதுடன், கல்வியின் பங்குபற்றலையும் பரவலாக்கியது.

✠✠✠



# குடியேற்றவாதக் கல்வியின் விளைவுகள்

காலனித்துவம் அல்லது குடியேற்றவாதம் தனது ஆதிக்கத்தை ஆழப் பதித்துக் கொள்வதற்குக் கல்வியை வலிமையான கருவியாகப் பயன்படுத்தி வந்தது. குடியேற்றவாத பொருண்மிய நடவடிக்கைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் வினைத்திறனுடன் இயக்கிக் கொள்வதற்கும் கல்வியின் விளைவுகள் நேரடியான பயனுடைமையைக் கொண்டிருந்தன. குடியேற்றவாதம் மக்களை மேம்பாடுகளுக்கு இட்டுச்செல்லும் என்ற போலிக் கருத்தியலை மக்கள் மனங்களிலே பதியச் செய்வதற்கும் கல்வி வழியான கருத்தேற்றம் செய்தலை ஆட்சியாளர் முன்னெடுத்தனர்.

குடியேற்றவாதக் கல்வியின் இரண்டு பரிமாணங்கள் சிறப்பாகக் கூறக்கூடியவை. பொருண்மியத்துறையில் இலாபமீட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அவர்கள் கல்விச் செயற்பாட்டிலும் செலவு நன்மைகளைக் கருத்திற் கொண்டிருந்தனர். அவர்களின் அரச நிருவாகப் பணியமைப்-

பின் கீழ்மட்டத்திலே பணிபுரியக்கூடிய எழுதுவினைஞர்களைக் கல்வியால் உருவாக்கிக்கொள்ளல் வாயிலாக நிருவாகச் செலவைச் சிக்கனப்படுத்தலாம் என எண்ணினர்.

பிரித்தானிய ஆட்சியை இசைவுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்தறிவும், அடிப்படை எண்ணறிவும் கொண்டவர்களை உருவாக்கும் நோக்குடன் கல்விவிரிவாக்கத்தில் ஈடுபடலாயினர். அவர்களின் கல்வி நோக்கின் அடுத்த பரிமாணமாக அமைவது தமது ஆட்சிக்குக் கீழ்ப்படிந்தும் சட்ட திட்டங்களை மதித்து நடந்து, கொள்ளக்கூடிய "கீழ்ப்படிவுள்ள" பிரசைகளைக் கல்வியால் உருவாக்கிக் கொள்ளலாகும். "அரசர் நீடு வாழ்க" என்பது மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. "அரசருடைய நல்வாழ்வைவே மக்களின் நல்வாழ்வு" என்ற அறிதலைப்புக்கள் கல்வியில் முன்னெடுக்கப்பட்டன.

மக்கள்நலன், சமூகநலன் என்பவற்றிலும் பார்க்க அரசின் நலன்களை மேம்படுத்தலே கல்வியின் உள்ளடக்கமாயிற்று. இதற்கு அடித்தளமிடும் வகையில் ஆரம்பக்கல்விக் கட்டமைப்புச் செய்யப்பட்டது. குடியேற்றவாத ஆட்சிக்கு அடங்கியும், விசுவாசமாகவும் வாழும் மக்களை உருவாக்குவதற்குரியவாறு ஆரம்பக்கல்வி ஒழுங்கமைக்கப்பட்டது. அரசை எதிர்க்காமலும், விமர்சிக்காமலும் மௌனித்து வாழும் மக்களை உருவாக்குதலே தலையாய நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

ஆரம்பக்கல்வியானது தொடர்கல்விக்குரிய தளமாகக் கட்டமைக்கப்படாது, அடிப்படையான எண்ணையும் எழுத்தையும் கற்பிக்கும் ஆதாரநிலைக் கல்வியாக மட்டும் அமைக்கப்பட்டது. இலங்கையின் மரபுவழித் தொழில்களின் வினையாற்றலை மேம்படுத்துவதற்குரிய உள்ளடக்கம் எதுவும் கலைத்திட்டத்திலே சேர்த்துக்கொள்ளப்படவில்லை. மனித வளத்தை மேம்படுத்துவதைக் காட்டிலும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளே கல்விவாயிலாக முன்னெடுக்கப்பட்டன.

இந்நாட்டு மக்களின் நெடிய பண்பாட்டுப் பாரம்பரியம் எதுவும் பாட உள்ளடக்கங்களில் இடம்பெறவில்லை. பண்பாட்டு விழாக்களும் பாடசாலைகளிலே கொண்டாடுவதற்குப் பொதுவாக இடமளிக்கப்படவில்லை. ஆங்கிலநாட்டு ஆரம்பக்கல்விக் கலைத்திட்-





டத்தோடு ஒப்பிடும்பொழுது இலங்கையின் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம் தாழ்ந்த இயல்புகளையே கொண்டிருந்தது.

குடியேற்றவாதக்கல்வி முறைமை இலங்கையில் இருமைத் தன்மைகளை வளர்த்துக்கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் ஆங்கிலமொழிப் பாடசாலைகள் என்றும் சுதேசமொழிப் பாடசாலைகள் என்றும் இருமைத்தன்மைகள் காணப்பட்டன. இந்த இருமைத்தன்மை வர்க்க நிலைப்பட்டதாகக் காணப்பட்டது. சமூக உயர் வகுப்பினர் தரச்சிறப்புமிக்க ஆங்கிலப் பாடசாலைகளிலே கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். சமூகத்தின் அடிமட்டங்களில் வாழ்ந்த வர்க்கத்தினர் தமது தாய்மொழிப் பாடசாலைகளிலே கல்வி கற்றனர்.

அமைப்பு நிலையில் ஆங்கிலமொழிப் பாடசாலைகளே வளம்மிக்க பாடசாலைகளாக விளங்கின. நூலகம், நவீன விளையாட்டுக்கள், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்கும் வாய்ப்பு, சேக்ஸ்பியரின் நாடகங்களை நடிக்கும் வாய்ப்பு முதலியவை ஆங்கிலமொழிவழிக் கல்லூரிகளிலே பயில்வோருக்கு மட்டுமே கிடைக்கப்பெற்றன. ஆங்கிலமொழிப் பாடசாலைகளோடு ஒப்பிடும் பொழுது சுதேசமொழிப் பாடசாலைகள் பல்வேறு பின்னடைவுகளை அனுபவித்து வந்தன.

குடியேற்றவாதம் உருவாக்கிய ஆங்கிலமொழிப் பாடசாலைகள் தாய்மொழியல்லாத வேற்றுமொழி கற்றோரைக்கொண்ட சமூக முரண்பாட்டை உருவாக்கியது. அரசநிலையில் வேறு மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றவர்களே அனுகூலமுடையவர்களாயிருந்தனர். அவர்களுக்கே அரச உத்தியோக வாய்ப்பும் அரச நிருவாகத்துடன் தொடர்புபடும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றன. இந்நிலையானது ஆங்கிலமொழியைக் கல்லாதவர்களிடத்து தாழ்வுச்சிக்கலை ஏற்படுத்தியது.

கிறிஸ்தவ மிசனெறிமாரால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு பிரித்தானிய அரசின் ஆசீர்வாதம் தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெற்றது. ஆங்கிலக்கல்வியாலும், கிறீஸ்தவ சமயத்தைப் பின்பற்றச் செய்வதாலும் ஆங்கில ஆட்சிக்கு விசுவாசமான பிரசைகளை உருவாக்க முடியும் என ஆட்சியாளர் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.

தேசிய சமயங்களின் மறுமலர்ச்சியிலும் அதன் வழிமுன்னெடுக்கப்பட்ட கல்வியிலும் ஈடுபட்டோர் ஆங்கிலக்கல்வியையும்

கிறிஸ்தவ சமயத்தையும் "அறிவார்ந்த" கண்ணோட்டத்தில் நோக்கினார். ஆங்கிலக்கல்வி அறிவுப் பெருக்கத்துக்கு இட்டுச்செல்லும் என்று கருதிய ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து வண்ணை நகரில் சைவ ஆங்கில கலாசாலையை நிறுவினார். அவரிடம் மேலோங்கியிருந்த அறிவுத்தேடலே விவிலிய வேதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கத் தூண்டியது. யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தமை போன்று தென் - இலங்கையில் இருமொழிப் பௌத்த பாடசாலைகள் தோற்றம்பெற்றன.

இவ்வாறாகத் தோற்றம்பெற்ற இருமொழிப் பாடசாலைகள் மரபுவழிச் சமூக நிரலுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கும் மத்தியதர வகுப்பினரின் ஆக்க விரிவுக்குத்துணை நின்றது. ஆங்கில அறிவுடைய மத்தியதர வகுப்பினரை ஒரே பிரிவிலும் ஒற்றைப் பரிமாணத்திலும் அடக்கிவிட முடியாது. மத்தியதர வகுப்பினரின் ஒரு சாரார் தமது தாய்மொழியில் எழுத்தறிவு அற்றோராய் முற்றிலும் ஆங்கிலமொழிவழிக் கல்விக்கு உட்பட்டவர்களாய் அமைந்திருந்தனர். ஆனால், இருமொழிப் பாடசாலைகளிலே கல்வியூட்டம் பெற்ற மத்திய தரவகுப்பினர் இருமொழியாற்றல் கொண்டவர்களாகவும், தேசியமொழிகளை வளம்படுத்தும் எழுத்தாக்க ஆற்றல் கொண்டவர்களாகவும் விளங்கினர். தமிழ் மரபில் திருவாளர்கள் ம.வே.திஞானசம்பந்தபிள்ளை, இலங்கையர்கோன், து.வைத்திலிங்கம், பண்டிதர் சச்சிதானந்தன், கலைப்புலவர் நவரத்தினம், மகாகவி உருத்திரமூர்த்தி, இ.முருகையன் என்றவாறு பலரை இவ்வகையிலே குறிப்பிட முடியும்.

நான்கு அரை நூற்றாண்டுகளுக்கு மேல் இலங்கையிலே குடியேற்றவாத ஆட்சி நீடித்து நிலைத்திருந்தவேளை தாய்மொழிகள் வேர் அறுந்துவிடாது காப்பாற்றப்பட்டமைக்கு மரபுவழி ஆசிரியர்களின் பங்கு சிறப்பானதாகும். கிறிஸ்தவ மிசனெறிமார் மதம் பரப்பும் நோக்குடன் அடிப்படைத் தாய்மொழி அறிவை முன்னெடுத்துச் சென்றமையும் தேசியமொழிகள் பலம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது.

குடியேற்றவாத ஆட்சியினர் உயர்கல்வி வழங்குவதால் அதிக அக்கறை காட்டவில்லை. மிசனெறிமாரால் ஒழுங்கமைக்கப்பட்ட உயர்கல்வி அமைப்பு சமயநோக்கையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆங்கிலேயர் இலங்கையில் மேற்கொண்ட உயர்கல்வி நடவடிக்கைகள் இங்கிலாந்தையும் இலண்டன் பல்கலைக்கழகத்தையுமே குவியப்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. 1921ஆம் ஆண்டில் இலங்கையில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தலையே நோக்கமாகக் கொண்டிருந்தது.





பிரித்தானிய ஆட்சியினர் இலங்கையின் தொழில்நுட்பக்கல்வி விரிவாக்கத்திலும் அதிக அக்கறை காட்டவில்லை. தொழில்நுட்பத் துறையில் இலங்கையை இங்கிலாந்தை நம்பியிருக்கும் நாடாகவே தக்கவைக்க முயன்றனர். இந்நிலை பிரித்தானியாவின் உற்பத்திப் பொருட்களை நுகரும் நிலைக்கும் அப்பொருள்கள் மீது தங்கியிருக்கும் நிலைக்கும் சுதேச மக்களை ஏற்படுத்தியது. இங்கிலாந்தின் மேலாதிக்கத்தைக் கட்டமைப்புச் செய்வதற்கும் இது உறுதுணையாக அமைந்தது. இலங்கையில் தொடர்வண்டிப் போக்குவரத்தை அரசு ஏற்படுத்தியவேளை அதற்குரிய நீராவி இழுவைப் பொறியை இயக்குவதற்கு இங்கிலாந்திலிருந்தே ஓட்டுனர்கள் கொண்டு வரப்பட்டனர்.

குடியேற்றவாதக் கல்வி இருமைத் தன்மை கொண்ட உளவியல் நிலைப்பாடுகளை இலங்கையிலே தோற்றுவித்தது. ஆங்கிலம் கற்றவர்களிடத்து ஒருவித உயர்வுச்சிக்கலையும், தாய்மொழி கற்றவர்களிடத்துப் பொது நிகழ்ச்சிகளிலே தாழ்வுச் சிக்கலையும் ஏற்படுத்தியது. ஆங்கிலம் கற்றவர்கள் பொது மேடைகளில் தமக்கு தேசிய மொழிகளிலே பேசிக்கொள்ள முடியாது என்று சொல்வதன் வாயிலாகப் பெருமைப்பட்டுக் கொண்டனர்.

பொதுப் பணிமனைகளில் ஆங்கிலத்திலே பேசி பல அனுகூலங்களை அனுபவித்துக்கொண்டனர். அவர்கள் தமது குடும்ப மொழியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தினர். பிள்ளைகள் தேசிய மொழிகளிலே பேசிக்கொள்வதை அவர்கள் விரும்பிக் கொள்ளவில்லை. ஆனால் முரணுரையாக அவர்களே பொதுமக்களுக்குரிய அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்கிக்கொண்டனர். ஆங்கிலமொழி அறிவு அக்காலத்தைய அரசியல் தலைமைத்துவத்துக்குரிய அடிப்படைகளில் ஒன்றாக அமைந்தது.

ஆங்கிலம் கற்று ஆங்கிலப்பண்பாட்டினால் இழுவிசைக்கு உட்பட்டோர் சுதேசப் பழக்கவழக்கங்களையும் தாழ்வாகக் கருதினர். அவை பிற்போக்கானவை என்று புலக்காட்சிக்கொண்டனர்.

அதேவேளை இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வந்த தாராண்மைவாத ஊட்டம் பெற்ற அறிஞர்கள் இந்நாட்டுப் பண்பாட்டுக் கூறுகள் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தினர். அவ்வகையில் எமர்சன் ரெனன் பிரபு, ரி.டபிள்யு, றைஸ் டேவிஸ், வில்லியம் கெய்கர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

குடியேற்றவாத ஆட்சியில் "ஆங்கிலம், மேலும் ஆங்கிலம், சிறந்த ஆங்கிலம்" (English, More English, Better English) என்ற கருத்து வலிமையுடன் மேலெழலாயிற்று. 1881ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் நிகழ்ந்த வர்த்தக மந்தம் அரசின் கல்வி மீதான ஈடுபாட்டைக் குறைத்ததாயினும் கிறீஸ்தவ மிசனெறிமார் தொடர்ந்தும் ஆங்கிலக்கல்வி ஈடுபாட்டில் அக்கறை செலுத்தி வந்தனர்.

1929ஆம் ஆண்டில் அரசு வெளியிட்ட நிருவாக அறிக்கையில் ஆசிரியத்துவம் தொடர்பான ஒரு முக்கிய கருத்து வெளியிடப்பட்டிருந்தது. இலங்கையின் தாய்மொழிப் பாடசாலைகளிலும், ஆங்கிலப் பாடசாலைகளிலும் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் பயிற்சி அற்றவர்களாகவும் ஒப்பீட்டளவிற் குறைந்த தராதரமுடையவர்களாக இருத்தலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலை இலங்கையின் மனிதவள ஆக்கத்திலே பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியமை என்பது குறிப்பிடத்தக்கது.

குடியேற்றவாதம் "பிரித்தாளும்" செயற்பாடுகளைக் கொண்டிருந்தது. தேசிய இனங்களுக்கும், மொழிகளுக்கும், மதங்களுக்குமிடையே மோதல்கள் உருவாக்கப்பட்டன. அரசியற் சுதந்திரத்தின் பின்னரும் நாடுகளில் இனமோதல்களும், குழப்பங்களும் நீடித்த வண்ணமுள்ளன. மேலும், குடியேற்ற நாடுகளுக்குக் கிடைக்கப்பெற்ற அரசியற் சுதந்திரத்தை அந்நாடுகளில் உள்ள மேட்டுக்குடியினரே பெருமளவில் அனுபவித்து வருகின்றனர். கல்வி தொடர்பான தீர்மானங்களும் மேட்டுக்குடியினருக்குச் சார்பாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✠✠✠



# அரசியற் சுதந்திரமும் இலங்கையின் கல்வி வளர்ச்சியும்

இலங்கையின் அரசியற் சுதந்திரம் பொருண்மிய நிலையிலும் பண்பாட்டு நிலையிலும், தேசிய இனங்களின் நிலையிலும், சமூகத்தின் அடித்தள மக்களின் வாழ்க்கை நிலையிலும் முற்றான விடுதலையாக அமைந்ததா என்பது உரத்த கேள்விக்குரியது. பொதுவாகக் குடியேற்ற நாடுகள் பெற்ற அரசியற் சுதந்திரம் என்பது ஆட்சி அதிகாரத்தைத் தேசிய உயர்ந்தோர் குழாத்தினருக்கு அதாவது மேட்டுக்குடியினருக்குக் கையளித்த செயற்பாடாகவே காணப்படுகின்றது. இவர்களது நோக்கையும் நலன்களையும் அடிப்படையாகக் கொண்டே சுதந்திரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கல்விச்சீர்திருத்தங்கள் பெரும்பாலும் அமைக்கப்பெற்றன.

இலங்கையின் கல்வி தொடர்பான 1950ஆம் ஆண்டிலே சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளைத் தொடர்ந்து 1951ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பாராளுமன்ற அரசியலில் பொதுமக்களின் வாக்கு-

களைப் பெற்றுக்கொள்ளல் என்ற செயற்பாட்டில் உணர்ச்சியூட்டப்படக்கூடிய அம்சமாகமொழி இருந்தமையால், கல்விச் சீர்திருத்தங்களில்மொழி முக்கியத்துவம் பெறலாயிற்று. குறித்த கட்டளைச் சட்டத்துக்குக்கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் தாய்மொழியைக் குவியப்படுத்தின. உயர்நிலைப் பாடசாலைகளில் தாய்மொழியைக் கல்வி மொழியாகக் கொண்டு வருதல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது. தமிழ் அல்லது சிங்களம் கல்விமொழியாக இருந்துவரும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பித்தல் என்பதும் சேர்க்கப்பட்டது. விரும்பின் தேசிய மொழிகளைக் கற்பதற்குரிய ஏற்பாடுகளும் முன்மொழியப்பட்டன.

**பாடசாலைகள் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டன.**

1. ஆரம்பப் பாடசாலை அல்லது முதனிலைப் பாடசாலை - பாலர் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை.
2. பொதுக்கல்விக்குரிய கனிட்ட பாடசாலை. அல்லது இள இடைநிலைப் பாடசாலை - ஆறாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்புவரை.
3. சிரேட்ட உயர்நிலைப் பாடசாலை அல்லது முதுஉயர் நிலைப்பாடசாலை இவை இரண்டாண்டுகளைக் கொண்டனவாய் சிரேட்டப் பாடசாலைத் தகுதிப் பத்திரத்துக்கு (SSC) மாணவர்களைத் தயார் செய்வனவாய் அமையும்.
4. கல்லூரிகள் - இவை இரண்டு ஆண்டுகளைக் கொண்டவையாகவும், உயர்தரப் பாடசாலைத் தகுதிப்பத்திரத்துக்கு (H.S.C) மாணவர்களைத் தயார் செய்வனவாகவும் அமையும்.

1951ஆம் ஆண்டைத் தொடர்ந்து பலதுணைச் சீர்திருத்தங்கள் கல்வியிலே மேற்கொள்ளப்பட்டன. கட்டாயக்கல்வி 14 வயது என்றும் 16 வயது என்றும் தளம்பல் நிலைகளை அடைந்தது. எட்டாம் வகுப்பு நிறைவடையும் பொழுது மாணவரை கலை விஞ்ஞானம் என்ற வகைப்படுத்தல்களுக்குக் கொண்டு செல்லல் 1972ஆம் ஆண்டின் கல்விச்சீர்திருத்தம் வரை தொடர்ந்து சென்றது.

1956ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமும் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும், மதக்குழுக்களின் கட்டுப்பாட்டிலிருந்த பாடசாலைகளை அரச முகா-





மைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்படும் நடவடிக்கைகளைத் தூண்டின. 1960ஆம் ஆண்டில் சகல தனியார் மற்றும் மதக்குழுப் பாடசாலைகளையும் அரச முகாமைத்துவத்தின் கீழ்கொண்டுவரும் சட்டமியற்றப்பட்டது. ஒரு சில புகழ்பெற்ற மதக்குழுப் பாடசாலைகள், மட்டும் அரச நிதி உதவியின்றி சுயமாக இயங்குவதற்கு முடிவெடுத்தன. தொடர்ந்து மதக்குழுக்களால் நடத்தப்பட்டுவந்த ஆசிரியர் கலாசாலைகளும் அரசாங்கத்தினாற் பொறுப்பேற்கப்பட்டன.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றமையைத் தொடர்ந்து, தமிழர்களது கல்வியில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படலாயின. திருநெல்வேலியில் இயங்கிவந்த சைவாசிரிய கலாசாலை, நல்லூரில் கிறிஸ்தவ மிசனரில் இயக்கப்பட்டு வந்த ஆசிரியர் கலாசாலை கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை ஆகியவை அரசாங்கத்தினால் மூடப்பட்டன.

இந்நிகழ்ச்சியால் ஆரம்பப் பாடசாலைகளிலே கற்பிப்பதற்குரிய ஆசிரியர்களின் வழங்கல் பாதிப்புக்கு உள்ளானது. தொடர்ந்து வந்த காலங்களில் எதுவித உளவியலறிவுமற்ற தொண்டர் ஆசிரியர்களே தமிழ்மொழிமூல ஆரம்பப் பாடசாலைகளிலே கடமையாற்ற வேண்டிய அவல நிலையை ஏற்படுத்தியது. தமிழ்மொழியில் அடிப்படை மொழித்திறன்களில் அந்த நிகழ்ச்சி தொடர்ச்சியான பின்னடைவுகளை ஏற்படுத்தியது.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றமையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளின் "மீள் ஒழுங்குபடுத்தல்" (Reorganization) என்ற செயற்பாட்டினால் தென்பகுதியிலே பல தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டன. மேலும், இந்தச் செயற்பாட்டினால் பெருந்தோட்டத்துறைப் பாடசாலைகளும், கல்வியும் நேர்நிலையான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை.

1962ஆம் ஆண்டிலே கல்விச்சீர்திருத்தத்தின் பொருட்டு "தேசிய கல்வி ஆணைக்குழு"வொன்று அமைக்கப்பட்டது. இவர்களின் விதப்புரையின்படி பாடசாலைகள் கனிட்ட வித்தியாலயம் எனவும் சிரேட்ட வித்தியாலயம் எனவும் பாகுபடுத்தப்படும். கனிட்ட வித்தியாலயத்தின் கீழ்ப்பிரிவு ஒன்று தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையும் மேற்பிரிவு ஆறாம்வகுப்புத் தொடக்கம் எட்டாம்வகுப்பு

வரையும் அமையும். இதைத் தொடர்ந்து இடம்பெறும் சிரேட்ட பாடசாலைகள் நான்கு வகையான கல்வியை வழங்குமாறு ஒழுங்கமைக்கப்படும்.

1. விஞ்ஞானக்கல்வி
2. விவசாயக்கல்வி
3. பொறி முறைக்கல்வி
4. மக்கள் பண்பியலும் வர்த்தகமும்

உயர்ந்தோர் குழாத்தின் (Elite) நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சீர்திருத்தமாகவும், இன்னொரு புறம் இனவாத நோக்கில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தமாகவும் தேசியகல்வி ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் அமைந்தன. மேலும், வறுமையிலும், பின்தங்கிய வாழ்வாதார நிலையிலும் வாழும் சிங்களமக்கள், தமிழ்மக்கள், மற்றும் பெருந்தோட்டத்துறையில் வாழும் தொழிலாளர்களின் நலன்கள், முதலியவற்றை இந்த ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் பெருமளவு கருத்திலே கொள்ளவில்லை.

சுதந்திர இலங்கையின் கல்விச்சீர்திருத்தங்களில் நாட்டின் ஒட்டுமொத்தமான தேசிய நலன்களைக் காட்டிலும், குறுகிய அரசியல் நலன்களே பெருமளவில் மேலோங்கி நின்றன. சீர்திருத்தங்களை மேற்கொண்டோர் மேலைநாட்டுக்கல்வி மாதிரிகைகளை இறக்குமதி செய்து இணைக்க முயன்றார்களே அன்றி இலங்கையின் நடப்பியல் நிலவரங்களையும், பன்மை இயல்புகளையும் கருத்திலே கொண்டு அனைத்தையும் உள்ளடக்கிய வினைத்திறன் கொண்ட ஆக்கங்களைத்தரத் தவறியமை வரலாற்றின் வழியாக மேலெழுச்சி கொள்கின்றன.

✠✠✠



# 1972ஆம் ஆண்டின் கல்விச்சீர்திருத்தங்கள்

இலங்கையின் கல்விவரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட எழுச்சி கொண்ட நடவடிக்கையாக 1972ஆம் ஆண்டின் சீர்திருத்தங்கள் அமைந்தன. பின்வரும் நிகழ்ச்சிகள் இச்சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்குரிய பின்விசைகளாக அமைந்தன.

1. 1970 ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட இளைஞர் கொந்தளிப்பும், படித்த இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதமேந்தியமையும்.
2. படித்த இளைஞர்களிடத்து நிலவிய வேலையின்மைப் பிரச்சினை.
3. கல்வி உலகத்துக்கும் வேலை உலகத்துக்குமிடையே நிலவிய பாரிய இடைவெளி.
4. இலங்கை எதிர்கொண்ட சென்மதி நிலுவை நெருக்கடி.
5. கல்வியிலே தொடர்ந்து கொண்டிருக்கும் குடியேற்றவாத எச்சங்கள் கண்டிப்புக்கு உள்ளாக்கப்பட்டமை.

6. இடதுசாரிகள் ஆட்சியில் இடம்பெற்றமை.
7. க.பொ.த உயர்தரத்தேர்வில் சித்தியடைவோர் அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்கப்பெற முடியாத இடைவெளி.
8. பாடசாலைக் கலைத்திட்டம் முற்றிலும் ஏட்டுக்கல்வி மயப்பட்டதாக இருந்தமை.
9. நாட்டின் புவியியல் வளங்களை மேம்படுத்துவதற்குக் கல்வி பெருமளவிலே பங்களிப்புச் செய்யாமை.
10. கல்வி முறைமை முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அதிக விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டமை.

மேற்கூறிய அவதானிப்புக்களை உட்கொண்டும் சோசலிச நாடுகளின் கலைத்திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டும் 1972ஆம் ஆண்டின் கலைத்திட்டம் உருவாக்கம் பெற்றது. கல்வியில் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு பாடசாலை செல்லும் வயது ஐந்திலிருந்து ஆறாக உயர்த்தப்பட்டது. பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் பின்வருமாறு அமைக்கப்பட்டன.

1. முதல் ஐந்து ஆண்டுகள் ஆரம்பக்கல்வி - 1 தொடக்கம் 5 ஆம் வகுப்புக்கள்.
2. ஆறுமுதல் ஒன்பதாம் வகுப்பு முடிவில் பொதுக்கல்விக்கான தேசிய சான்றிதழ் - NCGE தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்தல்.
3. பத்தாம் மற்றும் பதினொராம் வகுப்பு முடிவில் உயர்பொதுச் சான்றிதழ் கல்விக்கென HNCE மாணவர்களைத் தயார் செய்தல்.

ஆரம்பப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைப்பு வலியுறுத்தப்பட்டது. சமயம், கல்விமொழி சுற்றாடல், கணிதம், இரண்டாம் வகுப்பிலிருந்து ஆங்கிலமொழி முதலியவை ஒன்றிணைந்த வகையிலே கற்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாடவிதான அபிவிருத்தி நிலையம் கொழும்பில் இருந்தவாறே இவற்றை நெறிகை செய்தது.

இடைநிலை (6முதல் 9 வரை)க் கலைத்திட்டத்தில் பலபுதிய மாற்றங்கள் உட்புகுத்தப்பட்டன. முன்னைய இடைநிலைக் கலைத்திட்டத்திலே காணப்பட்ட கலை - விஞ்ஞானம் என்ற பாகுபாடுகளும் ஒழிக்கப்பட்டன. அனைத்து மாணவர்களும் கலை, விஞ்ஞானம், அழகியல் என்ற அனைத்தையும் கற்கும் "சமநிலைக் கலைத்திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. சமூக விஞ்ஞானப் பாடங்களின் ஒன்றிணைப்பால் உருவாக்கப்பட்ட "சமூகக்கல்வி"ப் பாடம் கலைத்திட்டத்திலே வைப்புச்செய்யப்பட்டது. அவ்வாறே இயற்கை விஞ்ஞானப் பாடங்களின் இணைப்பால் உருவாக்கப்பட்ட "ஒன்றிணைந்த விஞ்ஞானமும்" அறிமுகம் செய்யப்பட்டது. சமயம், கல்வி மொழி, ஆங்கிலம் ஆகியவை தொடர்ந்து கற்பிக்கப்படலாயிற்று.





இக்கலைத்திட்டத்தின் சிறப்புப் பண்பாகக் குறிப்பிடப்படுவது இரண்டு முன்றொழிற் பாடங்களின் அறிமுகமாகும், கல்வி உலகை வேலை உலகுடன் ஒன்றிணைப்பதற்கும், தொழில்சார்ந்த புலக்காட்சியை மாணவர்களிடத்து மேம்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. முன்றொழிற்படிப்பு ஒன்றில் இலங்கையின் மரபுவழித். தொழில்கள் பற்றிய அறிவைப்பெற்றுக் கொள்ளவும் மற்றைய முன்றொழிற் படிப்பிற் பாடசாலையின் சூழலில் உள்ள பயனுள்ள ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கற்பதற்கும் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டன. முன்றொழிற் படிப்புக்களுடன் நாட்டின் வளங்கள் என்ற பாடப்பரப்பும், கேத்திர கணிதப் பொறிமுறை வரைதல் என்ற பாடப்பரப்பும் அறிமுகம் செய்யப்பட்டன. தொழில் ஆற்றல்களை நாட்டின் வளங்களுடன் ஒன்றிணைப்பதற்கும், பொருள் உற்பத்தியின் ஒன்றிணைந்த கூறாக இருக்கும் வடிவமைப்புக்களை வரைந்து கொள்வதற்கும் முறையே நாட்டின் வளங்கள், மற்றும் கேத்திர கணிதபொறி முறை வரைதற் பாடங்கள் துணை நின்றன. இந்த முயற்சிகள் இலங்கையின் கலைத்திட்ட வரலாற்றிலே புதிய அனுபவங்களாக அமைந்தன. அவை ஒருவகையில் மார்க்சியக்கல்விச் செயற்பாட்டின் செல்வாக்கினையும் புலப்படுத்தி நின்றன.

பத்தாம் பதினொராம் வகுப்புக்கலைத்திட்டம் உயர்கல்விக்கு மாணவர்களை வேறுவேறாக ஆற்றுப்படுத்தல் செய்யுமாறு ஒழுங்கமைக்கப்பட்டது. எந்தப் பிரிவிலே கற்போரும் உள்ளீடாக அடிப்படைப் பாடங்களைக் கற்கவேண்டுமென கொள்ளப்பட்ட ஏற்பாடு அறிவின் வேறுபட்ட கூறுகளை உட்கருக்கள் வாயிலாக ஒன்றிணைத்து மேம்படுத்தவதற்குரிய கலைத்திட்டம் சார்ந்த நடவடிக்கையாயிற்று.

பல்வேறு புத்தாக்கங்களை உட்பொதிந்த கலைத்திட்டமாக இது அமைக்கப் பெற்றாலும் பல குறைபாடுகளையும் மட்டுப்பாடுகளையும் கொண்டதாகக் காணப்பட்டது. அவை வருமாறு:

1. பள்ளிக்கூடம் செல்லும் வயது ஐந்திலிருந்து ஆறாக உயர்த்தப்பட்டவேளை முன்பள்ளிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யாமை குழந்தைகளின் கல்வியிலே பல்வேறு இடர்களைத் தோற்றுவித்தது.
2. தாய்மொழிக்கல்வி பற்றிய தெளிவற்றநிலை காணப்பட்டது. "தாய்மொழி" என்பதற்குப் பதிலாக "கல்விமொழி" என்ற தொடரே ஆவணங்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளது.
3. பாடசாலைக் கல்வியின் நீட்சி சுருக்கப்பட்டமை, பாடசாலைச் சுற்றுவட்டத்தை முடித்து வெளியேறியவர்களிடத்துப் பல்வேறு இடர்களைத் தோற்றுவித்தது.
4. புதிய பாடங்களைக் கற்பிப்பதற்குப் போதுமான ஆசிரியர் அணி இல்லாமை நடைமுறை நெருக்கடிகளைத் தோற்றுவித்தது. மாற்றீடாக தனியார் கல்விநிலையங்கள் புற்றீசல்கள் போல் வளரத் தொடங்கின.
5. முன்றொழிற் பாடங்கள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. செயலளவில் அப்பாடங்கள் ஏட்டுக்கல்வியின் விசைகளையே கொண்டிருந்தன.

புதிய மாற்றங்களின் ஒவ்வாமைக்காரணமாக 1977 ஆம் ஆண்டில் மீண்டும் பழைய க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் முதலாம் ஏற்பாடுகள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வாறான குழப்பமான நிலைகளின் தொகுப்பாக இலங்கையின் கல்வி வரலாறு வளர்ச்சியுறலாயிற்று.

1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கை தொடர்ந்தும் இலங்கையின் உயர் குழாத்தினரது புலக்காட்சியை வெளிப்படுத்தியது. கல்வி உள்ளடக்கத்திலே பெரும் மாற்றங்களை மேற்கொள்ளாது தொடர்ந்த இருப்பையே அது வலியுறுத்தியது. பாடசாலை ஒழுங்கமைப்பை அவர்கள் பின்வருமாறு வகைப்படுத்தினர்.

1. ஆரம்பநிலை - ஒன்று தொடக்கம் ஐந்து வரை.
2. கனிட்ட இடைநிலை - ஆறு தொடக்கம் எட்டுவரை.





3. சிரேட்ட இடைநிலை - ஒன்பது தொடக்கம் பதினொன்று வரை
4. கல்லூரி நிலை - பன்னிரண்டு தொடக்கம் பதின்மூன்று வரை.

இலங்கையின் கல்வியில் தொடர்ந்து நெருக்கடிகள் நிலவிருதலை 1990ஆம் ஆண்டில் வெளிவந்த இளைஞர் தொடர்பான சனாதிபதியின் அறிக்கைச் சுட்டிக்காட்டியது. கல்வியிலே மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆணைக்குழு குறிப்பிட்டது. சிறப்பாக கொழும்பிலுள்ள வளம்மிக்க பாடசாலைகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் "கொழும்புக்குப் பால் எங்களுக்குக் கெக்கரிக்காய்" என்ற தொடரின் எடுத்தாளுகையாற் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், ஆங்கில அறிவு என்ற வாளை (கடுவ)ப் பயன்படுத்தி கிராமப்புற இளைஞர்களின் முன்னேற்றம் தறித்து வீழ்த்தப்படுதலும் குறிப்பிடப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் விதப்புரைகளை அடியொற்றி உருவாக்கப்பட்டது. தேசியகல்வி ஆணைக்கு கல்வியின் நோக்கம், கல்வி நிலையங்கள், மாணவர் அனுமதி, ஆசிரியத்துவம் கலைத்திட்டம், கல்விவளம் முதலாம் துறைகளில் கொள்கைகளை உருவாக்கும் ஆணையுடன் செயற்படுகின்றது. இக்குழுவினரது புலக்காட்சியும் கல்வியில் அடிப்படை மாற்றங்களை மேற்கொள்ளாத மிதமான அணுகுமுறைகளையே முன்னெடுப்பதாகவுள்ளது.

1972ஆம் ஆண்டுக்கலைத் திட்டம் தந்த அனுபவங்களும், தெறிப்புக்களும் முக்கியமானவை. ஆனால், பின்வந்த கலைத்திட்ட ஆக்கங்கள் அந்த அனுபவங்களை எவ்வளவு தூரம் உள்வாங்கிப் புத்தாக்களை ஏற்படுத்திக்கொண்டன என்பது கேள்விக்குரியதாகவே அமைகின்றது.

அக்கலைத்திட்டத்தினால் உருப்பெருக்கம்பெறத் தொடங்கிய தனியார் கல்வி நிலையங்கள் இன்றைய கல்விச்செயல் முறையின் தவிர்க்கமுடியாத கூறுகளாகிவிட்டன.

1972ஆம் ஆண்டுக்கலைத் திட்டத்தினால் தூண்டப்பெற்ற புத்தாக்க முயற்சிகளும், புதிய கண்டுபிடிப்பு உந்தல்களும் கல்வியியலாளர் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்து வருகின்றன.

✠✠✠

# 1997ஆம் ஆண்டின் கல்விச்சீர்திருத்தங்கள்

மேற்படி சீர்திருத்தம் பின்வரும் செயற்பரப்புக்களை உள்ளடக்கியதாக அமைந்தது.

1. ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பல் அல்லது சீலமேம்பாடு.
2. தேசத்தைக் கட்டியெழுப்பல் அல்லது தேசிய மேம்பாடு.
3. பொதுத் தேர்ச்சிகளை மேம்படுத்தல் அல்லது கைகைமைகளைக் கட்டியெழுப்பல்.
4. குறித்துரைக்கத்தக்க ஆற்றல்களை மேம்படுத்துதல் அல்லது சிறப்பான ஆற்றல்களை மேம்படுத்தல்.

சமூகத்தில் மனிதர் என்ற முக்கியத்துவத்தை மீண்டும் கட்டியெழுப்புதலும், தேசத்தை மீள்கட்டுமானத்துக்கு உள்ளாக்குதலும், பராமரிக்கப்படத்தக்க வாழ்க்கை முறையை வழங்குதலும் புதிய சீர்திருத்தத்தின் சிறப்பார்ந்த உள்ளடக்கங்களாகின்றன. "கற்றலுக்காகக் கற்றல்" என்பதும்





ஒவ்வொருவரையும் தனக்குத்தானே கற்பித்துக்கொள்ளும் ஆசிரியராக்குதலும் முனைப்புப் பெற்றுள்ளன.

கல்வி வாய்ப்புக்களை விரிவாக்குதல் மேலும் முனைப்புப் பெற்றுள்ளது. ஐந்துவயது தொடக்கம் பதினான்கு வயது வரை கட்டாயக் கல்வியை வழங்குதலும், முறைசார் கல்வியைப்பெறத் தவறியவர்களுக்கும், இடைவிலகியோருக்கும் மாற்று வகையான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருத்தலும் முக்கியம்பெற்றுள்ளன. ஆயினும் அவற்றுக்குரிய நடைமுறை வடிவங்கள் போதுமானவையாக இல்லை.

"கல்வித்தரமேம்பாடு" என்ற கருத்து புதிய சீர்திருத்தத்திலே வலியுறுத்தப்பட்டாலும் அவை இன்னமும் நடைமுறை வடிவங்களைப் பெற்றுள்ளனவா என்பது வினாவுக்குரியது. ஆரம்பநிலைக் கலைத்திட்டம் முதன்மைநிலை ஒன்று, இரண்டு, மூன்று என வகுக்கப்பட்டாலும், வாழ்க்கைக்குப் பொருத்தமற்றதும், நவீன உலகின் சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியாததுமான ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரீட்சையின் மிகையாதிக்கம் முதன்மைநிலை ஒன்றிலே ஆரம்பித்து விடுகின்றது.

6ஆம் 7ஆம் தரங்களை உள்ளடக்கிய கனிட்ட கலைத்திட்டப்பாட உள்ளடக்கமும், வழங்கப்படும் அனுபவங்களும் அடுத்து முதன்மை பெறுகின்றது. ஒன்பதாம் தரத்தோடு நியமமான கல்விச் சுற்று வட்டத்தையும் கட்டாயக்கல்வி எல்லையையும் விட்டு வெளிச்சென்று நியம உலகின் அறை கூவல்களை எதிர்கொள்ளும். மாணவர்களுக்குப் போதுமானவையாக அக்கலைத்திட்டம் அமையவில்லை. தொடர்கல்வி, மேற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி தொடர்பான உள்ளடக்க அறிமுகங்கள் கனிட்ட இடைநிலைக் கலைத்திட்டத்தில் வறிதாகவேயுள்ளன. உலகின் நவீன வளர்ச்சிக் கோலங்களை, அடியொற்றிய தனிநபர் செல்வக்குவிப்பையும், வறுமைக்கோட்பாட்டின் கீழ்வாழ்வோரின் எண்ணிக்கை பெருக்கமடைதலையும் அறியாத இருள்நிலையைக் கலைத்திட்டம் உருவாக்கி விடுகின்றது. முரண்பாடுகளை அறியாத செயலூக்கம் குன்றிய (Passive) இளைஞர் சமூகத்தையே கலைத்திட்டம் உருவாக்கி விடுகின்றது.

சிரேட்ட இடைநிலைக் கல்விச்சாதாரண மட்டத்தில் அடிப்படைப் பாடங்களுடன் தெரிவுப் பாடங்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளமை 1972 ஆம் ஆண்டுக்கு முந்திய கலைத்திட்ட

அமைப்பை நோக்கித் திரும்புவதாகவேயுள்ளது. சிரேஷ்ட இடைநிலைக்கல்வி உயர்தரத்தில் கலை, வர்த்தகம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்ற கற்கைநெறிகள் முன்மொழியப்பட்டாலும், தொழில்நுட்பப் பாடநெறி கவனிப்பாரற்ற நிலையிற் காணப்படு-கின்றது. இப்பாடநெறியை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் வறிதாகவேயுள்ளன.

புதிய கல்விச்சீர்திருத்தத்தில் முன்மொழியப் பெற்றுள்ள தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் மற்றும் சீர்மிய நடவடிக்கைகள் முற்-போக்கானவையாகக் காணப்பட்டாலும், அவற்றுக்கான அமைப்பு வசதிகளும், ஆளணி வசதிகளும் உரிய முறையில் உருவாக்கப்பட-வில்லை. மேலைப்புல சீர்மிய நுட்பங்களின் மட்டுப்பாடுகளை அறிந்து கொள்ளுதலின் முக்கியத்துவம் உணர்த்தப்படல் வேண்டும். எமது பாரம்பரியமான சீர்மிய நுட்பங்களைப் புடமிட்டுப் பயன்-படுத்தவேண்டிய தேவையும் முன்னெழச் செய்யப்படுதல் காலத்தின் தேவையாகவுள்ளது. மேலும், சீர்மியம் என்பது ஒரு வழிமுறையே அன்றி முடிந்த முடிபு அன்று.

பாடசாலையை நிலைக்களனாகக் கொண்ட முகாமைத்துவம், ஆசிரிய மேம்பாடு, பாடசாலைமட்டக் கணிப்பீடு முதலியவை புதிய சீர்திருத்தத்தில் முன்மொழியப்பட்டிருந்தாலும், நடைமுறையில் பொதுப்பாடசாலையின் செயற்பாடுகள், கோட்டக்கல்வி அலுவல-கம் மற்றும் வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் வலுவான கட்டுப்பாடுகளின் கீழ் இயங்கும் நிலையே காணப்படுகின்றது. 1960ஆம் ஆண்டில் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற-மையைத் தொடர்ந்து அவை தமது தன்னிலை அதிகார வலுவைப் படிப்படியாக இழந்துவந்துள்ளன. கல்விப்பணியாட்சியின் வலு-வான பிடிக்குள் அவை கொண்டுவரப்பட்டுவிட்டன. அதேவேளை இலங்கையில் இயங்கிவரும் சர்வதேசப் பாடசாலைகள் பெருமளவு சுயாதீனத்துடன் இயங்கிவருதல் கல்வி நிலையில் முரண்பாடாக-வேயுள்ளது.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து விரிவாக்கம்பெறத் தொடங்கிய உலகமயமாக்கல், இலங்கையின் கல்விச் செயல்-முறையிலே பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. ஆங்கிலமொழி மீண்டும் கல்விமொழியாதலும், உலக சந்தையினை நோக்கிக் கல்விச்செயற்பாடுகள் இடம்பெறுதலும் மேலெழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன.

✠✠✠





# இலங்கையின் கல்விச் சட்டங்கள்

கல்வியை ஒழுங்கமைப்பதற்குரிய அதிகார மூலவூற்றாக சட்டவாக்-கங்கள் அமைகின்றன. இலங்கை வரலாற்-றிலே தேவைக்கருதி அவ்வப்போது பல சட்டங்கள் இயற்றப்பட்டு வந்தன. குடி-யேற்றநாட்டு ஆட்சிக்காலத்தில் இயற்றப்-பட்டவை "கட்டளைச் சட்டங்கள்" (Ordi-nances) எனப்படும். சுதந்திரத்தின் பின்னர் (1948) ஆக்கப்பட்டவை ACTS மற்றும் LAWS என்றும் அழைக்கப்படும் நடை-முறை விதிகள் கட்டளைகள் துணை விதிகள் அரசின் நிருவாகப் பிரிவினரால் அவ்வப்போது உருவாக்கப்படுகின்றன. இலங்கையின் கல்விச் சட்டவியல் வரலாற்-றில் இவ்வாறான துணைச் சட்டவாக்-கங்கள் பெருமளவிலே காணப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து கல்வி தொடர்பான பல்வேறு கட்டளைச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவை வருமாறு.

| ஆண்டு | கட்டளைச் சட்ட இலக்கம் | உள்ளடக்கம் |
|---|---|---|
| 1884 | 33 | பாடசாலைகளின் பராமரிப்பு |
| 1894 | 7 | யாழ்ப்பாணக் கல்லூரியின் பணிப்பாளர் சபை |
| 1900 | 2 | சட்டக்கல்வியின் பேரவை |
| 1902 | 6 | யாழ் இந்துக்கல்லூரி பணிப்பாளர் சபை |
| 1905 | 3 | இலங்கை மருத்துவக் கல்லூரியின் பேரவை |
| 1906 | 5 | நகரப் பாடசாலைகள் |
| 1907 | 8 | கிராமம் மற்றும் பெருந்தோட்ட மாவட்டங்களின் கல்வி, |
| 1913 | 13 | பரி தோமஸ் கல்லூரியின் அறங்காவலர் சபை |
| 1914 | 2 | யாழ்ப்பாணக் கல்லூரியின் பணிப்பாளர் சபைத் திருத்தம் |
| 1915 | 2 | சென் தோமஸ் கல்லூரியின் முன்னைய கட்டளைச் சட்டத்திருத்தம் |
| 1916 | 34 | நகரப்பாடசாலைகள் கட்டளைச் சட்டத்திருத்தம் |
| 1917 | 8 | கிராமப் பாடசாலைக் கட்டளைச் சட்டத்திருத்தம் |
| 1917 | 14 | மிசனெறிமாரின் கல்வி நடவடிக்கை தொடர்பான மேற்பார்வை |
| 1920 | 1 | கல்வி நடவடிக்கைகளுக்கு மேலும் நலவசதிகளை அளித்தல் |
| 1920 | 15 | 1920 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கக் கட்டளைச் சட்டத்துக்கு திருத்தம் |
| 1925 | 7 | பரமேஸ்வரக்கல்லூரியின் யாப்பு |
| 1926 | 23 | சைவவித்திய விருத்திச் சபை |
| 1927 | 6 | உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒய்வு ஊதியம். |





| | | |
|---|---|---|
| 1927 | 26 | மருத்துவம் மற்றும் சுகாதார சேவைத் திணைக்களம் |
| 1931 | 29 | பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியம் தொடர்பான முன்னைய கட்டளைச் சட்டத்திருத்தம். |
| 1932 | 20 | 1920 ஆம் ஆண்டின் முதலாவது கட்டளைச் சட்டத்திருத்தம். |
| 1933 | 13 | பாடசாலை ஆசிரியர்கள் ஓய்வூதியம் தொடர்பான கட்டளைச் சட்டத்திருத்தம். |
| 1933 | 19 | 1920 ஆம் ஆண்டின் முதலாவது கட்டளைச் சட்டத்திருத்தம் |
| 1939 | 28 | இளம் குற்றவாளிகளுக்குப் பயிற்சிப் பாடசாலை |
| 1939 | 31 | கல்வி |
| 1939 | 56 | இலங்கை மருத்துவக் கல்லூரி |
| 1941 | 10 | மாத்தறை இராகுலக் கல்லூரி ஆளுனர் சபை |
| 1941 | 48 | இரத்தினபுரி சிவாலி வித்தியாலயத்தின் ஆளுனர் சபை. |
| 1941 | 53 | ஆசிரியர் ஓய்வூதியம். |
| 1942 | 20 | இலங்கைப் பல்கலைக்கழகம் |
| 1942 | 24 | கல்வி - அவசரகால உதவி |
| 1943 | 8 | இளங்குற்றவாளிகள் பாடசாலை திருத்தம் |
| 1943 | 15 | வித்தியாலங்காரச்சபை |
| 1943 | 26 | இலங்கைப் பல்கலைக்கழகம் திருத்தம் |
| 1944 | 2 | அனுலா வித்தியாசாலை ஆளுனர் சபை |
| 1945 | 44 | ஸ்ரீ சுமங்கல பாடசாலை முகாமைத்துவம் |
| 1946 | 19 | இலங்கை மூஸ்லீம் புலமைப் பரிசில் நிதிய நம்பிக்கைச் சபை |
| 1946 | 28 | மானிப்பாய் இந்துக் கல்லூரி பணிப்பாளர் சபை |
| 1947 | 26 | கல்வி திருத்தம் |

இலங்கையின் அரசிற் சுதந்திரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சட்டவாக்கங்கள் வருமாறு.

| ஆண்டு | சட்டம் | உள்ளடக்கம் |
|---|---|---|
| 1951 | 5 | கல்வித் திருத்தம் |
| 1952 | 3 | பாடசாலை ஆசிரியர் ஓய்வூதியம் - திருத்தம் |
| 1953 | 43 | கல்வித் திருத்தம் |
| 1956 | 19 | முஸ்லிம் மகளிர் கல்லூரி பணிப்பாளர் சபை |
| 1956 | 20 | மகா மன்தின்த வித்தியாலங்கார சபை |
| 1956 | 36 | இலங்கைப் பல்கலைக்கழகம் - திருத்தம் |

1956 ஆம் ஆண்டிலே கல்வி தொடர்பான பலதுணைச் சட்டவாக்கங்களும் இடம்பெற்றன. 1957 ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் சட்டவாக்கங்கள் கல்வியியலில் இடம்பெற்றன.

| ஆண்டு | சட்டம் | உள்ளடக்கம் |
|---|---|---|
| 1957 | 23 | பாடசாலை ஆசிரியர் ஓய்வூதியத் திருத்தம் |
| 1958 | 37 | கல்வித் திருத்தம் |
| 1958 | 45 | வித்தியோதய பல்கலைக்கழகம் மற்றும் வித்தியலங்காரப் பல்கலைக்கழகம். |
| 1959 | 17 | வித்தியா நிகேத சன்றக்ஸக சபை |
| 1960 | 5 | உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் - சிறப்பு வகை |
| 1961 | 8 | உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் - மேலதிக வகை |
| 1961 | 12 | இலங்கைப் பல்கலைக்கழக திருத்தம் |
| 1961 | 38 | பாடசாலை ஆசிரியர் ஓய்வூதியம் - திருத்தம் |
| 1964 | 34 | பாடசாலை ஆசிரியர் ஓய்வூதியம் |
| 1966 | 20 | உயர் கல்வி |
| 1968 | 16 | புத்த சர்வகதர்மபிதய |
| 1968 | 25 | பரீட்சைத் திணைக்களத்தை சுயாதீனமான ஆணைக்குழுவாக மாற்றுவதற்குரிய சட்டம். |





1939ஆம் ஆண்டின் கல்விக்கட்டளைச்சட்டம் 1973ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டுக்கும் 1973ஆம் ஆண்டுக்குமிடையே மேற்குறிப்பிட்ட பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. கல்விச்செயற்பாடுகள் நிலைத்தவை அன்று. சமூகநோக்கும் தேவைகளும் மாற்றமடைய பொருண்மியக் கோலங்களில் மாற்றங்கள் நிகழ கல்விச் சட்டங்களும் அவற்றுக்கு இயைந்தவாறு மாற்றப்படலாயின. இலங்கையில் அரசியல் நடவடிக்கைகள் - சிறப்பாக இனத்துவம் சார்ந்த அரசியல் விசைகளும் கல்விச்சட்டவாக்கங்களிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், உலக நிகழ்ச்சிகளின் தேவைகளும் அறைகூவல்களும் சட்டவாக்கங்களுக்குப் பின்புலமாக அமைந்து வருகின்றன.

1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டம் தேசியகல்வி நிறுவகம் பற்றிய விபரிப்பைக் கொண்டுள்ளது. இலங்கை அரசின் அதிகாரப் பங்கீடு தொடர்பான 13வது திருத்தத்தின்படி தேசியகல்வி நிறுவகம் ஆக்கம் பெற்றது. அந்த நிறுவனத்தின் இலக்குகளாகப் பின்வருவன குறிப்பிடப்படுகின்றன.

- ☆ கல்வி தொடர்பான திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சருக்கு மதியுரை செய்தல்.
- ☆ கல்வியியலின் சிறப்புத்துறைகளில் பின்பட்டப்படிப்பு.
- ☆ கல்விச் செயலமைப்புத் தொடர்பான கற்கைகளை மேம்படுத்துதல்
- ☆ கல்வித்தொழில் நுட்பத்தில் புத்தாக்கங்கள்
- ☆ தகைமைசார் ஆளணியினரின் மேம்பாடு
- ☆ சிறப்பார்ந்த சேவை வழங்கல்
- ☆ அமைச்சரால் அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- ☆ ஒப்புமையான ஏனைய நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்துதல்.

அந்நிறுவனத்தின் புலமை அதிகாரணங்களாகப் பின்வருவன குறிப்பிடப்பட்டுள்ளன.

- ☆ கல்வியிற் பட்டப்படிப்பு மற்றும் தகைமைச் சான்றிதழ் படிப்பு தொடர்பான சட்டவிதிகளை விதித்தல்.
- ☆ இணைந்த கல்லூரிகளின் மாணவர்களைப் பதிவு செய்தல்.
- ☆ தேர்வுகள் நடத்துதல்.
- ☆ பின்பட்டக்கல்வி
- ☆ வாண்மை நிறுவனங்களை நிறுவுதல்.
- ☆ ஆசிரியர் கல்லூரிகளைப் பதிவு செய்தல்.

இச்சட்டத்தின் 7ஆம் பிரிவில் பேரவை பற்றியும் 10 ஆம் பிரிவில் புலமைச் செயற்பாட்டு அவை பற்றியும் 11ஆம் பிரிவில் பணிப்பாளர் நாயகத்தின் நிமனம் பற்றியும் 12ஆம் பிரிவில் நிறுவக உத்தியோகத்தர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாடசாலைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் தேசியக்கல்வி நிறுவகத்தின் அதிகார வரம்புக்குள் அடக்கப்படவில்லை. ஆனால், இன்று அதுவே நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடாகிவிட்டது. இதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கச் சட்டம் கல்வியியற் கல்லூரிகளை நிறுவுதல் தொடர்பானதாகும். இவை தேசியக்கல்வி நிறுவனத்துடன் இணைந்ததாகத் தொழிற்படும். கல்வியற் கல்லூரிச்சபை ஏழு உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கப்படும். இச்சபை கல்லூரிகளின் முகாமைக்குரிய அதிகாரங்களைக் கொண்டிருக்கும். கல்வியியற் கல்லூரிக்குரிய புலமை அதிகாரங்கள் சட்டத்தின் 12ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளன. தேசியக்கல்வி நிறுவக சட்டத்தின்படி மேற்படி நிறுவகத்தின் அங்கீகரிப்புக்கு உள்ளான பட்டங்கள், சான்றிதழ்கள் முதலியவற்றை வழங்க முடியுமாயினும் அவை ஆசிரியத்துவத்துக்குரிய சான்றிதழ்களாக அந்நிறுவகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கையின் கல்விச்சட்டவாக்கங்களில் அடுத்து முக்கியத்துவம் பெறுவதில் 1991ஆம் ஆண்டின் தேசியக்கல்வி ஆணைக்குழு பற்றிய சட்டமாகும். கல்வி தொடர்பான கொள்கையாக்கங்களைப்





பரிந்துரை செய்தல் இந்த ஆணைக்குழுவின் சிறப்பார்ந்த பொறுப்பாகும். கல்வியின் இலக்குகள் குறிக்கோள்கள், கல்வியின் கட்டமைப்பு முன்பள்ளிக்கல்வி, ஆரம்பக்கல்வி, இரண்டாம் நிலைக்கல்வி, உயர்கல்வி, முறைசார்கல்வி, முறைசாராக்கல்வி, சிறப்புக்கல்வி, வளர்ந்தோர்கல்வி, வாண்மை மற்றும் சமயக்கல்வி தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்குரிய பரிந்துரைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.

இந்த ஆணைக்குழுவுக்குரிய உறுப்பினர்கள் பதவி வழியாகவும் சனாதிபதியாலும் நியமனம் பெறுவர். பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது மாகாணசபை உறுப்பினர்களோ இந்த ஆணைக்குழுவில் உறுப்பினராக இயங்க முடியாது. இவற்றைத் தொடர்ந்து மேலும் பல சட்டவாக்கங்கள் இடம்பெற்றன.

பாடசாலை அபிவிருத்திச்சபை தொடர்பான 1993 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை மேற்பார்வை செய்வத்றகென உருவாக்கப்பட்ட 1997ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

புதிய சட்டங்களை ஆக்குதலும் பழைய சட்டங்களிலே திருத்தங்களைக் கொண்டுவருதலும் சமூக வளர்ச்சியோடும் அபிவிருத்தியோடும் இணைந்த நடவடிக்கைகளாகும். இலங்கை போன்ற பன்மைச் சமூகங்கள் வாழும் நாடுகளில் உருவாக்கப்படும் சட்டங்கள் தேசிய இனங்களின் நலன்களுக்கு ஊறு செய்யாதவாறு இருத்தலே மக்களாட்சிப் பண்பின் உன்னத வெளிப்பாடாக இருக்கும். சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது அவற்றுக்குக் கொடுக்கப்படும் "பொருள் கோடல்கள்" அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பொருள் கோடல்களும் தேசிய இனங்களின் நலன்களையோ விளிம்பிலுள்ளோரின் (Marginals) நலன்களையோ பாதிப்பதாக இருத்தலாகாது.

கல்விச்செயற்பாடுகளை வளமாகவும், வினைத்திறனுடனும் இயக்கிக்கொள்வதற்குச் சட்டவாக்கங்கள் அடிப்படையானவை. சட்டவல்லுனர்களதும் கல்விவல்லுனர்களதும் இணைந்த முயற்சிகள் சிறந்த சட்டவாக்கங்களை முன்னெடுப்பதற்கு அடிப்படையாக வேண்டப்படுகின்றன.

✠✠✠

# அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தமும் கல்வியும்

இலங்கை அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் (1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது) மாகாண சபைகளின் தோற்றத்துக்கு வழிவகுத்தது. திருத்தத்தின் மூன்றாவது அனுபந்தம் கல்வி என்ற தலைப்பில் அமைந்துள்ளது. தேசிய பாடசாலைகள் மற்றும் சிறப்புப் பாடசாலைகள் ஆகியவை மாகாணசபைகளின் கீழ்வரமாட்டா என்பது முதற்கண் குறிப்பிடத்தக்கது. அவை தவிர்ந்த ஏனைய பாடசாலைகளையும் முன்பள்ளிகளையும் முகாமை செய்தலும், மேற்பார்வை செய்தலும் என்ற செயற்பாடுகள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டாலும் கல்வியின் தரத்தை உறுதிசெய்யும் பொருட்டு கல்வி அமைச்சுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பட்டம் பெற்றோரையும், கல்வியற் கல்லூரிகளின் டிப்ளோமா சான்றிதழ் பெற்றோரையும் மாகாண சபைகள் ஆசிரிய சேவைக்கு இணைத்துக் கொள்ளமுடியும். A,B,C பாடசாலைகளுக்குரிய அதிபர்களை நியமிப்பதற்கோ ஆசிரியர்களுக்குப் பயிற்சிக் கலாசாலைகளை அமைப்பதற்கோ மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. கல்வி அமைச்சின் நிபந்தனைகளுக்கு அமைய மாகாணசபைகள் பாடசாலைச் சபைகளை அமைக்கலாம். அவற்றை மேற்பார்வையும் செய்யலாம். அத்துடன், திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தலாம். மேலும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிருவாகப் பணியாளர்களின் செயற்றிறன்களை மதிப்பீடு செய்யவும் முடியும். தேசியக்கல்வி நிறுவகத்தின் அனுமதியுடன் ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சியையும் வழங்கலாம்.

பரீட்சைகளைப் பொறுத்தவரை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் உள்ளூர் பரீட்சைகளை நடத்த முடியும். முறைசாராக்கல்வி நிழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பாடசாலைக் கலைத்திட்டம் மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடங்களில் உள்ளூர் வேறுபாடுகளை தேசியகல்வி நிறுவகத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளலாம்.

பாடசாலைக் கட்டங்கள், நூலகங்கள், விளையாட்டுத் திடல்கள் முதலியவற்றை அமைக்கும் செயற்பாடுகளில் மாகாணசபைகள் ஈடுபட முடியும். பாடசாலைத் தளபாடங்கள் மற்றும் கற்பித்தல் சாதனங்களைத் தெரிவுசெய்து விநியோகிக்கவும் முடியும். கல்வி அமைச்சரால் குறிப்பிடப்பட்டவை தவிர ஏனைய விஞ்ஞான உபகரணங்களையும் விநியோகிக்க முடியும். கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் பாடநூல்களை ஆக்கவும் வழங்கல் செய்யவும் ஏற்பாடுகள் தரப்பட்டுள்ளன.

தேசிய நூலக சேவையின் வழிகாட்டலுக்கு அமைய பாடசாலை நூலகங்களை ஒழுங்கமைக்கவும் மேம்படுத்தவும் முடியும்.

திறனாய்வு நோக்கிலே பார்க்கும்பொழுது மாகாண சபைகளுக்குரிய கல்வி அதிகாரங்கள் பெருமளவிற் கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலிருப்பதைக் காண முடிகின்றது. மாகாணசபைகள் தமது பாடசாலைக்குரிய கலைத்திட்டத்தை உருவாக்கவோ செயற்படுத்தவோ முடியாது. கலைத்திட்டம், பரீட்சைகள், உயர்கல்வி, நிருவாக நியமனங்கள், ஆசிரியர்பயிற்சி என்றவாறு கல்வியின் பிரதான துறைகள்

அனைத்தும் மத்திய கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

ஆழ்ந்து பார்க்கும்பொழுது கல்வியில் அதிகாரப் பங்கீடு என்பது வறிதாகிய நிலையிலே காணப்படுவதுடன் மத்திய மயப்பட்ட அதிகாரங்கள் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளமை தெளிவாகப் புலப்படுகின்றது.

மேலும் இந்தச் செயற்பாடுகள் கல்வியில் இருமைத் தன்மையையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளன. வளமும், சிறப்பும், புகழும் பெற்ற தேசிய பாடசாலைகளும் சிறப்புப் பாடசாலைகளும், மாகாண சபைகளின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை என்ற நிலை மாகாணசபைகள் தொடர்பான கல்விசார் புலக்காட்சிகளைத் தாழ்ந்த நிலைக்குத்தள்ளி விடுகின்றது. காலனித்துவ காலத்திலே காணப்பட்ட பாடசாலை அந்தஸ்து ஏற்றத்தாழ்வுகளுக்கு இவை மீண்டும் புத்துயிர்ப்பை வழங்கியுள்ளன.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் புறவயமான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது. கல்வியியல் நோக்கு, அதிகாரப்பங்கீடு தொடர்பான அரசியல்நோக்கு, பிரதேசங்களுக்கிடையே காணப்படும் தனித்துவமான இயல்புகள், பண்பாடுகளின் பன்முகத் தன்மைகள், வளங்களின் இயல்புகள் முதலாம் பன்முகமான பரிமாணங்களை அடியொற்றி, பதின்மூன்றாவது திருத்தம் ஆராயப்பட வேண்டியுள்ளது.

✠✠✠



# பெருந்தோட்டத்துறைக்கல்வி வரலாறு

குடியேற்றவாதம் மேற்கொண்ட உழைப்பின் பறிப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு அதன் முகாமைத்துவமும் கல்விச் செயற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட்டன. பெருந்தோட்டத் துறையினருக்கான கல்வி நெடுங்காலமாகப் புறக்கணிப்புக்கு உள்ளானதாகவே இருந்து வந்தது. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்குதல் தாம் மேற்கொண்ட உழைப்புப் பறிப்புக்கு எதிரானதாகவும் ஆபத்தானதாகவும் இருக்குமென பெருந்தோட்ட முதலாளிகள் கருதினர். அவ்வாறு கல்வி வழங்குவதாயினும் தரம் குறைந்த கல்வி பற்றியே அவர்கள் சிந்தித்தனர்.

இலங்கையின் சமூக மேம்பாடு மற்றும் கல்வி மேம்பாடுகள் தொடர்பான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்த சேர் பொன் அருணாசலம் மற்றும் சேர் பொன் இராமநாதன் ஆகியோர் பெருந்தோட்டத் துறையில் உள்ள சிறார்களுக்குக் கல்வி வழங்கப்படல் வேண்டுமென்ற கருத்துக்களை வலியுறுத்-

தினர். பிரித்தானிய அரசின் உயர்நிருவாகிகளாக இலங்கையிலே கடமை புரிந்தோரும், கொள்கை வகுப்பதற்கான ஆலோசனை கூறுவோரும் தோட்ட நிருவாகத்தின் கீழ் கல்வி இயங்குதல் வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தனர். முதலாளிகளின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கப்படலாகாது என்பது குடியேற்றவாதத்தின் நோக்கமாக இருந்தது.

பெருந்தோட்டத்துறைப் பாடசாலைகள் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளிலும் வளங்களிலும் பின்னடைவுகளைக் கொண்டிருந்தவேளை கல்வித்தரத்திலும் தாழ்நிலைகளைக் கொண்டிருந்தன. அமைப்பு நிலையில் அவை "லயன் காம்பரா" பள்ளிக்கூடங்களாகவே இருந்தன. தோட்ட நிருவாகமே பாடசாலைக்குரிய அறையை வழங்கியதுடன் ஆசிரியர்களையும் நியமனம் செய்தது. இவற்றுக்குரிய ஆசிரியர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலிருந்தே வரவழைக்கப்பட்டனர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆசிரியர் கலாசாலைகளிலே கற்ற வளமான ஆசிரிய ஆளணியினர் இருந்தபோதும் தோட்ட நிருவாகத்தினர் இலாபநோக்கம் கருதி அங்கிருந்து மிகக்குறைந்த கல்வித் தராதரமுடையவர்களையே ஆசிரியர்களாக வரவழைத்தனர். பத்தாம் வகுப்பு சித்தியடையாதவர்கள் கூட இவ்வகையில் ஆசிரிய நியமனம் பெற்றனர். இந்நிகழ்ச்சி பெருந்தோட்டத்துறையின் கல்வித்தரத்தைப் பின்னடையச் செய்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்தே அப்பாடசாலைகளிலே "பலதரக் கற்பித்தல்" இடம்பெற்று வந்தது. அதாவது, ஓர் ஆசிரியர் ஒரே அறையில் அனைத்து வகுப்புக்களையும் கொண்ட மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டியிருந்தது. முதலாம் வரிசையில் முதலாம் வகுப்பு, இரண்டாம் வரிசையில் இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வரிசையில் மூன்றாம் வகுப்பு என அது தொடர்ந்து செல்லும். இவ்வாறாகப் பலதரக் கற்பித்தலுக்குரிய சிறப்புப் பயிற்சிகள் எதுவுமின்றி ஆசிரியர்கள் தொழிற்பட்டமையாலும் கல்வித்தரம் பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிட்டது. இந்நிலை அங்குள்ள மாணவர்கள் இடைநிலைக் கல்வியைத் தொடர்வதற்கும் மட்டுப்பாடுகளைக் கொடுத்தது. கற்கும் விருப்பு மாணவரிடத்துக் காணப்பட்டாலும் சீரிய உளவியல் ஊக்குவிப்புகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்குரிய உளவியல் அறிவும் ஆசிரியர்களிடத்துக் காணப்படவில்லை.





இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலக் கணக்கெடுப்பின்படி பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களின் எழுத்தறிவுவீதம் குன்றியிருந்ததுடன், சிறார்களில் நான்கில் மூன்றுபங்கினர் பள்ளிக்கூட வசதிகள் அற்ற நிலையில் இருந்தமையும் குறிப்பிடப்படுகின்றது. தொடக்க காலத்திலிருந்தே பெருந்தோட்டத் துறையின் கல்வியில் இருமைப்பாடு வளர்ச்சியுற்று வந்தது. அதாவது, பெருந்தோட்டத் துறையின் பெரிய கங்காணிமார் தமது பிள்ளைகளுக்கு நகரப் பாடசாலைகளில் தரம்மிக்க கல்வியை ஆங்கிலமொழி மூலம் வழங்குவதிலே கவனம் செலுத்தி வந்தனர். கல்வியால் உயர்ச்சி பெற முடியும் என்ற புலக்காட்சி அவர்களிடத்து மேலோங்கியிருந்தது.

பெருந்தோட்டத் துறையில் இயங்கிவந்த மிசனெறிமாரின் பாடசாலைகளிலும் இருமைப்பாங்கு காணப்பட்டது. தரச்சிறப்புமிக்க பாடசாலைகளை நகரங்களில் அமைத்த மிசனெறிமார் தோட்டங்களை அண்மித்த இடங்களில் வளங்குன்றிய சிறிய பாடசாலைகளையும் இயக்கினர். கல்வியின் வழியாக மதமாற்றம் செய்தலே அவர்களின் சிறப்பார்ந்த நோக்கமாக அமைந்தது. தோட்டத்துரைமார் கிறிஸ்தவர்களாக இருந்தமையால் மிசனெறிமாரின் பாடசாலைகளுக்கு ஆதரவும் வழங்கினர்.

பெருந்தோட்டத் துறையின் தொழிலாளர்கள் பெருமளவில் தமிழர்களாக இருந்தமையால், டொனமூர் ஆட்சிக்காலத்திலிருந்து வளர்ச்சிபெற்ற இலங்கை உயர்குழாத்தினரது இனவாதநோக்கு அவர்களின் கல்வியைப் பாதித்தது. பெருந்தோட்டத்துறையிலுள்ள தமிழ் மாணவர்களின் போதனாமொழி சிங்களமாக இருக்க வேண்டுமென பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரியா வலியுறுத்தியவேளை அந்த முனைப்பு நியாயமற்றது எனவும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைக்கு எதிரானதெனவும் அமரர் சௌ.தொண்டமான் அவர்களும் மற்றும் மலையகக் கல்விமான்கள் அனைவரும் ஒன்றிணைந்து அதனை நிராகரித்தனர்.

பெருந்தோட்டங்களை அரசாங்க மயப்படுத்தும் முயற்சியிலும் குறுகிய இனவாதப் போக்குகள் இழையோடி நின்றன. நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் பதினெட்டுப் பாடசாலைகள் 1978ஆம் ஆண்டில் மூடப்பட்டமைக் குறிப்பிடத்தக்கது. 1958ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் நிகழ்ந்து வந்த இனக்கலவரங்கள் தொழிலாளர்களின் மனோநிலையையும் கல்வியையும் பாதிப்புக்கு உள்ளாக்கின.

*1964*ஆம் ஆண்டிலும் *1974*ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள் குடியுரிமை நிலையிலும் கல்விநிலையிலும் பல செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. தோட்டப் பாடசாலைகளைப் படிப்படியாக அரசாங்கம் கையேற்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகத் தொடங்கின. பெருந்தோட்டத்துறை ஆசிரியர்களின் வாண்மைப் பயிற்சிக்கென ஓர் ஆசிரிய கலாசாலையும் தேசியகல்வியியற் கல்லூரி ஒன்றும் திறக்கப்பட்டன. அங்குள்ள பாடசாலைக்கென மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய நியமனங்களும் கல்வியிலே குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றதாயினும், கல்வியின் தரத்தை முன்னெடுப்பதற்கும் உயர்கல்வியை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கும் ஒன்றிணைந்த நடவடிக்கைகள் மேலும் வேண்டப்படுகின்றன.

இலங்கையின் தேசிய உற்பத்தித்துறையில் பெருந்தோட்டத் தொழிலாளர் சிறப்பார்ந்த வகிபங்கைக் கொண்டிருக்கின்றனராயினும் அவர்களின் பங்களிப்புக்குரிய நலன்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை. கல்விவசதிகள், மருத்துவவசதிகள், இருப்பிடவசதிகள், முதலியவை இன்னமும் பின்னடைந்த நிலையிற் காணப்படுகின்றன.

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி மற்றும் முறைசாராக்கல்வி முதலிய துறைகளிலே காத்திரமான நடவடிக்கைகளைப் பெருந்தோட்டத் தொழிலாளர் வேண்டி நின்கின்றனர்.

✠✠✠



# தொழில்நுட்பக்கல்வி வளர்ச்சி

சமூக இயல்பை அடியொற்றியும், சமூக இயக்கங்களை அடியொற்றியும் தொழில்நுட்பஅறிவு படிமலர்ச்சி கொள்கின்றது. இலங்கையின் தொழில்நுட்பக்கல்வி வரலாற்றில் "பெருநிலைத் தொழில்நுட்ப அறிவு", "நுண்பாகத் தொழில்நுட்ப அறிவு" என்ற இருநிலை வளர்ச்சிகளைக் காணலாம். அறிவு வரலாற்றில் நுண்பாகத் தொழில்நுட்ப அறிவே முதலில் வளர்ச்சி கொள்ளலாயிற்று. உற்பத்திக்குரிய சிறிய தொழில்நுட்பக் கருவிகளை ஆக்குதலும் தொழிற்படுத்துதலும் நுண்பாகத் தொழில்நுட்ப அறிவின் செயல் வடிவங்களாயின. நிலமானிய சமூக அமைப்பின் வளர்ச்சியோடு நீர் நிலைகளை அமைத்தல், நீர்ப்பாய்ச்சற் கால்வாய்களை அமைத்தல், அரசமாளிகைகளை அமைத்தல் கருங்கற் கோயில்களை நிருமாணித்தல் பெரும் தாது கோபங்களைக் கட்டுதல் தொடர்பான பெருநிலைத் தொழில்நுட்ப ஆக்கங்கள் வளர்ச்சி பெறலாயின.

இலங்கையின் மரபுவழித் தொழில்நுட்ப அறிவும் வினைநுட்ப ஆற்றுகைகளும் வேலைத்தளங்களிலும் பட்டறைகளிலும் முதியோர் வழியாக இளைஞர்களுக்குக் கையளிக்கப்பட்டு வந்தன.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலே பாடசாலை முறைமை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவேளை ஏட்டுக்கல்வி முதன்மைப்படுத்தப்பட்டது. அக்கல்விமுறை இலங்கையின் வாழ்க்கை முறையோடும் வளங்களோடும் இணைவுறாத "அந்நியமாகிய" செயற்பாடாகவே அமைந்தது. மிசனெறிமாரின் கல்விச்செயற்பாடுகளும் ஏட்டுக்கல்விக்கே முதன்மை வழங்கின. பொதுக்கல்விக்கு வழியற்ற ஏழைகளுக்கே கைத்"தொழிற் பாடசாலைகள்" என்ற கண்ணோட்டமும் நிலவியது. இதன் அடிப்படையில் 1859ஆம் ஆண்டிலே வண.ஜே.தேஸ்டன் என்பார் கொழும்பில் ஒரு கைத்தொழிற் பாடசாலையை நிறுவினார். குடியேற்றவாதம் உருவாக்கிய கல்விசார் மனோபாவங்கள் கைத்தொழிற் பாடசாலைகள் தரக்குறைவானவை என்ற கருத்தேற்றத்துக்கு வழிவகுத்தது. அதனால் அப்பாடசாலை மூடப்படலாயிற்று.

தொடக்க காலத்தில் கைத்தொழிற் பாடசாலைகளுக்கு அரச நிதிஉதவி கிடைக்காமையால், தாம் உற்பத்திசெய்த பொருள்களை விற்றே அப்பாடசாலைகள் தம்மைத் தாமே பராமரிக்க நேர்ந்தது. பின்னர் நிகழ்ந்த அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்களினால் கைத்தொழிற் பாடசாலைகள் அங்கீகாரிப்புக்கு உள்ளாக்கப்பட்டன. இதனால் 1870ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் கண்டி, காலி முதலிய இடங்களிலே கைத்தொழிற் பாடசாலைகள் அமைக்கப்பெற்றன. 1884ஆம் ஆண்டில் அமெரிக்க மிசனெறிமார் தெல்லிப்பழையில் ஒரு கைத்தொழிற் பாடசாலையை நிறுவியதுடன், தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதற்காக அங்கிருந்து ஒருவரை அமெரிக்காவுக்கு அனுப்பினர். இலங்கையில் வளர்ச்சி பெறத் தொடங்கிய புதிய தொழில்களை அடிப்படையாகக் கொண்ட செய்முறைப் பயிற்சியை உள்ளடக்கிய கற்பித்தல் நடவடிக்கைகள் கைத்தொழில் பாடசாலைகளிலே மேற்கொள்ளப்பட்டன. அச்சுவேலை, சப்பாத்துத் தயாரிப்பு, தளபாடத் தயாரித்தல் தையல் முதலியவை கற்பிக்கப்படலாயின.

தேயிலை, இறப்பர் போன்ற பணப்பயிர்களின் உற்பத்தியிலே அதீத மோகம் கொண்டிருந்த பிரித்தானிய அரசு இலங்கையின்





மரபுவழிப் பயிர்ச்செய்கை மேம்படுத்துவதற்குரிய கல்விசார் நடவடிக்கைகளிற் கூடிய கவன ஈர்ப்பைக் கொள்ளவில்லை. ஆயின், திரு.எச்.டபிள்யு, கிறீன் அவர்கள் பொதுப் போதனைப் பணிப்பாளராக இருந்தவேளை விவசாயப் பாடசாலையின் தேவையை வலியுறுத்தினார். தொடக்ககால விவசாயக்கல்வி இந்நாட்டின் மரபு வழிப்பண்பாட்டை அடியொற்றி உருவாக்கப்படாது ஒருவித காலனித்துவக் கண்ணோட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டமையால் பரந்துபட்ட வெற்றியைக் கொடுக்கவில்லை. 1901 ஆண்டில் கொழும்பு விவசாயப் பாடசாலை மூடப்பட்டமை மேற்குறித்த பண்பைப் புலப்படுத்தியது.

பிரித்தானிய அரசாங்கம் அமைத்த பண்ணைகளை அடியொற்றிப் "பண்ணைப் பாடசாலைகள்" அமைக்கப்பட்டமை இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து விரிவாக்கம் பெறலாயிற்று. தேசிய சமயங்களின் மறுமலர்ச்சி இயக்கங்களும் இலங்கையில் வளர்ச்சியுறத் தொடங்கிய தேசியவாதச் சிந்தனைகளும் விவசாயக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தின. சைவ வித்திய விருத்திச் சங்கத்தின் பாடசாலைகளில் விவசாயம் ஒருபாடமாகக் கற்பிக்கப்பட்டது.

பிரித்தானியாவின் புதிய கருத்து வளர்ச்சியின் தொடர்ச்சியாக பேராதனை, குண்டசாலை, வாரியப் பொலை, அனுராதபுரம், மகா இலுப்பல்லம, வவுனியா, சம்மாந்துறை, கரப்பிஞ்சா, புந்துனுவீவா, பதங்கலை, கொரணை, லபுதுவ, பிபிலை, வல்பிட்ட, அம்பேபுச, கிளிநொச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள அரச பண்ணைகளில் செயல்முறைகளுடன் இணைந்த பண்ணைப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. மக்கள் நலன்களிலும் ஆட்சியாளரின் நலன்களே இப்பண்ணைகளில் மேலோங்கியிருந்தமையால் அவை "துரைதோட்டங்கள்" என்றே அழைக்கப்பட்டன. (துரை, தொர, என்பவை எசமானைக் குறிப்பிட்டன)

தொழிற் பாடசாலைகளில் இருந்து தரத்திலும், பயிற்சியிலும் மேம்பட்ட தொழில்நுட்பப் பாடசாலைகளின் தேவையை சேர்.பொன் அருணாசலம் போன்ற ஆய்வறிவாளர்கள் அக்காலத்தில் வலியுறுத்தலாயினர். பிரித்தானிய அரசும் தமது குடியேற்ற நாடுகளிலே தொழில்நுட்பக் கல்வியின் தேவையை உணரலாயிற்று.

1893ஆம் ஆண்டிலே கொழும்பில் ஒரு தொழில்நுட்பப் பாடசாலை நிறுவப்பட்டது. தொழில்நுட்பப் பாடசாலை தொழில்நுட்பக் கல்லூரியாகப் பின்னர் படிமலர்ச்சி கொண்டது. இந்நாட்டின் அரச தேவைகளுக்குரிய பொறியாளர்கள், மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள், பொது வேலைக்குரிய தொழில்நுட்ப உதவியாளர்கள் முதலியோரைப் பயிற்றுவித்தலே ஆரம்பகாலத்து நோக்கங்களாக இருந்தன. டொனமூர் அரசியற்றிட்டம் இயக்கமுறத் தொடங்க கொழும்புத் தொழில்நுட்பக் கல்லூரி இலண்டன் பல்கலைக்கழகத்து எந்திரவியல் வெளிவாரிப் பரீட்சைக்கு இலங்கை மாணவரைத் தயார்ப்படுத்தும் செயற்பாட்டை மேற்கொண்டது. பின்னர் 1952ஆம் ஆண்டில் எந்திரிகளை பயிற்றுவிக்கும் பணி இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

எந்திரிகளுக்குத் துணைநிற்கக்கூடிய இடைநிலைத் தொழில் நுட்பவியலாளரின் தேவை நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டும் என்பது வலியுறுத்தப்பட அரசு அத்துறையிலும் கவனம் செலுத்தத் தொடங்கியது மொறட்டுவை, அம்பாறை, முதலாம் இடங்களில் தொழில்நுட்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.

இதேவேளை 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோற்றம் பெற்ற கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் காலி, யாழ்ப்பாணம், கண்டி, பதுளை, குருநாக்கல், அனுராதபுரம், கேகாலை முதலாம் இடங்களில் அமைக்கப்பட்டன. மரவேலை, உலோகவேலை, மின்னியல், மோட்டார் பொறிநுட்பவியல், சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல் முதலாம் துறைகளில் அடிப்படைப் பயிற்சிகள் அங்கே வழங்கப்பட்டன.

ஆங்கிலமொழியில் சுருக்கெழுத்து முறைமை கற்றவர்களுக்கு அக்காலத்தில் வேலை வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்பட்டன. தேசிய மொழிகளிலும் சுருக்கெழுத்தை உருவாக்க வேண்டுமென்ற முயற்சி மேலோங்க யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியிலே பணிபுரிந்த வண.டன் அடிகளார் 1898 ஆம் ஆண்டிலே தமிழ்ச் சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்து உதவினார். அதற்குப் பின்னர் சிங்கள மொழியில் திரு.ஏ.டபிள்யு களுவாராய்ச்சி என்பார் சிங்கள மொழியில் சுருக்கெழுத்து முறைமையை அறிமுகம் செய்தார். பின்னர் தேசிய மொழிகளிலே சுருக்கெழுத்துக்கல்வி பல நிலைகளிலே வளர்ச்சிபெறத் தொடங்கியது.





1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் வேலை வாய்ப்புக்கருதி வர்த்தகம், நிருவாகம், முதலாம் துறைகளிலே பட்டப்படிப்புக்களை உருவாக்கியும், விரிவாக்கியும் செயற்படலாயின. தொழில்நுட்பக்கல்வி தொடர்பாக பின்னர் வெளிவந்த ஞானலிங்கம் அறிக்கை அத்துறையில் மேலும் புதிய புலக்காட்சிகளை இலங்கையில் ஏற்படுத்தியுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகங்கள் புதிய புதிய தொழில்நுட்பக் கற்கைநெறிகளை உருவாக்கி வருகின்றன. இவ்வகையில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் பணிகள் தனித்துக் குறிப்பிடப்பட வேண்டியுள்ளன. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமும் புதிய புதிய தொழில்நுட்பப் பாடநெறிகளை அறிமுகப்படுத்தத் தொடங்கியுள்ளது.

"தாமே நிதி செலுத்திக் கற்கும் கற்கைநெறிகள்" (Self Financing Courses) என்ற திட்டத்தின் கீழ் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் பலபுதிய புதிய தொழில்நுட்பக்கற்கை நெறிகளை ஆரம்பித்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பம் பாடசாலை மட்டங்களில் இருந்து உயர்பட்டப் படிப்பு வரை வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

1970ஆம் ஆண்டிலிருந்து தொழில்நுட்பக்கல்வி தொடர்பான பின்பட்டக் கற்கை நெறிகள் பல உருவாக்கப்பட்டன. அந்தக் கற்கை நெறிகளை உருவாக்கிய நிறுவனங்கள் வருமாறு.

1. 1975ஆம் ஆண்டில் விவசாயம் தொடர்பான பின்பட்ட படிப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது.
2. 1976ஆம் ஆண்டில் மருத்துவத்துறைப் பின்பட்டப் படிப்பு நிறுவனம் அமைக்கப்பட்டது.
3. 1986ஆம் ஆண்டில் முகாமைத்துவம் தொடர்பான பின்பட்டப் படிப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கணனித் தொழில்நுட்பக் (ICT) கற்கை அமைப்பானது பட்டப்படிப்புக்களையும் வாண்மைக்கற்கை நெறிகளையும் வழங்கி வருகின்றது.

அரச அமைச்சுக்களும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், தொண்டு நிறுவனங்களும் தனியார் அமைப்புக்களும் பல்வேறுபட்ட தொழில்நுட்ப கற்கைநெறிகளை அறிமுகம் செய்துள்ளன. 1997 ஆம் ஆண்டில் தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சித் துறைக்கு விரிவான அடிப்படையிலான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொழில்நுட்பக்கல்வி என்பது தொழில்வாய்ப்புக்கான கல்வி என்ற ஒற்றைப் பரிமாண நோக்கு இலங்கையில் மேலோங்கியுள்ளமையால் அதன் பிற பரிமாணங்கள் நழுவவிடப்பட்டுவிட்டன. தொழில்நுட்பக்கல்வி மனித வளமேம்பாட்டுக்கு அடிப்படையானது.

அக்கல்வியின்றி நாட்டின் வளங்களை வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியாது. தேசிய உற்பத்திப் பெருக்கத்துடன் தொழில்நுட்பக்கல்வி நேரடியான இணைப்பைக் கொண்டுள்ளது. பொதுக்கல்விக்கும் தொழில்நுட்பக் கல்விக்குமிடையே இசைவும் இணக்கமும் இல்லாவிடில் தொழில்நுட்பக்கல்வி மட்டுப்பாடு கொண்டதாக மாறிவிடும்.

தொழில்நுட்பங்கள் மிகவேகமாக மாறிவரும் இயல்பு கொண்டுள்ளமையால் அக்கல்வியும் வேகமான புதுப்பித்தலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும். அல்லாவிடில் காலாவதியான தொழில் நுட்பக்கல்வியே வழங்கவேண்டி நேரிடும். எடுத்துக்காட்டாக, நவீன ஒலிப்பதிவுச் சாதனங்கள் சுருக்கெழுத்துக்கல்வியைக் காலாவதியாக்கிவிட்டன. நவீன கணனி எழுத்துத்தொழில்நுட்பம் எழுத்துக்கோர்க்கும் பழைய அச்சுத்தொழில்நுட்பக் கல்வியைக் காலாவதியாக்கி விட்டது.

தொழில்நுட்பக் கல்விக்குரிய கேள்வி அதிகரிக்கத் தொடங்கியுள்ளமையால் தனியார் நிறுவனங்கள் இலாபமீட்டும் நோக்குடன் இத்துறையில் முதலீடுகளைச் செய்து புதிய கற்கை நெறிகளை உருவாக்கி வருகின்றன. இவற்றின் காரணமாக உயர்நிலையான தொழில்நுட்பப் பாடநெறிகளைக் கற்பதற்கு அதிக கட்டணங்களைச் செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக பொருண்மிய வளம் குன்றிய மாணவர்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் உயிரியல் தொழில்நுட்பத்தின் (Bio Technology) அடிப்படையாகவே தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ள முடியுமென்று கல்வியியல் அறிஞர்கள் கருதுகின்றவேளை





இலங்கையில் இத்துறையின் முக்கியத்துவத்தைப் பலநிலைகளிலும் மீள வலியுறுத்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் உயிர் இரசாயனவியற் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இத்துறையில் மேற்கொண்ட பல ஆராய்ச்சிகளும், உற்பத்திகளும் ஊக்குவிப்பின்றிக் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

✠✠✠

# அழகியற்கல்வி வரலாறு

சமூக வாழ்க்கையின் அகநிலைப் புலப்பாடுகளைப் பொதிந்த அழகியலாக்கங்கள் உணர்ச்சிகளைப் பகிர்ந்துகொள்ளும் ஊடாட்டங்களுடன் தொடர்புடையவை, உளச்சுகம், வளப்பெருக்கம், கூட்டுணர்வு, நெறிப்பாடு முதலிய இலக்குகளுடன் அழகியற்கல்விச் செயற்பாடுகள் வளரலாயின. இலங்கையின் தொன்மையான அழகியற்கல்விச் செயற்பாடுகள் சடங்குகளுடன் இணைந்திருந்தன. இயக்கர், நாகர் என்ற தொல் குடிமக்களின் வாழ்க்கையில் சடங்குகள் சிறப்பிடம் பெற்றிருந்தன. வலுவை வழிபடும் சடங்குகள் இயக்கரிடம் காணப்பட்டன. வலு என்பது இயக்கம் என்று அழைக்கப்பட்டது. சம்ஸ்கிருத மயமாக்கலுக்கு முந்திய கிராமிய வழிபாட்டில் "வல்லியக்கர்" வழிபாடு வன்னிப் பிரதேசங்களில் குறிப்பிட்ட குழுக்களிடையே நிலவிவந்தது. நாகவழிபாடு வளப்பெருக்குச் சடங்குகளுடன் இணைந்திருந்தது. நாகம் வளப்பெருக்கின் குறிப்பீடாயிற்று.





இலங்கையின் தொல்குடியினரது ஒரு பிரிவினராக விளங்கிய வேடர்கள் யக்கு (Yaku) என்னும் தெய்வத்தை வழிபட்டனர். இத்தெய்வமும் வலுடன் தொடர்புடையதாக விளங்கியது. கிறிகோறகா (Kirikoraha) கோலமடுவே (Kolamaduwe) முதலாம் சடங்குகள், இசை நடனம் முதலாம் அழகியற் செயற்பாடுகளுடன் இணைந்திருந்தன. பௌத்த மதத்தின் வருகையும் பரவலும், சிங்கள மக்களின் அழகியலாக்கத்திலும், கையளிப்புக்களிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. பௌத்த மதத்தின் தேரவாதக் கருத்துக்கள் புலன் உணர்ச்சிகளைத் தூண்டி அருட்டிவிடக்கூடிய அழகியல் விசைகளுக்கு இடமளிக்கவில்லை. பௌத்த சூத்திரங்களை உச்சரித்துச் சொல்லும் பொழுது கூட எந்தவிதமான இசைப்பண்புகளும் விரவியிருக்கக் கூடாதென வலியுறுத்தப்பட்டது. (Kulatillake, 1982) இந்நிலையிற் மரபுவழி அழகியல் வடிவங்கள் தேரவாதத்துக்கு மாறுபாடான மகாயான சிந்தனைகளின் செல்வாக்கினுக்கு உட்பட்டு செப்பனிடப்பட்ட வடிவங்களாக வளர்ச்சியடையத் தொடங்கின. ஆயினும் சிங்களமரபில் கிராமிய வழிபாட்டுக்குரிய நாட்டார் அழகியல் மரபுகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இலங்கைத் தமிழர் மரபில் மூன்று விதமான அழகியற்கல்வி மரபுகள் காணப்பட்டன. அவையாவன:

1. நாட்டார் வழி அழகியற்கல்வி
2. குருகுல நிலையில் அழகியற்கல்வி
3. வைதிக மரபு அழகியற்கல்வி

நாட்டார் மரபு தழுவிய கூத்துக்கள், கரகம், காவடி, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மகிழடிப்பாடல்கள் முதலியவற்றை மூத்தோரிடமிருந்து முறைசாரா வகையில் (Non Formal) இளையோர் கற்று ஆற்றுகை செய்யும் தொன்மையான மரபு இன்றும் நிலவி வருகின்றது.

முழவு, தவில், நாகசுரம், பண்ணிசை, கருநாடக இசை, சிற்பக்கலை முதலியவற்றை குறித்த துறையில் புலமை கொண்டவரது இல்லத்திலிருந்து கற்றுக்கொள்ளும் தொன்மையான செயற்பாடு இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

சம்ஸ்கிருதக் கல்வியின் செல்வாக்குகள் வைதிகநெறி சார்ந்த அழகியற் கல்விக் கையளிப்பை முன்னெடுத்தன. வேதங்களில் இருந்து அழகியல் அறிகையை ஆரம்பித்தல் வைதிக நெறிக் கற்பித்தலிலே முன்னெடுக்கப்பட்டது. வேதம் என்பது நிறையறிவு அல்லது முற்றறிவு என்றும், பரிபூரணம் ஞானம் என்றும் குறிப்பிடப்பட்டது. (ஜெயராசா, சபா, (2003) அழகியற்கல்வி) இருக்குவேதம், யசூர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் ஆகியவை இறையியல், அழகியல், வாழ்வியல் என்ற அனைத்தினதும் தொகுதிகளாகவுள்ளன. வேள்விகளின்போது இசையுடன் பாடுவதற்குரிய பாக்களை சாமவேத சம்கிதை கொண்டுள்ளது. வைதிகநெறிசார்ந்த அழகியல்கல்வி அந்தணர்களால் வழங்கப்பட்டது.

தமிழர்களுடைய அழகியற்கல்வி மரபில் "அறம்" என்ற எண்ணக்கருவே முதன்மை வலியுறுத்தலாக அமைந்தது. கலை வடிவங்களூடாக அறன் வலியுறுத்தல் இடம்பெற்றது. அறம் என்பது சார்புடையதாக இடம்பெற்றது. சிங்கள அழகியல் மரபில் இது "தம்ம" என அழைக்கப்பட்டது. தம்ம என்பது காரணகாரிய தருக்கத்துக்கு உட்பட்டதாக பௌத்த கண்ணோட்டத்தில் அமைந்தது.

தமிழர்களது அழகியற் கல்வியிலும், சிங்களவர்களது அழகியற் கல்வியிலும் இந்நாட்டுக்குரிய தனித்துவமான இயற்கைக் குறியீடுகள், சமூகக் குறியீடுகள், பட்டறிவுக் குறியீடுகள் முதலியவை இடம்பெற்றுள்ளன. சிவமலை (சிவனொளிபாதமலை) கதிரமலை (கதிர்காமக் குன்று) முதலியவை பாடல்களிலே எடுத்தாளப்பட்டன. சிங்கள மக்களது முகமூடிக்கலையிலும் இந்நாட்டுக்குரிய தனித்துவமான குறியீடுகள் வெளிப்பட்டுள்ளன.

தமிழர் மற்றும் சிங்களவர்களது மரபுவழி ஆரம்பக்கல்வியில் இசை ஒரு கூறாக அமைந்திருந்தது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆகியோரது ஆரம்பக் கல்வியிலும் இசை இணைந்திருந்தது. ஆனால் ஒல்லாந்தரால் முன்னெடுக்கப்பட்ட புரெட்டெஸ்தாந்து சமயச் செயற்பாடுகள் நடனம், கூத்து, சிற்பம் முதலிய கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தூய்மைவாதத்தை அவர்கள் வலியுறுத்தினர்.





இலங்கையின் தேசியவாத இயக்கங்களும், இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் எழுச்சிபெறத் தொடங்கிய மரபுவழிக் கலைகளின் மீட்பு நடவடிக்கைகளும் அழகியற்கல்வி வளர்ச்சியை இலங்கையில் முன்னெடுப்பதற்குரிய விசைகளாயின. இந்தியச் சூழலில் அழகியற்கல்வியை முன்னெடுத்த இரவீந்திரநாத் தாகூரின் 1934ஆம் ஆண்டின் இலங்கை வருகையும், இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அவர் நிகழ்த்திய உரையாடல்களும் அழகியல் நடவடிக்கைகளைத் தூண்டின. அவருடன் வந்த இசை நடன மாணவர்கள் நிகழ்த்திய ஆற்றுகைகளும் அழகியற்கல்வியின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தின.

இலங்கையின் கல்வி வரலாற்றுச் சுவடுகள் ஓவியக்கல்வி இந்நாட்டிலே சிறப்புற்றிருந்தமையை நன்கு வெளிப்படுத்தும். பிரித்தானியர் ஆட்சியின்போது இலங்கையின் மரபுவழி அழகியற் கலைகளினதும் ஓவியங்களினதும் சிறப்பை கலாயோகி ஆனந்தக் குமாரசாமி அவர்கள் ஆவணப்படுத்தியமையும் அழகியற்கல்வி பற்றிய சிந்தனைகளுக்கு வலுவூட்டின. தாகூரோடு இலங்கைக்கு வந்த நந்தலால் போஸ் என்பார் மேற்கொண்ட அவரதும் அவரது மாணவர்களதும் ஓவியக் கண்காட்சிகள் கலாயோகி ஆனந்தக் குமாரசாமி அவர்களது பங்களிப்பை மீட்டெடுப்பதற்குத் துணை நின்றன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து இந்தியக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்து ஆற்றுகைகளை மேற்கொள்ளல் ஒரு பொது வழக்காக இருந்தது. தமிழ் நாட்டிலிருந்து நாடகக் கலைஞர்கள், தவில் நாகசுரக்கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், பரதநாட்டியக்கலைஞர்கள் என்போர் இலங்கைக்கும் சிறப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கும் வருகை தந்து பல்வேறு ஆற்றுகைகளை மேற்கொண்டதுடன், தமது கலைகளைக் கற்பிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர். அளவெட்டி, இணுவில், தொல்புரம், நெல்லியடி, கைதடி முதலாம் கிராமங்களிலே தங்கியிருந்து அவர்கள் தமது கலைகளைக் கற்பித்தமைக்குச் சான்றுகள் உள்ளன.

இவ்வாறான நிகழ்ச்சிகளினால் இலங்கைத் தமிழ் மாணவர்கள் இந்தியத் தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மற்றும் காலாதேசத்திரம் ஆகியவற்றிலே இசை நடனம் முதலியவற்றைக் கற்கத் தொடங்கினர். சிங்கள மாணவர்கள் பெரும்பாலும்

சாந்திநிகேதனுக்கும் இலக்குமண புரிக்கும் சென்று அழகியற் கலைகளைப் பயிலத் தொடங்கினர். அங்கு இடம்பெற்ற கலைத்திட்டத்தில் இலங்கையில் நிலைபேறு கொண்டிருந்த அழகியற் கலைகள் கற்பிக்கப்படாமையினால் இந்நாட்டின் கலைச் செழிப்பை அங்கே பயின்ற மாணவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை.

இந்தியாவில் அழகியற்கலைகளைக் கற்றவர்கள் இங்கு வந்து ஆசிரிய நியமங்களைப்பெற்று குறித்த சில பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினர். அவற்றின் காரணமாக அப்பாடசாலைகளிலே கற்ற மாணவர்கள் இசை, நடனம் முதலாம் பாடங்களை ஆற்றுகை நிலையிலும் அறிமுறை நிலையிலும் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். ஆனால், அனைத்துப் பாடசாலைகளுக்கும் அந்த வாய்ப்புக் கிடைக்கப்பெறவில்லை. சிறப்பாக மத்திய மகா வித்தியாலங்களிலும் புகழ்பெற்ற கல்லூரிகளிலும் கற்ற மாணவர்களுக்கே இசை, நடனம் முதலியவற்றைக் கற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றன. சித்திரம் என்ற பாடம் மட்டும் பரவலாகப் பாடசாலைகளிலே கற்பிக்கப்பட்டது. ஆசிரியர் கலாசாலைகளின் பயிற்சிபெற்ற ஆசிரியர்களே சித்திரம் அல்லது வரைதல் என்ற பாடத்தைக் கற்பித்தனர். ஆசிரியர் கலாசாலைகளின் கலைத்திட்டத்தில் சித்திரம், இசை முதலியவை இடம்பெற்றிருந்தன.

அரசாங்கத் தொழில்நுட்பப் பாடசாலைகளிலும், கல்வித் திணைக்களத்துக் கைத்தொழிற் பாடசாலைகளிலும் சித்திரக்கலை பயில்வதற்கு வாய்ப்புக்கள் இருந்தன. 1952இல் கொழும்பு 7 கோட்டன் பிளேசில் உள்ள கேவூட் என்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட ஓவியம் மற்றும் சித்திரம் கற்பிக்கும் செயற்பாடுகள் பின்னர் தனித்த நிறுவனமாகச் செயற்படத் தொடங்கின.

1960ஆண்டுக்குப் பின்னர் தோற்றம்பெற்ற இராமநாதன் இசைக்கல்லூரியும் அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பின்னர் பொறுப்பேற்று இராமநாதன் நுண்கலைக்கழகம் என்ற துறையாக வளர்த்தமையும், இசை நடனத்துறைகளிலே பட்டப்படிப்பை உருவாக்கியமையும், சித்திரம் வடிவமைப்பு என்ற கற்கை நெறியைத் தொடர்ந்து ஏற்படுத்தியமையும் இலங்கையின் அழகியற்கல்வி வரலாற்றில் இடம்பெற்ற சிறப்பார்ந்த நிகழ்ச்சிகளாகும். அந்நடவடிக்கைகளில் இந்நூலாசிரியரும் பங்கு கொண்டிருந்தமை





குறிப்பிடத்தக்கது. அவ்வாறே விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் தோற்றமும் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகம் அதனைப் பொறுப்பேற்றமையும் முக்கிய நிகழ்ச்சிகளாக அமைந்தன. கொழும்பில் இயங்கி வந்த அழகியற்கல்வி நிறுவனம் வளர்ந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்துள்ளமையும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்பு நிகழ்ச்சியாகும்.

பாடசாலை மட்டத்தில் 1972ஆம் ஆண்டின் கலைத்திட்டச் சீர்திருத்தத்தோடு அழகியற்கற்கை மேலும் எழுச்சி கொள்ளலாயிற்று. பாடசாலைகளின் ஆரம்பநிலையில் அழகியற் செயற்பாடுகள் விரிவான முறையில் இடம்பெறலாயின. ஆறாம் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையிலான இடைநிலையில் அழகியற் பாடங்களைக் கற்பதற்குரிய கலைத்திட்ட ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது. ஒன்றிணைந்த ஆளுமை வளர்ச்சிக்கும், சமநிலையான சிந்தனைகளுக்கும், ஆக்கமலர்ச்சிக்கும், மனவெழுசசிப் பயிற்சிக்கும் அழகியல் அவசியமென வலியுறுத்தப்பட்டது. 1972ஆம் ஆண்டுக் கலைத்திட்டத்தின் செயற்பாடுகளை அடியொற்றி இசை, நடனம், சித்திரம் முதலாம் அழகியற் பாடங்களை கற்றல் பரவலாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இக்கலைத்திட்டத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து உயர்தர வகுப்புக்களில் இசை, நடனம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியதுடன், தொழில் வாய்ப்புக்களும் விரிவடையலாயின.

ஆனால், இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இசை, நடனம், சித்திரம் முதலியப் பாடங்களைக் கற்பிப்பதற்குரிய ஆசிரிய வளம் போதாத நிலையிற் காணப்பட்டமையால் கல்வியியற் கல்லூரிகளிலும் அழகியற் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையைப் பொறுத்தவரை இசை, நடனம் முதலிய அழகியற் பாடங்களைக் கற்றலிலும் கற்பித்தலிலும் பெண்களே அதீத ஆர்வம் காட்டுகின்றனர். அவை பெண்களுக்குரியவை என்ற தவறான கண்ணோட்டமும் சமூகத்தாற் கட்டுமை செய்யப்பட்டுள்ளது. மேலும், அழகியற் பாடங்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களோடு ஒப்பிடும்பொழுது தாழ்ந்தவை என்ற தவறான உளப்பாங்கும் காலனித்துவ ஆட்சிக்காலத்திலிருந்து வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

அண்மைக்காலமாக உளவியலில் வளர்ச்சி பெற்றுவரும் "வலமூளை" பற்றிய ஆய்வுகள் அழகியற்கல்வியின் முக்கியத்துவத்தை மீளவலியுறுத்தி வருகின்றன. முழுநிறைவான ஆளுமை வளர்ச்சியை அழகியற்கல்வியின்றி முன்னெடுக்க முடியாது என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

✠✠✠



# ஆசிரியர்கல்வி வரலாறு

கல்வி வரலாறும் ஆசிரியத்துவ வரலாறு வேறுபிரிக்க முடியாதவை. ஆசிரியம் என்ற எண்ணக்கரு அறிவின் குவிப்பையும் தரத்தின் உயர்ச்சியையும் உள்ளடக்கி நிற்கின்றது. கற்றல் கற்பித்தலின் இயக்குனராயும், வளம் தருனராயும் ஆசிரியர் அமைகின்றனர். ஆசிரியத்துவம் சமூக இயல்பின் குறிகாட்டியாகவுள்ளது. கல்விக்குரிய செலவிலிருந்து அதிக நன்மைகளைப் பெறமுனைந்தோர் ஆசிரியர் கல்வியிலே கவனம் செலுத்தலாயினர். பிரித்தானியரில் ஒரு சாரார் ஆசிரியர் கல்விக்குரிய செலவு வீண்விரயம் என்று கருதினர்.

ஆசிரியர் கல்விக்குரிய வரன்முறையான பாடசாலையை 1842ஆம் ஆண்டிலே அரசு அமைந்தது. அது ஆங்கிலமொழி வழியான ஆசிரிய பயிற்சிக்கு வழிவகுத்தது. அதனைத் தொடர்ந்து 1852ஆம் ஆண்டில் தமிழ் மற்றும் சிங்கள ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. சமயம், புவியியல்,

வரலாறு, கணிதம், எழுத்து என்றவாறு ஆசிரியர் கல்வியிலே பாடங்கள் இடம்பெற்றன. பயன்மிக்க ஒரு செயற்பாடாக அது அமைந்த பொழுதிலும், பிரித்தானிய அரசு அதற்குரிய நிதிவழங்கல் ஏற்புடையது அல்லவென்று கருதியது. அதனால் அந்தக் கலாசாலைகள் மூடப்பட்டன.

பிரித்தானியர் ஆட்சியின்போது ஆசிரிய வழங்கலில் இலாபம் தரக்கூடிய நடவடிக்கை என்று கருதி "சட்டாம் பிள்ளை" முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலை மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சட்டாம் பிள்ளைகளைக் கற்பித்தலில் ஈடுபடுத்துதல் இலாபகரமான முறையென்ற கருத்து சிக்கனத்தை நாடிய குடியேற்ற ஆட்சியினருக்கு வாய்ப்பானதாக அமைந்தது. பிரித்தானியர் ஆசிரியர்கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஆசிரியத்துவ மேம்பாட்டைக் காட்டிலும், உடனடியான தேவைகளை நிறைவேற்றுதலே மேலோங்கி நின்றது.

சமய நிறுவனங்களால் நடத்தப்பட்ட அரச சார்பற்ற தனிப்பட்ட ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு உதவி நன்கொடை வழங்கும் திட்டம் 1880ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த உதவித்திட்டத்தை இந்து மற்றும் பௌத்த நிறுவனங்கள் பயன்படுத்தி ஆசிரியர் கல்லூரிகளைத் திறக்கலாயின. இந்து பௌத்த கல்வி மறுமலர்ச்சியோடு புதிதாகத் திறக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வினையாற்றல் மிக்க ஆசிரியர்களை வழங்க வேண்டியது அவர்களின் கடமையாயிற்று.

அதனால், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளின் எண்ணிக்கை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதிகரிக்கலாயிற்று. அக்காலப் பகுதியில் மொத்தம் பத்தொன்பது தமிழ் மற்றும் சிங்கள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இருந்தன. இலங்கை ஒரு விவசாய நாடாக இருந்தமையால் கமத்தொழில் சார்பான பயிற்சிப் பாடசாலையின் தேவை உணரப்பட்ட வேளை 1919ஆம் ஆண்டில் கமத்தொழில் சார்பான ஒரு பயிற்சிக் கல்லூரி கௌரத் கொடை என்னுமிடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆயினும் ஏட்டுக் கல்வி முக்கியத்துவம் பெற்றிருந்தமையால், செய்முறையுடன் விவசாயம் கற்றலில் மாணவர் ஆர்வம் காட்டவில்லை.

இலங்கையின் ஆசிரியர்கல்வி வரலாற்றில் ஏற்பட்ட பிறிதொரு வளர்ச்சி பரீட்சைகள் வாயிலாக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்





நடவடிக்கையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னைய காற்பகுதியில் இந்நடவடிக்கைகள் வளர்ச்சியடையத் தொடங்கின. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வாறாகப் பரீட்சை எழுதி ஆசிரிய தகைமைச் சான்றிதழ் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று.

இலங்கையின் இடதுசாரி இயக்கங்களின் வளர்ச்சி ஆசிரியர்களை ஒன்றிணைத்து நிறுவனமயப்படுத்துவதற்குத் தூண்டுதலளித்தது. ஆசிரியர்கல்வி வரலாற்றில் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சியாக அவர்கள் தமது நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கென நிறுவன ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியமையாகும். ஆங்கில ஆசிரியர்கள் தமக்கிருந்த ஆங்கில அறிவு காரணமாகப் பிரித்தானியாவின் தொழிற்கட்சி பற்றியும் தொழிற்சங்கங்கள் பற்றியும் அறியத் தொடங்கினர். அவற்றின் விளைவு காரணமாக கொழும்பு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்று கூடி 1911ஆம் ஆண்டு ஆசிரியர் சங்கம் ஒன்றினை அமைத்தனர். அதனைத் தொடர்ந்து ஆங்கில ஆசிரியர்கள் மாகாண மட்டத்தில் சங்கங்களை ஆரம்பிக்கலாயினர். இவ்வகையில் ஆரம்பிக்கப்பட்ட வடமாகாண ஆசிரியர் சங்கம் (NPTA) ஆசிரிய நலமேம்பாடு, மாணவர் நலமேம்பாடு முதலாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. கல்வித்தர மேம்பாட்டினைக் கருத்திலேகொண்டு மாணவர்கள் மத்தியிலே பாடங்கள் தொடர்பான தேர்வுகளையும் நடத்தியது.

பாடசாலைகளின் கலைத்திட்ட வளர்ச்சியோடு இணைந்ததாக ஆசிரியர் கல்லூரிகளின் பாடங்களை ஒழுங்குபடுத்துவதால் கற்பித்தலில் வினைத்திறனை ஏற்படுத்த முடியும் என்ற கருத்து டொனமூர் அரசியற்றிட்டத்தைத் தொடர்ந்து மேலும் வலுப்பெறத் தொடங்கியது. அதாவது, பாடசாலைகளிலே பயிற்றுவிக்கும் பாடங்கள் தொடர்பான அறிவை ஆசிரியர் பயிற்சியிலே கையளித்தால் அந்த அறிவுடன் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் வினையாற்றலுடன் செயற்பட முடியும் என்ற கருத்து மீள வலியுறுத்தப்படலாயிற்று. இவற்றின் வளர்ச்சியாக ஆசிரியர் கல்வியில் வீட்டுப்பணியியல், கைவினை முதலாம் பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பக்காலத்திலிருந்து, ஆங்கில ஆசிரியர்களுக்கும் தேசியமொழிகளின் ஆசிரியர்களுக்கும் இடையே அந்தஸ்து நிலையிலும் சம்பள நிலையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. 1943ஆம் ஆண்டின் கல்வி பற்றிய சிறப்புக் குழுவினர் இந்த வேறுபாடுகள் விரும்பத்தகாதவை என்றும், இல்லாது குறைக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

கல்வித்தகைமை, வாண்மை அனுபவம் என்பவற்றுக்கு அமைய ஆசிரியர்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படல் வேண்டுமென அவர்கள் விதப்புரை செய்தனர்.

1. பயிற்சி பெற்ற பட்டதாரிகள்
2. பட்டதாரிகள்
3. நுண்தொழிற்பயிற்சி பெற்ற பட்டதாரிகள்
4. நுண்தொழிற் பயிற்சி பெறாத விசேட நிலை ஆசிரியர்கள்
5. பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்
6. அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்கள்
7. தகுதிகாண் நிலை ஆசிரியர்கள்

கல்வி பற்றிய சிறப்புக் குழுவினர் பல்கலைக்கழகத்திலே கல்வித்துறை அமைக்கப்பட்டு ஆசிரியர் கல்வி மேம்படுத்தப்படல் வேண்டுமெனவும் அதற்குரிய நிதி வசதிகள் வழங்கப்படல் வேண்டுமெனவும் பரிந்துரை செய்தனர். இதன் தொடர்ச்சியாக 1949ஆம் ஆண்டிலே பல்கலைக்கழகத்திற் கல்வித்துறை கால்கோள் கொண்டது.

1953ஆம் ஆண்டில் உயர்தரப் பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் வேண்டிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஆறு நிறுவனங்கள் இயங்கி வந்தன.

அவை வருமாறு:

அ. இலங்கைப் பல்கலைக்கழகம்

ஆ. உயர்தர மகரகம பயிற்சிக் கல்லூரி

இ. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி வழங்கும் உயர்நிலை ஆசிரியர் பயிற்சி அமைப்பு





ஈ. உயர்நிலை ஆசிரியப் பயிற்சியை வழங்கும் கேவூட் ஓவியக் கலைப் பாடசாலை

உ. பேராதனை மற்றும் குண்டசாலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆண்களுக்கும் பெண்களுக்குமான உயர்நிலை ஆசிரியர் பயிற்சி வழங்கும் கமத்தொழிற் பாடசாலைகள்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறையில் அக்காலத்தே பணிபுரிந்த பேராசிரியர் கிறீன், கே.எஸ்.அருள்நந்தி பேராசிரியர், ஜே.ஈ.ஜயசூரியா, வண.பிதா தனிநாயகம் அடிகளார், திரு.கு.நேசையா, பேராசிரியர் ப.சந்திரசேகரம், பேராசிரியர் முத்துலிங்கம், பேராசிரியர் சுவர்ணஜயசூர்யா, பேராசிரியர் ரஞ்சித்ரு போரு, மற்றும் கலாநிதி பி.உடகம முதலியோர் வளமான ஆசிரிய வாண்மைக்குரிய அனுபவம் கலந்த புலமையாற்றல்களைக் கையளிப்புச் செய்தனர்.

ஆசிரியருக்குரிய வாண்மைக்கல்வியை வழங்கும் பணியை மேற்கொண்ட மகாரகம ஆசிரியர் கல்லூரி முதலில் கொழும்பிலே இயங்கி 1949ஆம் ஆண்டில் கொழும்புக்கு அண்மையிலுள்ள மகாரகமவுக்கு மாற்றப்பட்டது. விஞ்ஞானம், கணிதம், மரவேலை, உலோகவேலை, கைப்பணி, ஓவியம், இரண்டாவது மொழியாக ஆங்கிலம், வர்த்தகம், மனையியல் முதலாம் துறைகளில் சிறப்பு ஆசிரியர் பயிற்சிநெறிகளை படிப்படியாக ஆரம்பித்து அந்நிலையம் விரிவாக்கம் பெற்றது. அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு அமைய அங்கே பயிற்றுமொழியாக இருந்த ஆங்கிலம் கைவிடப்பட்டு சிங்களம் அறிமுகம் செய்யப்பட்டது. அதேவேளை தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்குரிய சிறப்பு ஆசிரியர் கல்லூரி பலாலியில் திறக்கப்பட்டது.

ஆசிரியர்கல்வி வளர்ச்சி வரலாற்றில் இலங்கையில் ஏற்பட்ட ஒரு முற்போக்கான செயற்பாடு முழுச்சம்பள விடுப்புடன் ஆசிரியர் கல்வியை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். அதேவேளை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட மாணவ ஆசிரிய நியமனம் மற்றும் தொண்டர் ஆசிரிய நியமனம் முதலியவை. அரசியல் நோக்கிலே பெருமளவில் அமைந்தவேளை கல்வி நோக்கிலும் பல்வேறு வினாக்களை ஏற்படுத்தின.

உரிய வாண்மைக்கல்வியைப் பெறாது கற்பித்தலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை பெருக்கமடையத் தொடங்க வாண்மைக்கல்வி நடவடிக்கைகள் மேலும், விரிவாக்கம் பெறலாயின. கொழும்புப் பல்கலைக்கழகத்திலே அமைக்கப்பெற்ற கல்வியியற்பீடம், மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், பேராதனைப்பல்கலைக்கழகம் முதலியவற்றில் உருவாக்கப்பட்ட கல்வியியற்றுறைகள் முதலியவை எண்ணிக்கையில் கூடுதலானோருக்கு ஆசிரிய வாண்மைக்கல்வியை வழங்கும் நடவடிக்கைளாயின. கல்வி அமைச்சினாலும் பின்னர் தேசியகல்வி நிறுவகத்தாலும் முறையே மேற்கொள்ளப்பட்ட தொலைக்கல்விப் பயிற்சி, மற்றும் மாகாணங்களை நோக்கி விரிவாக்கம் செய்யப்பட்ட வாண்மைக்கல்வி நடவடிக்கைகள் முதலியவை பயிற்சியின் எண்ணளவு பெருக்கத்துக்கு உதவியவேளை தரம் (Quality) அல்லது பண்புநிலை தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

ஆசிரியருக்கான வாண்மைக்கல்வியை விரிவுபடுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரிகள் மரபு வழியான ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வேறுபட்ட உள்ளடக்கத்துடனும் அமைப்பியலுடன் இயங்கத் தொடங்கியுள்ளமை பிறிதொரு பரிமாணமாக அமைந்துள்ளது.

1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கச் சட்டத்துக்கு அமைய கல்வியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. தேசியகல்வி நிறுவகத்தின் அங்கீகரிப்பின் அடிப்படையில் கல்வியியற் கல்லூரிகளின் வாண்மைக்கல்விச் செயற்பாடுகள் இடம்பெறல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆசிரிய வாண்மைக்கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட பிறிதொரு வளர்ச்சி கொழும்புப் பல்கலைக்கழகத்துக் கல்வியியற் பீடமும், ஏனைய பல்கலைக்கழகங்களின் கல்வியியற்றுறைகளும் கல்வியியலிற்பட்ட மேற்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தமையாகும். அவற்றால் ஆசிரியரும் கல்வி நிருவாகிகளும் கல்வியியலில் உயர்நிலையான அறிவைப் பெறும் வாய்ப்புக்கள் விரிவாக்கம் பெறத்தொடங்கியுள்ளன. இந்த விரிவாக்கத்தைத் தரம் சார்ந்த விட்டுக்கொடுப்பினால் நிகழ்த்த முடியாது.





ஆசிரியர் வாண்மை மேம்பாட்டில் மேலும் பல நிகழ்ச்சிகள் இலங்கையில் இடம்பெறத் தொடங்கியுள்ளன. ஆசிரிய சேவையின் உருவாக்கம் வாண்மை உறுதிப்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் அனுசரணையாகவுள்ளது. ஆசிரிய சேவையின் வகுப்புக்களுக்குரிய சம்பள அளவுத்திட்டம் ஏனைய வாண்மைத் தரங்களின் சம்பள அளவுத் திட்டங்களுக்கு ஒப்புமை கொண்டதாக இருக்கவேண்டும் என்ற வற்புறுத்தல் இன்னமும் முழுமையை எட்டவில்லை.

ஆசிரியர் வாண்மை மேம்பாட்டில் ஏற்பட்ட பிறிதொரு நிகழ்ச்சிகல்வி வலயங்களில் உருவாக்கப்பட்டுள்ள ஆசிரிய நிலையங்களாகும். பணிக்கால வாண்மைக் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு இந்நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளின் தேவைகளைக் கருத்திலே கொண்டு பாடசாலைமட்ட ஆசிரியவாண்மை மேம்பாட்டுத் திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் அவற்றின் செயற்பாடுகளின் முன்னேற்றம் திட்டவட்டமான ஆய்வுகளை வேண்டி நிற்கின்றன.

ஆசிரிய வாண்மை மேம்பாட்டின் பொருட்டு இந்நாட்டின் தேசிய மொழிகளில் எழுத்தாக்கங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளமை சிறப்பித்துக்கூறக்கூடிய நிகழ்ச்சியாகும்.

ஆசிரியருக்குரிய வாண்மைக்கல்வி உடனடி நோக்கங்களை மட்டும் அடிப்படைகளாகக் கொண்டு அமைக்கப்பட்டால் மட்டும் பொருத்தமற்றது. மனிதவளவிருத்தி பற்றிய தொலைநோக்குடன் அது உருவாக்கப்படல் வேண்டும். கல்வியிலே உலகெங்கும் பன்மை நோக்கும் பன்மை அணுகுமுறைகளும் வலியுறுத்தப்படும்வேளை இலங்கையின் ஆசிரிய வாண்மைத்திட்டமிடல் ஒருமுகப்படுத்தப்பட்டு தேசியகல்வி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டிருத்தலும், செயல் அதிகாரம் அந்நிலையத்திடமே தரப்பட்டிருத்தலும் பன்மை நோக்கினுக்கு முரணுரையாக அமைந்துள்ளது.

"ஆசிரியர்கல்வி" என்பது "ஆசிரியர்அபிவிருத்தி" என்ற நிலைமாற்றத்தைப் பெற்றுள்ளது. ஆசிரியத்துவ மேம்பாடின்றி கல்வியிலே தரமேம்பாட்டை முன்னெடுக்க முடியாது. ஆசிரியத்துவத்தின் தரமே மாணவர்களின் கல்வித்தரத்தை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாகின்றது. மாணவரிடத்துப் பண்பு நிலையான நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் பணி ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையின் ஆசிரியத்துவ மேம்பாட்டில் கல்விசார்

நிபுணத்துவத்தைக் காட்டிலும் அரசியல் தலையீடுகள் ஒப்பீட்டளவில் மேலோங்கியிருத்தலைக் கல்வி வரலாற்றுச் சுவடுகள் சுட்டிக்காட்டுகின்றன. சுதந்திரத்துக்குப் பின்னர் இனத்துவ அரசியலின் செல்வாக்கு ஆசிரியத்துவத்திலும், ஆசிரியத்துவ முகாமையிலும் மேலோங்கியிருத்தலையும் காணமுடிகின்றது.

இனத்துவ அடிப்படையில் இலங்கையின் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் வளர்ச்சியுற்று வருதல் இந்நாட்டிற் காணப்படும் இனத்துவ விழிப்புணர்ச்சியை ஒரு வகையிலே வெளிப்படுத்துகின்றது.

✠✠✠



# ஆசிரிய வாண்மையின் அதிர்வுகள்

கைத்தொழில் துறைகளிலே வினையாற்றல்களை மேம்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட "ரெயிலறிசம்" (Taylorism) தீவிரமான திறனாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டது. ஒரே செயற்பணியை ஒரு தொழிலாளி மீள மீளச் செய்வதனால் உற்பத்தி அதிகரிக்கும் என்றும், சிறப்புத் தேர்ச்சி கொண்டவர்களைப் பணிக்கு எடுத்துக்கொள்ளாது சிக்கனத்தை ஏற்படுத்தலாம் என்றும் அவரால் முன்மொழியப்பட்டது. ஆனால், தொழிலாளர்கள் ஒரே செயலை மீள மீளச் செய்யும் சலிப்புக்கும் களைப்புக்கும் உள்ளாக்கப்படுதல் எதிர்ப்பியக்கங்களைத் தோற்றுவிக்கலாயிற்று. இந்தத் திறனாய்வினூடே ***"விஞ்ஞான பூர்வமான முகாமைத்துவம்"*** என்ற எண்ணக்கரு கைத்தொழிற்றுறைகளில் மட்டுமல்ல கல்வியியலிலும் வளர்ச்சி பெறலாயிற்று. முதன்முதலில் அமெரிக்கக் கல்விச் செயற்பாடுகள் ரெயிலறிசத்தை அடியொற்றிய வடிவமைப்பைப் பெறலாயின.

இந்தப் புதிய அணுகுமுறை மாணவரைத் *"தொழிலாளர்"* என்ற நிலைமாற்றத்துக்கு உள்ளாக்கியது. பாடசாலைக் கட்டடத் தொகுதிகளை வினைத்திறனுடன் முகாமித்ததிலிருந்து ஆசிரியர் தொழிற்பாடுகளிலே விரயங்களைத் தவிர்த்தலை நோக்கிக்கல்வி நடவடிக்கைகள் விரிவடையலாயின.

இன்றைய பாடசாலைச் செயற்பாடுகளை யதார்த்த நிலையில் நோக்கினால் *"பரீட்சைக்குக் கற்பித்தல்"* (Teaching to Test) என்பதே மேலெழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. பரீட்சைச் சூழலைத் தவிர சோதனையின் சரியான விடைகள் வேறு எங்கு பயன்படும் என்ற அடிப்படையான கேள்விகளுக்கு இடமில்லாமலே போய்விடுகின்றது. பரீட்சைகளை எடுக்கும் திறன்களை வளர்ப்பதி-லேதான் ஆசிரியர் பெரும்பங்கு நேரத்தைச் செலவிட்டு வருதலை அண்மைக் காலத்தைய ஆய்வுகள் வெளிப்படுத்தி வருகின்றன. மாணவரின் பரீட்சை அடைவுகளை மேம்படுத்த முடியாத நிலையிலுள்ள பாடசாலைகள் தமது கலைத்திட்டச் செயற்-பாடுகளை முற்றுமுழுதாக மாற்றியமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை நியமப்படுத்தப்பட்ட பொதுப் பரீட்சைகளின் பிரதிகூலங்களை நோக்காது பரீட்சைப்பித்து (Examination Mania) என்ற அலையில் மூழ்கியிருக்கும் அவல நிலைக்கல்வியின் நிலை-யானது முகாமையாளர்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியுள்ளது. பொதுப் பரீட்சைகள் மாணவரின் திறனாய்வுச் சிந்தனையை அல்லது கூர்திறன் ஆற்றல்களை (Critucal Ability) வளர்க்க முடியா-திருக்கும் மட்டுப்பாடுகளைப் பற்றிய பலரும் சிந்திப்பதில்லை.

தரமான கல்வியின் ஒரு முக்கிய பரிமாணமாக அமைவது கூர்திறன் ஆற்றல்களை வளர்த்தெடுத்தலாகும். பொதுப் பரீட்சை-களை மட்டும் குவியப்படுத்திக் கற்பித்தலை மேற்கொள்ளும் பொழுது ஆசிரியர்கள் பெறுபேறு வழங்கும் செயலமைப்பின் (Educational Delivery System) வழியே தொழிற்படுகின்ற வேளை அவர்-களுக்குரிய வாண்மைத்திறன்கள் பின்தள்ளப்பட்டு விடுவதை மனங்கொள்ள வேண்டும். இதில் ஓர் அவலமான நிலை ஐ.அமெரிக்காவிலே காணப்படுதலைச் சுட்டிக்காட்ட வேண்டி-யுள்ளது. ஐ.அமெரிக்காவில் பெருமளவு பாடசாலை நடத்தும் கம்பனியாக *"எடிசன் பாடசாலைக் கம்பனி"* அமைந்துள்ளது.





பரீட்சைப் பெறுபேறுகளைக் குவியப்படுத்திய இறுகிய நோக்கிலே-தான் இக்கம்பனி நடத்தும் பாடசாலைகள் முகாமிக்கப்படுகின்றன. செலவைக் குறைப்பதற்காக வாண்மைப் பயிற்சியற்ற இளவயது ஆசிரியர்களை வாடகைக்கு அமர்த்தி அக்கம்பனி குறைந்த செல-விலே பரீட்சைக்குரிய கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் மேலும் பரவத் தொடங்கியுள்ளன. இந்நிலையானது வாண்மைப்பயிற்சி பெற்று வளமுடன் இயங்கும் ஆசிரியர்களிடத்து மனமுறிவையும் ஏற்படுத்தி வருகின்றது.

தொழிற்சாலைகளிலே ஆற்றல்மிக்க வினையர்களைத் தள்ளி வைத்துவிட்டு இயந்திரம் இயக்குபவரை முதன்மையாக வைத்து உற்பத்தியை மேற்கொள்ளும் முகாரிப்பு நடவடிக்கை போன்று, பாடசாலைகளிலே வாண்மைக்கல்வியும் வாண்மைத்திறன்களும் பெற்ற ஆசிரியர்கள் தள்ளிவைக்கப்பட்டு வாண்மைக்கல்வியற்ற நிலையில் பரீட்சைகளைக் குவியப்படுத்திக் கற்பிக்கும் புகுமுக ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. கலைத்திட்டம் தொடர்பான தீர்மானிப்புக்களைக் கல்விநிலையில் நோக்காது பொதுப் பரீட்சைப் பெறுபேற்று நிலையில் நோக்கி நடவடிக்கை-களை மேற்கொள்ளும் அரசியலாளரின் நடவடிக்கைகள் ஆசிரியர்-களை ஒருவகையில் இழிவுபடுத்துபவையாகவுமுள்ளன.

அறிவு என்பது தகவல்களைத் திரட்டிக்கொள்ளலிலும் மேலான செயற்பாடு என்பது உணரப்படவில்லை. மனப்பாடம் செய்து கூடிய புள்ளிகளைப் பெறுதலே அறிவென்ற போலித்தனம் வளர்ச்சி-யடையத் தொடங்கியுள்ளது. அறிவின் சிக்கலான தன்மைகளைப் பொதுப் பரீட்சைகளின் பல்தேர்வு வினாக்களாற் கணிப்பீடு செய்ய முடியாமலிருத்தலையும் பலர் கவனத்திற் கொள்வதில்லை. பல்-தேர்வு வினாக்களே அதியுயர்ந்த மதிப்பீட்டுமுறை என்ற பொய்மை-யும் வேகமாகப் பரவியுள்ளது.

எப்படிக் கற்பிக்க வேண்டும் எதனைக் கற்பிக்க வேண்டுமென்ற திரட்டல்நிலை (Totalising) வற்புறுத்தல்கள் ஆசிரியர்களிடத்துச் சலிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. ஆசிரியர்களது தனித்துவ இயக்கங்களுக்கு மதிப்பளிக்காது அவர்களை அந்நியமாக்கிவிடும் செயற்பாடுகள் மேலெழுகின்றன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வளங்களின் வறுமை, நெருங்கிய வகுப்பறைகள், போதுமான கற்பித்தற் சாதனங்கள் வழங்கப்படாமை, தேவைக்கு அதிகமான கடதாசி வேலைகள், திட்டமிடுவதற்குப் போதுமான நேரம் வழங்கப்படாமை, விரைந்து குழப்பநிலைக்கு உட்படும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள், நிருவாகத்தினது ஆதரவு ஆசிரியர்களுக்குக் குன்றியிருத்தல், அற்பமான (Trivial) பணிக்காலப் பயிற்சிகள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக வாண்மை சார்ந்த தற்றுணிபுடன் செயற்பட முடியாதிருத்தல் முதலியவை ஆசிரியத்துவத்திலே தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. (Olson (2001) Educational News)

இந்நிலையிலே பொதுச்சோதனைகள் ஆசிரியர்கள் மீது மேலும் தாக்கங்களையும் அழுத்தங்களையும் ஏற்படுத்துகின்றன. பரீட்சைகள் மாணவரையும் ஆசிரியரையும் கொதிக்க வைத்து விடுகின்றன.

***பொதுப் பரீட்சையின் பெறுபேறுகளை வைத்து ஆசிரியர்களின் ஆற்றுகையை மதிப்பீடு செய்தலை உலகளாவிய முறையில் ஆசிரியர் கழகங்கள் எதிர்த்து வருகின்றன.*** அமெரிக்காவின் மிகப் பெரிய ஆசிரியர் தொழிற் சங்கமாகிய ***"தேசிய ஆசிரியர் கழகமும்"*** (NEA) இத்துறையிலே தீவிர எதிர்ப்பைக் காட்டி வருகின்றது. அதேவேளை ஆசிரியர் சங்கங்கள் சம்பள உயர்வுக்கும் பதவியுயர்வுகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆசிரியவாண்மை மலர்ச்சிக்குக் கொடுப்பதில்லை என்ற திறனாய்வும் உண்டு.

பொதுப்பரீட்சை முறையின் செயற்பாடுகள் வாண்மைக்கல்வி பெறாத புதிய ஆசிரியர்களிடத்துப் பிறிதொரு செயற்பாடுகளையும் வளர்த்து வருகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு வகுப்பறையில் இருபது விழுக்காட்டினர் (20%) பின்னடைந்த நிலையில் இருந்தால் அவர்களை முற்றாக ஒதுக்கி வைத்துவிட்டு ஏனையோரைக் குவியப்படுத்திக் கற்பித்து எழுபத்தைந்து விழுக்காட்டுக்கு மேற்பட்ட பெறுபேற்றினை உருவாக்கி வெற்றிகாட்டும் கற்பித்தல் அவலங்களும் நிகழ்த்தப்படுகின்றன.

எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்குரிய பொதுவான ஒரு கற்பித்தல்முறை என்று எதுவுமில்லை. பாடப் பொருளுக்கும், மாணவர் இயல்புகளுக்கும், சூழலின் இயல்புகளுக்கும் ஏற்றவாறு





கற்பித்தல் முறைகள் தொடர்ந்து மாறுபடும் சமகாலப் பின்னவீனத்துவக் கல்விச்சிந்தனைகளில் இக்கருத்து மாற்றீடில்லா வலியுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

இந்நிலையில் ஆசிரியவாண்மையின் முக்கியத்துவத்தையும், சுயாதீனத்தையும் மீள வலியுறுத்த வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொள்ளாத எந்தவிதமான விஞ்ஞான பூர்வமான முகாமைத்துவமும், தரமேம்பாட்டு நடவடிக்கைகளும், விளைவு மேம்பாட்டைக் காட்டிலும் விளைவுச் சிதைவுகளுக்கே இட்டுச்செல்லும்.

ஆசிரிய வாண்மை மேம்பாட்டைப் பின்வரும் பரிமாணங்களில் நோக்கி வளர்ச்சியை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

1. இலக்குகள்
2. இடநிலையம்
3. நீட்சி
4. முறைகள்
5. விளைவுகளின் மட்டங்கள்

ஆசிரியவாண்மை இலக்குகள் பற்றி ஆரம்பகாலங்களில் விளக்கவந்த பேராசிரியர் றே பொலம் (Ray Bolam) கல்வித் தொகுதியையும், தனியாசிரியரின் முதன்மைகளையும் எதிர்நிலைப்படுத்தி விளக்கலானார். அண்மைக்கால எழுத்தாக்கங்களில் அவர் தமது அணுகுமுறைகளை விரிவுபடுத்தி பின்வரும் வாண்மை விருத்திச் செயற்பாடுகளை முன்மொழிந்துள்ளார்.

அ. செயல்நிலை மேம்பாடு

ஆ. வாண்மைக் கல்வி

இ. வாண்மைப் பயிற்சி

ஈ. வாண்மை ஆதரவு

1. ஆசிரிய வாண்மை இலக்குகள் தொடர்பாக கெவார்ட் பிராட்லி (Howard Bradley) பின்வரும் இலக்குகளை முன்மொழிந்துள்ளார்.

☆ தமது வாண்மை பற்றிய பெறுமானங்களை உணரச் செய்தல்.

☆ தமது வாண்மையை வளம் பெற ஆற்றுதலும், நேர்முகப் பின்னூட்டல்களைப் பெறுதலும், தொழில்சார் உள நிறைவு மற்றும் ஊக்கல்களைப் பெறல் செய்தல்.

☆ வேலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு தம்மைத் தயாரித்துக் கொள்வதற்கும் எதிர்பார்ப்புக் கொள்வதற்கும் உதவுதல்.

☆ மாற்றங்களூடே நிகழும் ஈடுபாடுகளுக்கு உற்சாகம் வழங்குதல்.

☆ பாடசாலையின் மேம்பாட்டுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்வதற்குரிய உணர்வுகளுக்கு உதவுதல்.

ஆசிரியரையும் கல்வித்தொகுதியையும் நேர்முகமாக ஒன்றிணைக்கும் வகையில் இவர் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

2. இடநிலையம் ஆசிரிய வாண்மை மேம்பாட்டால் தனித்துவமான பங்களிப்பைச் செய்கின்றது. பாடசாலைமட்ட ஆசிரிய வாண்மை மேம்பாடு, பாடசாலையைக் குவியப்படுத்தும் (School Focused) ஆசிரிய வாண்மை மேம்பாடு முதலியவை முன்னெடுக்கப்படுகின்றன.

   பாடசாலையில் வைத்து ஆசிரியர்களுக்கு வாண்மைப் பயிற்சியை வழங்குதல் பாடசாலைமட்ட ஆசிரிய வாண்மை மேம்பாட்டிலே சிறப்புப் பெறுகின்றது. இங்கு பாடசாலைக்கு ***உள்ளேயே*** பயிற்சி வழங்கப்படும்.

   பாடசாலையைக் குவியப்படுத்தல் என்பது நடுநாயகப்படுத்தல் (Centred) என்றும் பொருள்படும். இம்முறையில் கற்பிக்கப்படும் குழுவினர் மீது கவனக்குவிப்பை ஏற்படுத்திப் பயிற்சிகள் வழங்கப்படும். பாடசாலைக்கு ***வெளியே*** இப்பயிற்சி வழங்கப்படும். இதனால் பாடசாலைக்கு உள்ளேயிருக்கும் கவனக்கலைப்பான்கள் தவிர்த்துக்கொள்ளப்படும்.

   இடநிலையத்தை வாண்மை மேம்பாட்டுடன் தொடர்புபடுத்தும் நடவடிக்கையாக ***"கஸ்கேட்"*** (Cascade) அணுகுமுறை அமைகின்றது. இந்த அணுகுமுறையில் ஆசிரியர்களுக்குரிய வாண்மைப்பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்படுவதுடன், முன்னைய அனுபவங்களை அடியொற்றிப் பின்னைய அறிவும் திறன்களும் கையளிக்கப்படும். வாண்மைப் பயிற்சியானது மிக்க





நெகிழ்ச்சியுடையதாக உள்ளமைக்கப்பட்டிருக்கும். இலக்குக் குழுவினரின் தேவைகள் நன்கு வரையறுக்கப்பட்டிருக்கும். அதற்கேற்ப பயிற்சி இலக்குகள் இணைக்கப்படும். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் தருக்க பூர்வமாகவும் பயிற்சி இடம் பெறச் செய்யப்படும்.

3. நீட்சி என்பது வாண்மைப் பயிற்சிக்கால அளவைக் குறிப்பிடும். காலநீட்சியை வாண்மை அனுபவ நீட்சியுடன் ஒன்றிணைக்கும் செயற்பாடு இங்கே மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழகங்கள் வழங்கும் வாண்மைப் பயிற்சியின் காலம் நீட்சி கூடியதாக அமையும். அதனை விட குறுங்காலப் பயிற்சிக் காலம் ஒரு சில மணித்தியாலப் பயிற்சிக் காலம் என்ற அமைப்புக்களும் உண்டு.

4. முறைகள் என்பது பயிற்சியின்போது அறிவையும் அனுபவங்களையும் கையளிக்கும் நடவடிக்கைகளைக் குறிப்பிடும். இவ்வகையில், அளிக்கை, செய்துகாட்டல், தூண்டற் சூழலிலே பயிற்சிகளை மேற்கொள்ளல் ஆற்றுகை முன்னூட்டல், ஆற்றுகைப் பின்னூட்டல், துணை வழங்கலுடன் பயிற்றுவித்தல் முதலாம் முறையியல்கள் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. வாண்மைப் பிரக்ஞை கொள்ளவைத்தல், அறிவு மற்றும் திறன்களைக் கையளித்தல், பிரயோகித்தல் முதலியவற்றுக்குரிய பயிற்சிகள் கையளிக்கப்படும். செயல்நிலையாகவும் இங்கே முன்னெடுக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.

5. விளைவுகளின் மட்டங்கள் முழு ஆசிரியர்களையுமோ அல்லது குறித்த பிரிவுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களையோ, அல்லது தனியாசிரியரைக் குவியப்படுத்தியதாகவோ அமையும்.

ஆசிரியர்களையும் கல்வி நிறுவனங்களையும் தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்படும் ஆசிரிய விருத்தி நடவடிக்கைகள் பின்வரும் பரிமாணங்களைக் கொண்டதாக அமைதல் சிறப்புடையது.

☆ தோழமையும் ஒத்துழைப்பும்

☆ பரிசோதனையும் ஆபத்தைத் தாங்குதலும்

☆ கிடைக்கப்பெறும் அறிவை ஒன்றிணைப்புச் செய்தல்.

☆ பொருத்தமான முறையில் இலக்குகளை நிர்ணயம் செய்தல், செயற்படுத்துதல்

- ☆ புதிய அறிவை ஒன்றிணைத்தல்
- ☆ தலைமைத்துவமும் நிருவாக ஒத்துழைப்பும்
- ☆ பொருத்தமான வெகுமதிகளும் தூண்டிகளும்
- ☆ மாற்றங்களைச் செயற்படுத்தும் வடிவமைப்புக்களை ஏற்படுத்துதல்.
- ☆ தனி ஆசிரியரின் இலக்கையும் பாடசாலையின் இலக்கையும் ஒன்றிணைத்தல்

சமகாலக் கோளமயமாக்கற் பின்னணியில் ஆசிரிய வாண்மை பல்வேறு அதிர்வுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் ஆசிரிய வாண்மை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களைத் தளரவிடுதல் கல்விச்செயல் முறைகளை ஒரு சிலரின் நலனுக்காக உதவும் செயல்முறைக்குத் துணைபோதலாக மாறும்.

இலங்கையின் ஆசிரிய வாண்மையைத் திட்டமிடும் பொழுதும், வாண்மைக்கல்விக் கலைத்திட்டத்தை வடிவமைக்கும் பொழுதும், மேற்கூறிய உலக நிலவரங்களைக் கருத்திலே கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் ஆசிரியவாண்மை இன்னமும் உறுதிநிலையை அடையவில்லை. இந்நாட்டின் ஆசிரிய ஆளணியினரின் அறிவுத்தரங்களில் மிக நீண்ட வீச்சுக் காணப்படுதல் வாண்மை நிலையிலே தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. அதாவது, பின்பட்டங்கள் பெற்றோரும், க.பொ.த உயர்தரத் தேர்வில் சாதாரண சித்தியடைந்து ஆசிரிய வாண்மைக்கல்வி பெறாதோரும் "ஆசிரியர்" என்ற வகைப்பாட்டிலே உள்ளடக்கப்பட்டிருத்தல் இந்நாட்டின் ஆசிரிய வாண்மையின் இயல்புக்கு அறை கூவலாகின்றது.

✠✠✠



# உயர்கல்வி வளர்ச்சி

இலங்கையின் உயர்கல்வி மரபு மிக நீண்டதாயினும் ஐரோப்பியர் வருகையோடு அது நவீன திசைமுகப்பட்டது. மகாவிகாரை, அபயகிரிவிகாரை, முதலியனவும், தமிழ் வாழும் புலங்களில் அமைந்திருந்த செழுங்கலை நியமங்களாகிய சங்கங்களும் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களாக அமைந்தன. ஆய்வுகளுடன் இணைந்த நுண்மதித் தொழிற்பாடுகளும், நூலாக்கங்களும், உறுபொருள் வாதங்களும் மரபுவழி உயர்கல்வி நிலையங்களிலே முன்னெடுக்கப்பட்டு வந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து நவீனமயப்பட்ட மேலைத்தேய உயர்கல்வியைப் பிரித்தானிய ஆட்சியினர் இலங்கையிலே அறிமுகம் செய்தனர். 1870 ஆம் ஆண்டுக்கும் 1893ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் பிரித்தானிய அரசினால் மருத்துவக் கல்லூரி, சட்டக்கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி

முதலியவை நிறுவப்பட்டன. இந்நிகழ்ச்சிகளுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்க மிசனெறிமார் வட்டுக்கோட்டையில் உயர்கல்விக்குரிய செமினெரியை அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து உயர்கல்வியை வளம்படுத்தும் நுண்மதியாளர்களின் பங்களிப்புகள் விரிவாக்கம் பெறத்தொடங்கின. சைமன்காசிச்செட்டி, ஜேம்ஸ் டிஅல்விஸ், ஈ.எப்.பெல்லாற் (Kelaart) டி.எம்.டி.செற் விக்கிரமசிங்கா, ஆனந்த குமாரசாமி, ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சைமன் டி.சில்வா, பியதாச சிறிசேன, டபிள்யு.எ.சில்வா, போல் ஈ பீறிஸ், சேர். பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் என்றவாறு நுண்மதியாளர் உயர்கல்வியை விரிவாக்கும் பல்வேறு பங்களிப்புக்களை மேற்கொண்டனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து மேலும் பல நுண்மதியாளர்கள் உயர்கல்வித் தளத்தை விரிவாக்கினர். சேனரத் பரணவிதாரண, குணபால மலவசேகர, லயனல் வென்ற், ஜஸ்ரின் தெரணியாகல, சுவாமி விபுலானந்தர், பிரான்சிஸ் கிற்ஸ்பெரி, ஹன்டி பேரின்பநாயகம், கலைப்புலவர் நவரத்தினம், தனிநாயகம் அடிகளார் முதலியோர் இவ்வகையிலே குறிப்பிடத்தக்கவர்கள். இங்கிலாந்தில் வளர்ச்சிபெற்ற மானிடவாதம், மற்றும் தாராண்மைவாதம், முதலியவற்றின் செல்வாக்குகளும், சோவியத் புரட்சியும் இந்திய விடுதலை இயக்கமும் இவர்களிடையே செல்வாக்குகளை ஏற்படுத்தின.

பிரித்தானிய அரசாங்கம் 1921ஆம் ஆண்டிலே பல்கலைக்கழகக் கல்லூரியை நிறுவியது. 1942ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்படலாயிற்று. ஆங்கிலக்கல்வி முறைமையின் ஊட்டம், பிரித்தானியாவில் வளர்ச்சிபெற்ற இடதுசாரி இயக்கங்கள் மற்றும் மார்க்சிய இயக்கங்கள் முதலியவை பற்றிய அறிகையும் கொண்ட சேர்.பொன் அருணாசலம் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கென பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தும் இயக்கத்தைச் செயற்படுத்தி வந்தார். தமிழர் பண்பாடும் கலைகளும் தழுவிய பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க முயன்ற சேர் பொன்.இராமநாதன் அவர்கள் அதற்கு முன்னோடியாக இணுவிலில்





இராமநாதன் கல்லூரியையும், திருநெல்வேலியில் பரமேஸ்வரக் கல்லூரியையும் அமைத்தார். அந்த இலட்சியத்தை மேலும் நவீனப்படுத்தி பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களும் பேராசிரியர் மயில்வாகனம் அவர்களும் தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தை ஆரம்பித்து திருகோணமலையில் அதற்குரிய நிலத்தையும் கொள்வனவு செய்தனர். பின்னர் தமிழர்களுக்குரிய பல்கலைக்கழகம் பாராளுமன்ற அரசியல் "இந்துப் பல்கலைக்கழகம்" "தமிழ்ப் பல்கலைக்கழகம்" என்ற முரண்பட்ட கருத்து மோதல்களைத் தோற்றம் பெறச்செய்தது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முந்திய காலகட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு சமூக விசைகள் நுண்மதி சார்ந்த வினைப்பாடுகள் பலவற்றை முன்னெடுப்பதற்குத் துணை நின்றன. அவ்வாறு இடம்பெற்ற சமூக விசைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- ☆ ஆங்கிலக்கல்வி முறைமையாலும், தொழில் முறைமைகளினாலும் உருவாக்கம் பெற்ற மத்தியதர வகுப்பினர் அரசியல் நடவடிக்கைகள், பண்பாட்டு நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் முதலியவற்றிலே இணைவும் ஈடுபாடும் காட்டத்தொடங்கியமை.
- ☆ இந்நாட்டின் மரபுவழிச் சமயங்களைப் பின்பற்றிய மக்கள் எதிர்கொண்ட அறைகூவல்களும், அந்தச் சமயங்கள் தம்மை நவீனப்படுத்திக்கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள்.
- ☆ கிறிஸ்தவ சமயத்துக்கு மாறுதல் வாயிலாக நிலைக்குத்தான சமூக அசைவியத்தை ஈட்டக்கூடிய வாய்ப்புகளின் விரிவாக்கம்
- ☆ பெருந்தோட்டப் பொருளாதார முறைமை ஏற்படுத்திய தாக்கங்கள்.
- ☆ ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும், பணச் சுற்றோட்டம் அதிகரிக்கத் தொடங்கியமையும், மக்களின் மரபுவழி நுகர்ச்சிப் பண்டங்களுக்குரிய பதிலீடுகள் வளர்ச்சி பெறத் தொடங்கியமையும்.

- ☆ பயிர்ச் செய்கையை அடிப்படையாகக் கொண்ட கிராமிய வாழ்வில் ஏற்படத் தொடங்கிய அதிர்வுகளும் பிறழ்ச்சிகளும்.
- ☆ இந்திய விடுதலைப் போராட்டங்கள் ஏற்படுத்திய தாக்கங்களும் தீண்டாமை தொடர்பாக ஏற்படத் தொடங்கிய மாற்றுப் புலக்காட்சிகளும்.
- ☆ அச்சுவடிவத் தொடர்பாடல் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்
- ☆ போக்குவரத்துக் கட்டமைப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக சமூகத்திலே பக்க நிலையான புவியியல் அசைவுகள் விரிவாக்கம் பெறத் தொடங்கியமை.
- ☆ பட்டினங்களின் வளர்ச்சியும் வர்த்தகக் கோலங்களின் விரிவாக்கமும், நவீனத்துவம் பற்றிய சிந்தனைகளைத் தூண்டியமை.

இவ்வாறாக இலங்கையின் மரபுவழிச் சமூகத்துக்கு விடுக்கப்பட்ட அறைகூவல்களும், அதிர்வுகளை ஏற்படுத்திய விசைகளும், கல்விச்செயற்பாடுகள் மற்றும் நுண்மதிச் செயற்பாடுகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. கிறீஸ்தவ மிசனெறிமாரும் சுதேச சமயத்தினரும் பாடசாலைக்கல்வி நடவடிக்கைகளின் விரிவாக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டலாயினர். ஆயின் அவர்களது கல்வி இலக்குகள் தத்தமது சமயங்களைக் குவியப்படுத்தும் வகையில் அமைந்தன. ஆயினும், அவர்களால் முன்னெடுக்கப்பட்ட எழுத்தறிவுப் பரவல் நடவடிக்கைகள் உயர்கல்வி விரிவாக்கத்துக்குரிய தளத்தை அமைந்தன. அதேவேளை இலங்கையின் உயர் உயர்கல்வி சமூகத்தின் தாழ்மட்டங்களை நோக்கிய அசைவியத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

இலங்கைப் பல்கலைக்கழகம் தோற்றம்பெற்று பருமட்டமாக முதல் இருபது ஆண்டுகள் வரை உருவாக்கம் பெற்ற ஆய்வறிவாளர்கள் அக்காலத்தின் ஆங்கில மொழிவழி வளர்ச்சிபெற்றிருந்த அறிவோடு ஊடாட்டங் கொண்டு ஆங்கிலமொழியிலும் தேசிய மொழிகளிலும் ஆழ்ந்த ஆய்வுகளை முன்னெடுத்தனர். வகை மாதிரியினராகப் பின்வருவோரைச் சுட்டிக்காட்டலாம்.





1. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை - கற்சாசனம்
2. பேராசிரியர் கே.என்.ஜயதிலகா - பௌத்த மெய்யியல்.
3. பேராசிரியர் சு.வித்தியானந்தன் - தமிழர் பண்பாடு
4. பேராசிரியர் சுகதபாலாடி சில்வா - சிங்கள மொழியியல்
5. பேராசிரியர் எஸ்ஜே.தம்பையா - மானிடவியல்
6. பேராசிரியர் ஜெயரத்தினம் எலியெசர் - கோட்பாட்டு இயற்பியல்
7. பேராசிரியர் அ.சின்னத்தம்பி - மகப்பேற்றியல்
8. பேராசிரியர் சி.குலரத்தினம் - புவியியல்
9. பேராசிரியர் ஞானலிங்கம் - இயற்பியல்
10. பேராசிரியர் பொன்னம்பெரும -உயிர் இரசாயனவியல்
11. பேராசிரியர் க.கைலாசபதி - தமிழர் சமூகவியல்
12. பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் - சம்ஸ்கிருதப் பண்பாட்டியல்.
13. பேராசிரியர் சி.அரசரத்தினம் - வரலாற்றியல்
14. பேராசிரியர். ஜெ.வில்சன் - அரச அறிவியல்
15. பேராசிரியர் ப.சந்திரசேகரம் - கல்வியியல்

மேற்குறிப்பிட்டவர்களைவிட மேலும் பல ஆய்வாளர்கள் தமது உயர்ஆய்வுப் பங்களிப்புக்களைச் செய்துள்ளனர் என்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது. நவீன பல்கலைக்கழகக் கல்வியிலே வற்புறுத்தப்படுகின்ற தரச்சிறப்பு அவர்களது தனித்துவமான பங்களிப்புக்களில் எழுச்சி கொண்டிருந்தது.

இலங்கையின் சுதந்திர காலத்திலிருந்து விரிவாக்கம் பெறத் தொடங்கிய இரண்டாம் நிலைக்கல்விக்குரிய தரச்சிறப்புமிக்க பட்டதாரிகளையும், வளர்ச்சியடையத் தொடங்கிய வர்த்தகம் மற்றும் நிருவாகத்துக்குரிய பட்டதாரிகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரிய வாண்மையினரையும், மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்களையும், அரசியல் தலைவர்களையும்

இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கத் தொடங்கியது. ஆயின் இந்த அனுகூலங்களை மத்திய தரவர்க்கத்தினரே பெருமளவில் அனுபவிக்கலாயினர். இலங்கையின் உத்தியோகத்தர்களது பிள்ளைகளும், நிலவுடைமை மேலோங்கியோர் மற்றும் வர்த்தகங்களில் ஈடுபட்டோர் பிள்ளைகளுமே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியின் அனுகூலங்களை முதலில் அனுபவித்தனர். இக்காலப் பகுதி "மத்திய தர வகுப்பினருக்குரிய உயர்கல்விக் காலகட்டம்" என்ற வகையில் அமைந்திருந்தது. ஆங்கிலமே பல்கலைக்கழகக் கல்விமொழியாக அமைந்திருந்தமையால் சாமானியர்களின் பிள்ளைகளுக்குப் பல்கலைக்கழகக் கல்வி எட்டாத பொருளாகவே அமைந்திருந்தது.

அக்கால கட்டத்திலே இலங்கைப் பல்கலைக்கழகத்திலே பின்பற்றப்பட்ட பண்பாட்டுக் கோலங்கள் ஆங்கிலப் பண்பாட்டை மீள வலியுறுத்தும் வகையிலே கட்டமைப்புச் செய்யப்பட்டன. உணவு, உடை, பழக்கவழக்கம், உரையாடல் முதலியவை ஆங்கில மரபுகளை இந்நாட்டில் மீளாக்கம் செய்வதாகவே அமைக்கப் பெற்றன. இது ஒரு வகையில் பண்பாட்டு நிலைப்பட்ட அந்நியமயப்பாட்டைப் பெரும்பாலான பட்டதாரிகளிடத்தே ஏற்படுத்தியது.

தேசிய மொழிகள் பல்கலைக்கழகங்களின் கலைபீடங்களின் கல்வி மொழியாகியமை சமூக நிலைப்பட்ட பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தலாயிற்று. சமூக நிரலமைப்பின் தாழ்நிலைகளில் இருந்தோரும் உயர்கல்வியைப் பெறும்வாய்ப்பைப் பெற்றதுடன் உயர் பதவிகளைப் பெறக்கூடிய அனுகூலங்களைப் பெற்றனர். சமூக அனுகூலங்களைப் பெற்றனர். சமூக விளிம்பு நிலையில் வாழ்ந்தோர் இலங்கை நிருவாக சேவையில் இடம்பெற்றனர். பட்டதாரிகளுக்குரிய உயர் பதவிகளை அவர்கள் பெறத்தொடங்கியமை வம்ச நிலைப்பட்ட தொழில்களில் இருந்து பிரிந்து செல்லும் அசைவியத்தை ஏற்பட்டது. ஆயினும், இந்த நிகழ்ச்சிகள் சமூகத்தின் அடிநிலை மக்களை ஒட்டுமொத்தமாக மேலெழச்செய்யும் நடவடிக்கையாக அமையாது "அங்கொன்றும் இங்கொன்றுமாக" நிகழ்ந்த அசைவியமாகவே அமைந்தது. இது ஒருவகையில் கல்வியால் நிகழ்த்தப்படும் அசைவியத்தின் மட்டுப்பாட்டினையே வெளிப்படுத்துகின்றது.





பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றதாய் மொழிக்கல்விச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க கல்வி நடவடிக்கைகளையும் கல்வி விளைவுகளையும் ஏற்படுத்தின.

- ☆ உயர்கல்வியில், சிறப்பாக சமூக விஞ்ஞானத் துறைக்கும் சமூகத்துக்குமிடையே காணப்பட்ட இடைவெளி சுருக்கமடையத் தொடங்கியது.
- ☆ கிராமங்கள் மற்றும் பிரதேச அலகுகள் தொடர்பான ஆய்வுகளும் கணிப்பீடுகளும் வளர்ச்சியடையலாயின.
- ☆ கிராமங்களில் வாழ்ந்த ஆய்வறிவாளரும் கலைஞர்களும் ஆய்வுகளின் வழியாக வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படலாயின.
- ☆ கிராமிய உற்பத்தித் துறைகளிலே காணப்பட்ட பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்படலாயின.
- ☆ முன்னர் இங்கில்லாந்தைக் குவியப்படுத்திய கல்விச் செயற்பாடுகள் இலங்கையைக் குவியப்படுத்தும் கல்விச் செயற்பாடுகளாக நிலைமாற்றம் பெறத்தொடங்கின.
- ☆ தாய்மொழி வாயிலாக உயர்கல்வி கற்கத் தொடங்கியவர்கள் கலை இலக்கிய ஆக்கங்களிலே தீவிர ஈடுபாடு காட்டலாயினர். பேராசிரியர். சு.வித்தியானந்தன் மற்றும் பேராசிரியர் க.கைலாசபதி ஆகியோர் தமிழ் மொழிவழியான உயர்கல்வி கற்போருக்கு இத்துறையில் அறிவாற்றுனராக (Mentor) விளங்கினர். சிங்கள மொழிவழி உயர்கல்வி கற்றோருக்கு பேராசிரியர் சரத்சந்திரா மற்றும் தர்மசிறி பண்டாரநாயக முதலியோர் அறிவாற்றுனராக விளங்கினர்.
- ☆ தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் உயர் நிலையான ஆய்வேடுகள் வெளிவரத் தொடங்கின.
- ☆ நவீன சமூக விஞ்ஞானங்களைத் தேசிய மொழிகளில் எடுத்துக் கூறத்தக்க வகையிலே புதிய கலைச்சொல்லாக்கங்கள் இடம்பெறத் தொடங்கின.
- ☆ தேசிய மொழிவழிப்பட்ட தொடர்பாடல் மற்றும் வாசிப்புப் பழக்கம் முதலியவை வளர்ச்சி பெறலாயின.

☆ தேசிய மொழிகளிலே ஆய்வரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் இடம்பெறத் தொடங்கின.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய நிகழ்ச்சியாக இன அடிப்படையிலான தரப்படுத்தல் அல்லது கோட்டாமுறை அமைந்தது. தமிழ் இளைஞர்களைக் கொதிப்புக்கு உள்ளாக்கி அவர்களின் நடத்தைகளிலே தீவிர மாற்றங்களை ஏற்படுத்தியது. இலங்கையின் ஆரம்பம் மற்றும் இடைக்கல்விக் கட்டமைப்பு வளர்ச்சியுற்ற அளவுக்குப் பல்கலைக்கழகக்கல்வி வளர்த்தெடுக்கப்படாமையை ஆழ்ந்துநோக்கி உயர்கல்வி விரிவாக்கத்திலே கவனம் செலுத்தாது, தமிழ் இளைஞர்களுக்கு எதிரான உயர்கல்வி தெரிவுமுறையைப் பயன்படுத்தியமை நாட்டின் நலனைக் கருத்திற் கொள்ளாத குறுகிய அரசியல் நடவடிக்கையாக அமைந்தது. இன்றுவரை பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரித்த அளவுக்கு நுழைவுத் தேர்விலே தகுதி பெறுவோரை உள்வாங்கும் நடவடிக்கைகள் பெருமளவில் விரிவாக்கம் பெறாதிருத்தல் உயர்கல்வியில் நெருக்கடிகளை தொடர்ந்து கொதிநிலைக்கு உட்படுத்தி வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப்பல்கலைக்கழகம் மற்றும் தென் - கிழக்குப் பல்கலைக்கழகம் முதலியவற்றின் உருவாக்கம் இலங்கையின் உயர்கல்வியிலே மேலும் பலபரிமாணங்களைத் தோற்றுவித்தது. தமிழர்களும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமியர்களும், தமது பண்பாடுகளை அடியொற்றிய உயர் நிலையான ஆய்வுகளை முன்னெடுப்பதற்கும், வட - கிழக்குப் பிரதேசங்களைக் குவியப்படுத்தி இயற்கை வளம், பொருண்மிய வளம், முதலாம் துறைகளிலே மேம்பாடுகளை ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்புக்களும் கட்டமைப்புக்களும் விரிவடையலாயின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட பிரதேச அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள், பொருண்மியத்துறையில் பேராசிரியர் ந.பாலகிருஷ்ணன் மற்றும் வி.நித்தியானந்தன் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகள், உடல்நல மேம்பாட்டுத் துறையில் பேராசிரியர் நந்தியின் ஆய்வுகள், பிரதேச நாடகம் அரங்கியல் துறையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு மற்றும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகள், பிரதேச பிரயோக மொழியியலில் பேராசிரியர் எஸ்.சுசீந்திரராசா, பேராசிரியர் ஆ.சண்முகதாஸ், மற்றும் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகள், பிரதேச அழகியல் துறையில் பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா, பேராசிரியர் சபா.ஜெயராசா முதலியோர் மேற்கொண்ட ஆய்வுகள், வடபுலத்து வரலாறு மற்றும் தொல்லியல் துறைகளில் பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் எஸ்.பத்மநாதன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர்.ச.சத்தியசீலன், பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராசா, கலாநிதி இரகுபதி, பேராசிரியர் புஷ்பரட்ணம் முதலியோர் மேற்கொண்ட ஆய்வுகள், வடபுலத்து மூலிகை வளங்களை நவீன மருத்துவத் துறையில் பயன்படுத்துதல் தொடர்பாக பேராசிரியர் எஸ்.பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் முதலியோர் மேற்கொண்ட ஆய்வுகள், வடபுலத்து மீன்பிடி அபிவிருத்தி தொடர்பாக பேராசிரியர் சித்திரவடிவேல் மற்றும் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அவர்கள் முன்னெடுத்த ஆய்வுகள், வடபுலக்கல்வி அபிவிருத்தி தொடர்பாக பேராசிரியர் வ. ஆறுமுகம், பேராசிரியர் க.சின்னத்தம்பி, பேராசிரியர் சபா.ஜெயராசா, எம்.சின்னத்தம்பி, கலாநிதி த.கலாமணி, செல்வி சு.அருளானந்தம், கலாநிதி அ.சத்தியசீலன், கலாநிதி ஜெ.இராசநாயகம் முதலியோர் மேற்கொண்ட ஆய்வுகள் சமூகவியலில் திரு.ஜி.எம்.செபஸ்தியாம்பிள்ளை, பேராசிரியர் நா.சண்முகலிங்கம் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகள் என்றவாறு நீண்ட பட்டியலைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்து விவசாயபீடம், மருத்துவபீடம், கலைப்பீடம், வர்த்தக முகாமைத்துவபீடம், விஞ்ஞானபீடம், உயர்பட்டப் படிப்புக்கள்பீடம் முதலியவை பிரதேசஅபிவிருத்தி தொடர்பான ஆய்வுப்பங்களிப்புக்களைப் பல நிலைகளிலே மேற்கொண்டுள்ளன. கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களின் பீடங்கள் தத்தமது பிரதேசங்களின் வளங்கள் பற்றியும் அவற்றை மேம்படுத்துதல் தொடர்பாகவும் விரிவான ஆய்வு நடவடிக்கைகளை விரிவான ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுபவையாக இருந்-

தாலும், அதன் பயன்கள் பிரதேச ரீதியான சமத்துவத்தை உள்ளடக்கியதாகக் காணப்படவில்லை. திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதேச மத்திய நிலைய வளங்களில் ஒப்பீட்டளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மரபுவழியான பல்கலைக்கழக நுழைவுச் செயற்பாடுகளில் இருந்து வேறுபட்ட பரந்தளவு நுழைவுக்குத் திறந்த பல்கலைக்கழகம் வழிவகுத்தாலும் அந்த அனுகூலங்களை வசதியான குடும்பப் பின்னணியைக் கொண்ட மாணவர் அனுபவிக்குமளவுக்கு பிரதிகூலமெய்திய மாணவர்களால் அனுபவிக்க முடிவதில்லை. அவர்களை நோக்கி திறந்தபல்கலைக்கழகப் பாடநெறிகள் தொடர்பான தகவல்களும் குவியப்படுத்தப்படுதல் இல்லை.

இலங்கையின் மாகாணங்களை அடியொற்றிப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டமை பல்கலைக்கழக வரலாற்றில் மேலும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இது இடநிலையத்தை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கமாக மட்டுமே அமைந்துள்ளதாயினும், குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள் தொழிற்படும் மாகாணங்களிலுள்ள மாணவர்களுக்கு அப்பல்கலைக்கழகங்களிலே பயில்வதற்குரிய சிறப்பு அனுமதித்திட்டங்களோ கோட்டா முறைகளோ உருவாக்கப்படவில்லை.

இலங்கை உள்வாங்கிக் கொண்டிருக்கும் உலக மயமாக்கற் செயற்பாடு பல்கலைக்கழகக் கல்வியில் பரவலான செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் தமது இணைப்பு நிறுவனங்களை இலங்கையிலே திறக்கத் தொடங்கியுள்ளன. இந்நிகழ்ச்சியும் சமூகத்தில் அனுகூலமான நிலையில் இருப்போருக்கு, உயர்கல்வியில் மேலும் அனுகூலங்களையோ ஏற்படுத்தி வருகின்றன.

பல்கலைக்கழகங்கள் உயர்கல்வியை விற்றுப் பொருளீட்டல் வேண்டும் என்பதும், பல்தேசிய நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பாடநெறிகளை உருவாக்க வேண்டும் என்பதும் நவீன முதலாளிய சமூகத்தை மீள வலியுறுத்தும் நடவடிக்கைகளாகவேயுள்ளன.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியிலே பின்வரும் "போதாமைகளை" பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா சுட்டிக் காட்டியுள்ளார். (Senake Bandaranayake, 2007, 64-66)





- ☆ இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்கள், பொதுக் கல்வியூடாக தேவையான அனைத்து ஆற்றல்களையும் பெற்று வருவதில்லை. ஆக்க மலர்ச்சி, பகுப்பாய்வுத்திறன், எண்ணக்கரு வழிப்பட்ட சிந்தனைகள் தொடங்கும் முனைப்பு, நடைமுறை வாழ்க்கை தொடர்பான செய்முறை ஆற்றல்கள் முதலிய துறைகளில் தமது திறன்களை வெளிப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.
- ☆ ஆங்கில அறிவு போதுமானதாக இல்லாமையால் உலக அறிவுப் பரப்போடும் அறிவின் மூலாதாரங்களோடும் இணைந்துக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.
- ☆ நெட்டுருக்கற்றலும் (Rotelearning) பரீட்சை வழிப்பட்ட கல்விப்பண்பாடும் ஆக்கமலர்ச்சி, எண்ணக்கரு வழிப்பட்ட சிந்தனை, பகுப்பாயும்திறன், திறனாய்வு நோக்கு முதலியவற்றை மழுங்கடித்து விடுகின்றன.
- ☆ ஆற்றலுள்ளவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு கவர்ந்திழுக்க முடியாத நிலையும், உள்நாட்டுப் பயிற்சிகள் வெளிநாட்டுப் பயிற்சிகள் முதலியவற்றில் அவர்களைப் போதுமான அளவு ஈடுபடுத்த முடியாமலிருத்தலும், ஊக்குவிப்புக்கள் இன்மையும் பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன.
- ☆ வெறுமனே கடதாசிப் பட்டத்தையும் ஒருநேர்முகப் பரீட்சையையும் வைத்து விரிவுரையாளர்களைத் தெரிவு செய்யும் முறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

உயர்கல்விக்குரிய நிதிவழங்கல், இலங்கையின் மனித வளவிருத்தியைக் குவியப்படுத்தி மேற்கொள்ளப்படாது வர்த்தக நிறுவனங்களின் தேவையைக் கருத்திலே கொண்ட "விற்கப்படக்கூடிய" பட்டதாரிகளின் உருவாக்கத்தை முன்னெடுக்கப்படும் வகையில் வடிவமைக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடத்துப் பின்வரும் ஆற்றல்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்பொழுதுதான் இலங்கையின் சமூக பொருளாதார விருத்தியை முன்னெடுக்க முடியும்.

☆ விரிவுரைக் குறிப்புக்களை உள்வாங்கி ஒப்புவிக்கும் முறையை மாற்றியமைத்தல்.

☆ பட்டதாரிகளைச் சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாற்றுதல்.

☆ சுயநலத்தை வளர்க்கும் கல்விக் கட்டமைப்பைத் தகர்த்தல்.

☆ மாற்று வகையான சிந்தனைகளை ஊக்குவித்தல்.

☆ ஆக்கத்திறன்களையும் படைப்பாற்றல்களையும் வளர்த்தெடுத்தல்.

☆ ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலும், உலகமொழிகளிலும் தொடர்பாடல் ஆற்றல்களை வளர்த்தெடுத்தல்

☆ தகவல் தொழில்நுட்பத் தொடர்பாடல் ஆற்றல்களை முன்னேற்றம் பெறச் செய்தல்.

☆ உலகஅறிவு, பன்முகநுண்மதி, கணிதஅறிவு, சமூகஅறிவு, சமூகநீதி முதலியவற்றை மேம்படுத்துதல்.

☆ தொடர்ந்து கற்கும் ஆற்றலை மேம்படுத்துதல்.

☆ உலக மொழிகளில் தொடர்பு ஆற்றல்களை வளர்த்தல்.

பல்கலைக்கழகங்களின் மிக முக்கிய பணியாகக் கருதப்படுவது அவற்றின் ஆய்வுப் பரிமாணங்களாகும். சமூக விஞ்ஞானத் துறைகளில் புள்ளிவிபரவியல் ஆய்வுகளை முதன்மைப்படுத்தும் ஒற்றைப் பரிமாண அணுகுமுறை இலங்கையில் அதீத முக்கியத்துவப்படுத்தப்படுவதால், அடிப்படை ஆய்வுகள், கோட்பாட்டு ஆய்வுகள், புத்தாக்க ஆய்வுகள் முதலியவை புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. தோற்றப்பாடுகளை மட்டும் துல்லியமாக விளக்கும் ஆற்றலைக் கொண்ட புள்ளி விபரவியல் ஆய்வுகள் அதற்குமேல் எழுந்து பாய்ச்சல்கொள்ள முடியாத மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன.

அண்மைக்காலமாகப் பல்கலைக்கழக ஆய்வுகளில் வீழ்ச்சி நிலைகளே காணப்படுவதுடன், குறைந்ததரம் மேலோங்கியிருந்தலும் ஆய்வுப்பண்பாடு பலவீனமடைந்திருத்தலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (Senake Bandaranayake, 2007, p-56)





இலங்கையின் பல்கலைக்கழகக்கல்வி தொடர்பான திறனாய்வுகளும் மீளவாசிப்பும் ஆழ்ந்த கவன ஈர்ப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டியுள்ளன. தரவலியுறுத்தல்கள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றின் விளைவுகள் மந்தமாகவே உள்ளன.

உலகின் நவீன சவால்களுக்கும், இலங்கையின் சமகாலத்தைய நெருக்குவாரங்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய வகையில் பல்கலைக்கழகக் கல்வியை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

பட்டப்படிப்பின் பொருத்தப்பாட்டையும், தரத்தையும் முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொழிற்சந்தையை மட்டும் குவியப்படுத்தும் "ஒற்றைப்பரிமாண நோக்கு" பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவல்லது. பட்டதாரிகளை ஆற்றலுள்ளவர்களாக வளர்ப்பதைக்காட்டிலும் "விற்பனைப் பண்டமாக" மாற்றுதல் பல இடையூறுகளுக்கு வழி வகுக்கும்.

✠✠✠

# கல்வியியல் வரலாறும் திறனாய்வும்

கல்வியியல் வரலாறு வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாகவோ, தொடர்ச்சிகளாகவோ அமைவதில்லை. கல்வியியல் வரலாற்றை ஏனைய வரலாற்றுக் கூறுகளில் இருந்து தனித்துப் பிரித்து நோக்கவும் முடியாது. சமூக வளர்ச்சியில் எத்தனையோ நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தாலும் ஒரு சிலவே ஆவணப்படுத்தலுக்கு உட்பட்டிருக்கின்றன. இந்நிலையில் வரலாறு என்பது தெரிவின் (Selective) விளைவாக அமையும்பொழுது, பல்வேறு நிகழ்ச்சிகள் நழுவவிடப்பட்டும், தவறவிடப்பட்டும் அமைதல் குறிப்பிடத்தக்கது.

வரலாறு என்பது எழுதுவோரின் பொருள் கோடலுக்கு (Interpretation) உட்பட்டது. வரலாற்றாசிரியரின் கருத்தியலும் எடுகோள்களும் வரலாற்று எழுத்துருவிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்நிலையில் வரலாறு முற்றிலும் புறவயமான அணுகுமுறைக்கு உட்பட்டதென்று கூறமுடியாது. அதிகாரத்திலுள்ளோர் தமது தேவைகளின் பொருட்டு வரலாற்று





நிகழ்ச்சிகளை மறைத்தும் திரிபுபடுத்தியும் எழுதுதல் உலக நிகழ்ச்சிகளாக இடம்பெற்று வருகின்றன. இனத்துவ ஒடுக்கு முறைகள் நிலவும் நாடுகளில் வரலாற்று ஆக்கங்கள் ஒடுக்குமுறைக்குச் சாதகமான ஆவணங்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒடுக்குமுறைக்குரிய வலுவான கருவியாகக்கல்வி பயன்படுத்தப்படும் பொழுது கல்விவரலாறும் திரிபுபடுத்தப்பட்டே கூறப்படுகின்றது.

வரலாற்றுக் கல்வியின் வளர்ச்சியானது நிலைபேறுகொண்ட அரச வரலாற்றிலிருந்து சிறப்புத் துறைகளை நோக்கி வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. இவ்வகையில் சமூகவரலாறு, பண்பாட்டுவரலாறு, கல்விவரலாறு, இலக்கியவரலாறு, பொருளியல்வரலாறு, விஞ்ஞானவரலாறு, தொழில்நுட்பவரலாறு, மொழிவரலாறு, நிறுவனவரலாறு, தனியாள்வரலாறு முதலியவை படிமலர்ச்சி கொள்ளலாயின. அறிவுவளர்ச்சி குறிப்பிட்ட வரலாற்றுத் துறைகளில் மேலும் நுண்ணிய கிளைபரப்பல்களை ஏற்படுத்தி வருகின்றது. எடுத்துக்காட்டாக கல்விவரலாற்றாய்வின் வளர்ச்சி கலைத்திட்டவரலாறு, ஆசிரியத்துவவரலாறு, கல்விஉளவியல் வரலாறு, கணிப்பீட்டியல்வரலாறு, கல்வித்தொழில்நுட்பவியல் வரலாறு, கல்விக்கோட்பாட்டுவரலாறு, கல்விமுகாமைத்துவ வரலாறு, பாடநூல்வரலாறு என்றவாறு பரவலாக்கமும், ஆழமாக்கலும் பெற்றுவரும் நிலையை உருவாக்கியுள்ளது.

அறத்துக்கும் மறத்துக்குமான போராட்டங்களே வரலாற்றிலே மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. என்பது தமிழ் மரபிலும் இந்திய மரபிலும் வழிமொழியப்பட்டு வருகின்றது.

வரலாற்றில் எவ்வாறு மாற்றங்கள் நிகழ்கின்றன என்ற இயக்கவிசையை ஆராய்ந்தவர்களுள் ஜேர்மனிய மெய்யியலாளராகிய கெகல் *(1770 -1831)* சிறப்பிடம் பெறுகின்றார். வரலாற்றில் மாற்றங்களையும், முகிழ்ப்புக்களையும் ஏற்படுத்தும் இயக்கப் பொருளுக்கு இயங்கியல் (Dialetic) என்று பெயரிட்டார். ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவாக்கும் குறிப்பிட்ட நிலையானது "புனைகோள்" (Thesis) என்றும் அதற்கு எதிரான தெறிப்பு "எதிர்ப்புனைகோள்" என்றும் அவை இரண்டினதும் இணக்கப்பாட்டு நிலையில் இரண்டையும் தழுவிய இணைதொகுப்பு (Synthesis) நிகழ்வதாகவும் குறிப்பிட்ட

கெகல் வரலாற்று மாற்றம் பற்றிக் கூறிய கருத்தை மேலும் செம்மைப்படுத்தி கார்ல்மார்க்ஸ் தமது ஆய்வுகளிலே பயன்படுத்தினார். சமூகத்தின் அடித்தளமாகப் பொருண்மிய நிலை அமைந்திருப்பதைத் தெளிவுபடுத்தி மார்க்ஸ் வரலாற்று மாற்றத்தை விளக்கலானார். சமூக வாழ்க்கைக்குப் பொருண்மிய நிலையே அடிப்படையாகின்றது. உற்பத்தி முறைமையை அடியொற்றி குறித்த சமூகத்தின் பொருண்மிய நிலையை அறிந்துகொள்ளலாம். உற்பத்தி முறைமையை அடியொற்றி சமூக உறவுகளும், சமூக ஆதிக்கவலுவும் இடம்பெறுகின்றன.

அந்த முறைமையானது தன்மை அழித்துக்கொள்வதற்குரிய வலுவான முரண்பாடுகளையும் கொண்டதாக இருக்கும். உற்பத்தி முறைமையை அடியொற்றி உருவாகும், வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டமும், மோதல்களும் வரலாற்றை மாற்றியமைக்கும் விசைகளாகத் தொழிற்படுதலை மார்க்ஸ் விரிவாக விளக்கினார்.

ஐரோப்பாவில் வளர்ச்சிபெறத் தொடங்கிய பின்னவீனத்துவ சிந்தனைகள் வரலாற்று எழுத்தாக்கங்கள் தொடர்பான பின்வரும் கருத்தாடல்களை எழுப்பி வருகின்றன.

☆ அதீத நிலையில் எண்ணக்கருக்களை உருவாக்குதல், வரலாற்றின் பன்முகப் பாங்குகளை நோக்காது திரட்டிய நோக்கை முன்வைத்தல் முதலியவை இடம்பெற்று வருகின்றன.

☆ வரலாற்றுக்கால கட்டங்களைத் திட்டவட்டமாக வரையறைப்படுத்துவதில் இடம்பெறும் அபத்தங்கள்.

☆ உலகம் பற்றிய ஒற்றைப் பரிமாண நோக்கில் வரலாற்றுக் காலகட்டங்களை வரையறுத்தல்.

☆ பெரும் பண்பாடுகள் சிறு பண்பாடுகள் என்று பண்பாடுகளைப் பிரித்து வரையறை செய்து மேலாதிக்கத்துக்குத் துணைபோதல்.

☆ வரலாற்று மூலகங்களிடையே வேறுபாடு காட்டும் அபத்தங்கள்.

☆ அரசியல் வரலாற்றையும் சமூக வரலாற்றையும் பொருத்தமற்ற வேறுபாடுகளுக்கு உட்படுத்துதல்.





7. கலைப் படைப்புக்களை முழுமையானதாகவும், நித்தியமானதாகவும் கொள்ளுதல்.

8. வரலாற்றாசிரியரைக் கருத்துக்களின் ஏகபிதாவாகக் கொள்ளுதல்.

9. வரலாற்றாசிரியர்களால் உருவாக்கப்படும் பெரும் உரையங்கள் (Grand Narratives) அல்லது பெருங்கதையாடல்கள், கூட்டு மொத்தப்படுத்தலாகவும் எதேச்சாதிகாரப் பண்புடையதாகவும் காணப்படுதல்.

10. வரலாறு என்பது மொழி விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு கட்டுமானம் செய்யப்படுதல்.

காலங்காலமாக நிகழ்ந்து வந்த வரலாற்று எழுத்தாக்கங்கள் மேலாதிக்கத்துக்குச் சார்பான புனைவுகளாகவே இருந்து வந்துள்ளன. எல்லை நிலையில் உள்ளோரை ஓரங்கட்டுவதற்கும் வரலாற்றுப் புனைவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரலாறே அதிகாரத்தின் வடிவமாக உள்ளதென்பது பின்கட்டமைப்பு வாதத்தின் முன்மொழிவு.

வரலாறு பற்றிய அறிகையில் பின்னவீனத்துவமும், மார்க்சியமும் எழுப்பியுள்ள வினாக்களும், விமர்சனங்களும் உலகில் மாற்று வகையான சிந்தனைகளைத் தூண்டியுள்ளன. இந்நிலையில் இலங்கையின் சமூக வரலாற்றை எழுதியோர் மேற்கொண்ட ஊகங்கள் பல்வேறு திறனாய்வுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளன.

ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே கல்வி தொடர்பான வரலாற்று ஆவணங்கள் ஒழுங்கமைந்த முறையிலே கிடைக்கப் பெறுகின்றனவாயினும், அவை பெரும்பாலும் எண்ணளவு பெறுமானங்களைக் காட்டுகின்றனவேயன்று பண்பு நிலையான இயல்புகளைத் துல்லியமாக வெளிப்படுத்தவில்லை.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின்கல்வி வரலாற்றையும், கல்வி நிலையையும் பற்றிய எழுத்தாக்கங்களை மேற்கொள்ளும் பொழுது மாறிகள் (Variables) உரிய முறையில் எடுத்தாளப்படாத மட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. கல்விக்குரிய வளங்களின் வழங்களை ஒப்புநோக்காது "பெறுபேறு" என்ற ஒற்றை மாறியை

வைத்துக்கொண்டு குறித்த பிரதேசம் தாழ்ந்து விட்டது என்று கூறுதல் பொருத்தமற்றதும், தவறானதுமாகும்.

ஒற்றைப் பரிமாணம் அல்லது ஒற்றை மாறியைக் கொண்டு கல்வி பற்றிய தீர்மானங்களையும், முடிவுகளையும், விழுமியங்களையும் உருவாக்கிக்கொள்ளும் அபத்தமான நிலையும் இலங்கையிலே காணப்படுகின்றது. இலங்கையில் மூன்று மொழிகளில் பொதுப்பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. தமிழ், சிங்கள, ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலே பரீட்சைகள் ஒரே வினாத்தாளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டாலும், பெறுபேறுகளைச் சமநோக்கில் ஒப்பீடு செய்ய முடியாதுள்ளது. ஏனெனில், மூன்று மொழிகளுக்குமுரிய கல்வி வளங்களிலே ஒப்பான நிலை காணப்படுகின்றது என்று கூறமுடியாது. இந்நிலையிலே கல்வி வரலாற்றை எழுதும் பொழுது பல்வேறு பரிமாணங்களையும் தொகுத்து நோக்குதலே அறிவு நேர்மைக்கு வழிவகுக்கும் செயற்பாடாகின்றது என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

✠✠✠



# உசாத்துணை


1. Administration Report of the Director of Education , Colombo Government Printer.
2. Arasaratnam, S. (1988) Dutch. Power in Ceylon, New Delhi, Navarang.
3. Bridge, J.J.R (1911) Secondary English Schools in Ceylon - Report.
4. Ceylon Census Reports, Colombo Government Printer.
5. Ceylon Sersional Papers, Colombo Government Printer.
6. Cumarasamy, Ananda K. (1956) Medival Singalese Art, New York, Pantheon Books.
7. Geiger, W. (2000) The Mahavansa The Great Chronicle of Ceylon - (Reprint) New Delhi Asian Educational Services.
8. Mettananda, L.H (2006) The Theory and Practice of Education, Kotte, Kamaladen Ediriwira.
9. Muthukistna, S.R. (1853) Past and Present Educational System of Ceylon, Edinburgh, Maclachlan and stewart.
10. Pathmanathan, S. (1978) Kingdom of Jaffna, Part-1, Colombo, Arul M.Rajendram.

11. Perera, N.M (1944) The Case for Free Education, Colombo, Ola Book Co.

12. Rasanayagam, C. (1993) Ancient Jaffna, (Reprint) New Delhi Asian Educational Services.

13. Ruberu, Ranjit (1962) Education in Colorial Ceylon, Kandy, Kandy Printers.

14. Sabaratnam, N. (1961) National Education, The Concept and Content, Jaffna, Shanmuganathan Press.

15. Senake, Bandaranayake, (2007) The University of the Future, kandy, kandy Books.

16. Silva, K.M.de (1981) A History of Sri Lanka, New Delhi Oxford University Press.

17. *இலங்கை கல்வி கலாசார அமைச்சு, (1969) இலங்கையிற் கல்வி, கொழும்பு அரசாங்க அச்சகம்.*

18. *சந்திரசேகரன், சோ.(1999) மலையகக்கல்வி சில சிந்தனைகள், கொழும்பு, கவிதா பதிப்பகம்.*

19. *ஜெயராசா, சபா, (2001) தமிழர் உளவியலும் கல்வியும், நல்லூர், போஸ்கோ பதிப்பகம்.*

20. *ஜெயராசா, சபா. (2003) அழகியற்கல்வி, யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி வெளியீடு.*

✠✠✠



பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா தமிழில் “கல்வியியல்” துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது “புலமைமரபு” எத்தகையது என்பதைத் தனித்துத் துல்லியமாக வெளிப்படுத்தும். மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது. தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது.

இன்றுவரை கல்வி உலகில் முனைவர் சபா. ஜெயராசா உயிர்ப்புமிகு புலமையாளராகவே திகழ்கின்றார்.

ISBN 978-955-1857-09-7

BOOK LAB
Rs.

பதிப்பகம்